டிசம்பர் 16—22 28 பக்கங்கள் ரூபா 14.00

16 DEC 2001
16 DEC 2001

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## தமிழின இறைமைக்கான ஈகை நினைவு கூரல்

—மட்டக்களப்பு மாவீரர் தினம்



## பகைமை கொப்பளிக்க பதவிப் பிரமாணம்

—கொழும்பு

பொதுத்தேர்தலுக்குப் பின்னர் குடாநாட்டு மக்களிடையே காணப்பட்ட உற்சாகமும், புத்துணர்ச்சியும் படிப்படியாகக் குறைந்து வருகின்றன.

நாட்டில் ஆட்சி மாறிய போதிலும் வாழ்க்கை நிலைமையில் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்கமுடியாதவர்களாக— அரசியல் எதிர்காலம் குறித்த நிச்சயமற்ற நம்பிக்கை கொண்டவர்களாக குடாநாட்டுமக்கள் இன்னமும் உள்ளனர்.

எரிபொருள், மின்சாரம் என்று ஏகப்பட்ட அன்றாடப்பிரச்சினைகளால் குடாநாட்டுமக்கள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

குடாநாட்டுமக்களுக்கான எரிபொருள் விநியோகம் சீர் குலைந்துபோய் இருக்கிறது.

அதனால் மின்விநியோகமும் ஸ்தம்பித்திருக்கிறது.

காணாமற்போன பல நூற்றுக்கணக்கானவர்க

இழந்துவிட்ட பின்னர்—

வாக்குரிமை பறிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கும் விடயத்தில் தனது சகபாடிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நலன்களைக் கருத்தில் கொண்டு ஐ.தே.கவும், அதன் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க பாராமுகமாக நடந்து கொண்டபோது புதிய அரசு மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையில் முதல் அடிவிழுந்தது.

அது போக—

தனது கட்சிக்கு — மூன்று நான்கு தசாப்த காலத்துக்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத்தந்த யாழ்.மாவட்ட உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கு வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு விடயத்தில் முக்கியமான ஒரு பொறுப்பை (மறைமுக அர்த்தத்தில் அமைச்சை) வழங்குவேன் என்று தேர்தல் பரப்புரையின்

தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்புகொண்டு வற்புறுத்தினார்கள் என்று ஐ.தே.கட்சி உயர் பீடத்தில் இருந்து கசியவிடப்பட்ட தகவல் குடாநாட்டு மக்களிடையே பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதை பரவலாக உணர முடிகின்றது.

தேர்தலில் பெரும் வெற்றியீட்டிய போதிலும் ஆட்சி அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்த முடியாது போனதால் விரக்தியுற்ற நிலையில் கூட்டமைப்பைச் சேர்ந்த இவ்விரு கட்சிகளின் மூத்த தலைவர்கள் இருவர் மகேஸ்வரனுக்கு அமைச்சுப் பொறுப்புக் கிடைப்பதை தடுத்துவிட அவரது காலை வாரிவிட முயற்சிக்கின்றார்கள் என்றும்—

மகேஸ்வரனுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட்டால் வடக்கில் அவரது செல்வாக்கு

# ஆட்சி மாறினாலும் குடாநாட்டில் நிலைமை மாறவில்லை




## காணாமற்போனோர் உறவினர் பேரணி

ளின் உறவினர்கள் யாழ் நகரில் பேரணி ஒன்றை நடத்தி தங்களுக்கு நியாயம் கிடைக்குமா? என்று மீண்டும் ஒரு தடவை கேட்டிருக்கின்றனர்.

தேர்தல் முடிவடைந்து புதிய அரசு ஆட்சிப் பீடமேறிய பிறகு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதல் மக்கள் பேரணி இது.

மக்களைச் சூழ்ந்துள்ள இதுபோன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டாத நிலையிலும்—

இந்தப்பிரச்சினைகளுக்கு எல்லாம் அடிப்படைக் காரணமான தேசியப் பிரச்சினைக்கு முடிவான தீர்வு ஒன்றைக் கொண்டு வந்துவிடவேண்டும் என்ற பேரவாவுடனும் நாட்டு மக்களுடன் சேர்ந்து குடாநாட்டு மக்களும் தேர்தலில் வாக்களித்திருப்பதை முடிவுகள் தெட்டத்தெளிவாகக் காட்டிவிட்டன.

நாட்டின் பெரும்பாலான மக்களைப் போலவே குடாநாட்டு மக்களும் ஒரு மாற்றத்துக்காகவே இந்தமுறை ஆர்வத்துடன் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முன்வந்தனர்.

விடுதலைப்புலிகளின் கரங்களைப் பலப்படுத்தவும், தமிழ்விரோத சக்திகளைத் தோற்கடிக்கவும் அவர்கள் வாக்குகள் மூலம் முயன்றிருப்பது தெரிகிறது. இது தங்கள் தலைவிதியைத் தீர்மானிக்கும் யுத்தத்துக்கு முடிவு கட்டவும், அதன் மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை எட்டவும் விடுதலைப்புலிகளுக்கும் புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அரசுக்கும் குடாநாட்டுத் தமிழர்கள் வழங்கிய ஆணை என்பதும் சர்வநிச்சயம்.

ஆனால்—

தேர்தல் முடிந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இருவாரங்களில் நிகழ்ந்துள்ள — நிகழ்ந்து கொண்டிருக்கின்ற— பல சம்பவங்கள் வாக்களித்த மக்களின் நம்பிக்கை மீது பலத்த அடியாக விழுந்துகொண்டிருக்கிறது.

இராணுவ அதிகாரிகளின் திட்டமிட்ட செயலால் — ஜனநாயக விரோத நடவடிக்கையால் வன்னியிலும், மட்டக்களப்பிலும் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வாக்களிக்க முடியாமற்போய்—

அதன் மூலம் வன்னியிலும் மட்டக்களப்பிலும் ஆகக் குறைந்தது ஒவ்வொரு உறுப்பினரையும் தேசியப்பட்டியலில் மேலும் ஓர் உறுப்பினரையும் தெரிவு செய்யும் வாய்ப்பை தமிழர் தரப்பு

போது அறிக்கைவிட்டு அதன் மூலம் லாபம் தேடிய ரணில் விக்கிரமசிங்க புதிய அமைச்சரவையில் வடக்கு அபிவிருத்தி சம்பந்தமான அமைச்சைத் தவிர்த்துவிட்டு புனர்வாழ்வு அமைச்சை தனது கட்சியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் ஒருவருக்கு வழங்கிய போது—

ஐ.தே.க அவ்வாறு முடிவு செய்ததற்கு தமிழ்க்கட்சி கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு முக்கிய கட்சிகள் திரைமறைவில் செய்த சதியே காரணம் என்று ரணிலின் தலைமைப்பீடம் 'பெரும் குண்டு' ஒன்றைத் தூக்கிப் போட்டபோது—

புதிய அரசு மீதான குடாநாட்டுத் தமிழர்களின் நம்பிக்கையில் இரண்டாவது பலமான அடி வீழ்ந்தது.

ஈழத்தமிழர்களின் ஒட்டுமொத்த அபிலாஷையைப்



பிரதிபலிக்கும் பெரிய சக்தியாக தமிழர் கூட்டமைப்பைத் தமிழ்மக்கள் சுமார் இரண்டு தசாப்த காலத்துக்குப் பிறகு உருவாக்கிவிட்டிருக்கின்றனர்.

இந்த ஒருமைப்பாடு, ஒற்றுமைப்பாடு கண்டு பேரினவாதமே திகைத்துப் போய் நிற்கும் பின்னணியில்

தமிழர் சக்திகளுகிடையே பிளவை ஏற்படுத்தும்— தமிழர் சக்திகளைப் பிரித்தாளும்— நோக்குடனேயே அமைச்சுப் பொறுப்பு விடயத்தை ரணில் கையாண்டிருக்கிறார்கள் என குடாநாட்டவர்கள் நம்புகின்றனர்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சை மகேஸ்வரனுக்குக் கொடுக்கக் கூடாது என்று ரெலோ, தமிழர்விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் மூத்த

பெருகிவிடும் அவர் தங்களுக்குச் சவாலாக உருவெடுத்துவிடுவார் என்று அஞ்சிய இந்த இரு தலைவர்களும் ரணில் விக்கிரம சிங்காவுடன் தொடர்புகொண்டு மகேஸ்வரனுக்கு வடக்கு அபிவிருத்தி அமைச்சுப் பொறுப்பை வழங்கவேண்டாம் என்று கேட்டுள்ளனர் என்றும்— ஐ.தே.க வட்டாரங்கள் பிரசாரம் செய்து வருகின்றன.

ஆனால் இந்தப் பிரசாரம் அபாண்டமான குற்றச் சாட்டு என்று ரெலோ மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் மறுத்திருக்கின்றனர்.

கூட்டமைப்புக் கட்சித் தலைவர்களிடையே பிளவை ஏற்படுத்தி தமிழர் அரசியல் சக்திகளைப் பலவீனப்படுத்த திரை மறைவில் நடக்கும் சதி இது என்று குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தமிழர் போராட்ட சக்திகளுக்கு ஆதரவாக் கடந்த காலங்களில் குரல் கொடுத்ததன் மூலம் சிங்களப் பேரினவாதக் கட்சி ஒன்றைச் சார்ந்து நிற்பவர் என்ற நிலைமைக்கு மத்தியிலும் கூட தமிழ் மக்களிடையே குறுகிய காலத்தில் அரசியல் செல்வாக்குப் பெற்றவர் மகேஸ்வரன்.

யுத்தத்தால் பேரழிவுகளைச் சந்தித்துள்ள வட பகுதியைப் புனரமைக்கும் — அபிவிருத்தி செய்யும் — பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டால் அதனால் பெரிதும் மகிழ்ச்சியடைவது குடாநாட்டுத் தமிழர்களாகவே இருப்பர்.

ஆனால் இந்த விடயத்திலும்— இதுபோன்று எதிர்காலத்தில் ரணில் கையாளப்போகும் தமிழ் மக்களின் விவகாரங்களிலும்— அவர் எடுக்கப்போகும் முடிவுகள் தமிழர் சக்திகளான தமிழ்க்கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் அல்லது தமிழர்களைப் பிரித்து ஆளும் நோக்கம் கொண்ட செயற்பாடுகளாக இருக்கக்கூடாது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு— நியாயமான அபிலாஷைகளுக்கு— தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நடு நிலைமையோடு சகல தரப்புகளும் ஏற்கக்கூடிய ஒரு தீர்வைத் தரக்கூடியவர் என்று ரணில் விக்கிரமசிங்க மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை அவரது இந்த ஆரம்ப நடவடிக்கைகள் மூலம் வீண்போகத் தொடங்கியிருக்கிறது என்பது தெரிகிறது.

— வலிகாமத்தான்

# பின்லேடனால் பணம் சம்பாதிக்கும் கம்பனிகள்

தானுண்டு தன் பாடுண்டு என்று நின்று கொண்டிருந்த உலக வர்த்தக மையக் கட்டத்தின் மீது ஒசாமா பின்லேடன் 2 விமானங்களை கொண்டுபோய் மோதினாலும் மோதினார். எல்லாம் தலை கீழாக மாறிவிட்டது.

பயங்கர வாதத்துக்குப் பாலூட்டி வளர்த்த நாடுகள் எல்லாம் இப்போது பயங்கர வாதியையும், பாம்பையும் ஒன்றாகக் கண்டால் முதலில் பயங்கரவாதியை அடி பிறகு தான் பாம்பை அடி என்ற நிலைக்கு வந்துவிட்டன.

இதில் அமெரிக்கா தான் வரிந்து கட்டிக் கொண்டு நிற்க— ஏனைய நாடுகளும் ஏதோ நாமும் எம்மால் முடிந்ததை செய்வோம் என ஒத்து ஊதிக் கொண்டிருக்கின்றன.

இந்த வரிசையில் கிடைக்கும் சிறிய இடைவெளியில் புகுந்து சில தனியார் கம்பனிகளும் விமானப் பாதுகாப்பு என்ற பெயரில் புதிய தயாரிப்புக்களை கண்டு பிடித்து பணம் சம்பாதிக்கக் கிளம்பி விட்டன.

கடந்த நவம்பர் இறுதியில் அமெரிக்க விமானப் போக்குவரத்துத் துறை சார்பாக நியூஜேர்சியில் மூன்றாவது வான் வெளிப் பாதுகாப்பு தொழில் நுட்ப மாநாடு நடைபெற்றது. அப்போது அங்கே வான் வெளி பாதுகாப்பு தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தும் கண்காட்சி ஒன்றும் நடைபெற்றது.

அதில் பல்வேறு தனியார் கம்பனிகளும் கலந்து கொண்டன. அந்த நிறுவனங்கள் தங்கள் கண்டு பிடிப்புகளை அங்கு காட்சிக்கு வைத்திருந்தன.

இவையெல்லாம் விமான பயணத்தின் போது தீவிரவாதிகளால் ஏற்படும் அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கான பொருட்களாகவே காணப்பட்டன.

அமெரிக்க நிறுவனமான ஜெனரல் எலக்ரிக் இன்க் என்ற நிறுவனம் அங்கே கஇஈ 2000 என்ற கருவியை காட்சிக்கு வைத்திருந்தது. வெடி பொருட்கள், நைட்ரோ கிளிசரின், கேசலின், மண்ணெண்ணெய் போன்ற ஏதாவது திரவத்துடன் கலந்து எடுத்துச் செல்லப்பட்டால் இந்தக் கருவி அவைகளை மணி அடித்துக் காட்டிக் கொடுத்து விடும்.

இந்த வெடி பொருட்களை கண்டவுடன் தலை ஆட்டிக் காட்டிக் கொடுக்கும் கருவியான கஇஈ 2000 என்ற கருவியின் விலை இலங்கை பெறுமதியில் 18 லட்சம் ரூபா வரை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு கருவியான ஐ—போர்ட்டல் 100 என்ற கருவியும் அங்கு வைக்கப்பட்டிருந்த கருவிகளில் பலரது கவனத்தையும் கவர்ந்தது.

விமானப் பயணியின் உடலை காந்தப் புலங்கள் மூலம் பரிசோதித்து உடலின் ஏதேனும் ஒரு பகுதியில் ஏதாவதொரு உலோகப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தால் உடனே அக்கருவி தகவல் தருமாம்.

இந்த கருவி ஏற்கனவே விமான நிலையங்களில் வைக்கப்பட்டிருக்கும் சோதனைக் கருவிகளைவிட, வேகமாவும் துல்லியமாகவும் பயணிகளைச் சோதனை செய்ய ஏற்றது என சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதன் விலை இலங்கை பெறுமதியில் 25 லட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்து வேர்ஜீனியாவில் இருந்து வந்த ஐ—டிக்கம் காப்பரேஷன் என்ற நிறுவனம் ஜெட்ஸ்ரீம்ஸ் என்ற கருவியை அறிமுகபடுத் தியிருக்கிறது. ஒவ்வொரு பயணியினதும் கருவிழியை ஆராய்ந்து — அந்த நபர் பற்றிய விவரங்களை கணனியின் டேட்டா பேஸிலிருந்து எடுத்துத் தருவதே இதன் வேலை ஆகும்.

சாதாரணமாகவே கைரேகையை போலவே கருவிழியும் ஒருவரை போல் வேறொருவருக்கு அமைவதில்லை. எனவே கருவிழி மூலம் குறிப்பிட்ட பயணியை அடையாளம் கண்டுகொள்ள இந்த ஜெட் ஸ்ரீம்ஸ் பேருதவியாக அமையுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விலை இன்னமும் அறிவிக்கப்படவில்லையாயினும்— லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் உடனடியாக இந்த ஜெட் ஸ்ரீம் கருவியை பயன்படுத்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு தரப்பிலிருந்தும் புதிய பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்க — இந்தியரான இந்தர் பால் சிங் பண்டாரி என்பவர் — விமானத் தாக்குதல்களையோ, அந்திரக்ஸ் பரப்புவதையோ திட்டமிடும் தீவிரவாதிகள் இன்ரநெட் மூலம் தகவல்களை பரிமாறினால் அதனையும் கண்டு பிடிக்கக் கூடிய விதத்தில் மெயில் இன் சாப்ட்வேர் ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார். இதன் மூலம் தீவிரவாதிகளின் ரகசிய செயல்பாடுகளை கண்டு பிடிக்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறாக தீவிரவாதத்தை எதிர்த்துப் போரிட பலரும் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட வர்த்தகர்கள் லாபம் தரும் தொழிலாகவும் தீவிரவாதத் தடுப்பை மாற்றி விட்டுள்ளனர்.

— இராஜ்

# தமிழ்ச்செல்வனின் கருத்தை கவனத்தில் கொள்ளவேண்டும்

## ஈழத் தமிழ் மண் பறிபோகிறதே என்று ஈழவேந்தன் கவலை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கையை ஈழவேந்தன் வரவேற்கிறார்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அரசுக்கு அறிவுறுத்தலாக சில கருத்துக்களைச் சமீபத்தில் தெரிவித்திருந்தார். அவற்றை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்கிறார் மா.க.ஈழவேந்தன்.

உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டும். படை வெளியேற வேண்டும். மீண்டும் தமிழ் மக்கள் தமிழ் மண்ணில் எவ்வித அச்சுறுத்தலுக்கும் இடமின்றி குடியேறும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இந்த மூன்று விடயங்களையும் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியிருக்கிறார்.

அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்களக் கட்சிகள் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றி நிமிடத்துக்கு நிமிடம் எம் மண்ணைப் பறித்துக் கொண்டிருக்கின்றன.

இந்நிலப்பறிப்பால் திருகோணமலை மாவட்டம் மிக ஆபத்துக்குள்ளாகியிருக்கிறது.

1983இல் ஏற்பட்ட இனப் படுகொலையை அடுத்து தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழ் அகதிகள் பலர் மீண்டும் வாழ்வு தரப்படும் என்று கூறி திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்கள் பல முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். அன்றாட வாழ்க்கைக்கே அவர்கள் திண்டாடிக்கொண்டு இம் முகாம்களில் இருக்கிறார்கள்.



தமிழ்ச்செல்வன்

இவர்களுக்கு மருத்துவ வசதியோ, உணவு வசதியோ கிடையா. அணிவதற்கு நல்ல உடைகளோ பரவாயில்லை என்றாவது சொல்லக்கூடிய அளவுக்கேனும் உறைவிட வசதியோ இல்லை.

எமக்கு எதிர்காலம் உண்டா என்ற ஏக்க உணர்வுடன் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஏறக்குறைய 18 ஆண்டுகள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த இம் மக்களுக்கு எப்போது விடிவோ? விமோசனமோ? கேள்விக் குறிதான்.

இலங்கைக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது என்று கூறிவிட்டு 1948 இல் வெள்ளையன் வெளியேறினான். சிங்களவர்களின் ஆட்சி தலை தூக்கியது.

1948 முதல் 2001 வரை 53 ஆண்டுகளுக்கிடையில் தமிழ் மண்ணின் வளமான பகுதிகள் பறிபோயுள்ளன.

அவை அனைத்தையும் குறிப்பிடுவது கடினம் எனினும் பின்வரும் சிங்களக் குடியேற்றங்களைப் பார்த்தால் நிலைமை எவ்வளவு மோசம் என்று ஓரளவு புரியும்.

1. கந்தளாய் வேளான் குடியேற்றத் திட்டம்.
2. வெருகல் ஆற்றை மறித்துக் கட்டிய அல்லை நீர்ப் பாசனக் குடியேற்றத் திட்டம்.
3. முதலிக்குள (மொறவேவா) குடியேற்றத் திட்டம்.
4. மணலாறு குடியேற்றத் திட்டம்.
5. பதவியா குடியேற்றத் திட்டம்.
6. அம்பாறை குடியேற்றத் திட்டம்.
7. யான் ஓயா குடியேற்றத் திட்டம்.
8. பெரிய விளாங்குளம் குடியேற்றத் திட்டம்.
9. அல்லை– கந்தளாய் தெரு சூரியபுர குடியேற்றத் திட்டம்.

இக் குடியேற்றத் திட்டங்களில் இலட்சக்கணக்கான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

குடியேற்றம் பெற்ற தமிழ் கிராமங்களுக்குச் சிங்களப் பெயர்களை சூட்டியிருக்கின்றனர். சிங்களப் பெயர்களே கச்சேரிப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ் கிராமங்களுக்கு எப்படி சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டன. பெயர்கள் பதில் கூறும்.

| தமிழ் பெயர் | மாற்றப்பட்ட பெயர் |
|---|---|
| முதலிக்குளம் | மொறவேவா |
| புடவைக்கட்டு | சாகரபுர |
| பெரிய விளாங்குளம் | மகாதிவுல்வேவா |
| குமரேசன் கடவை | கோமரங்கடவல |
| வான் ஆறு | வான் எல |
| அரிப்புச் சந்தி | அலிஒலுவ |
| கல்லாறு | சோமபுர |
| பனிக்கட்டி முறிப்பு | பனிக்கட்டியாவ |
| ஆண்டான் குளம் | ஆனந்த வேவா |
| கஞ்சி மடம் | அபயபுர |
| சீனன் குடாவின் ஒரு பகுதி | நாலந்தபுர |
| சீனன் குடாவின் இன்னொரு பகுதி | தானியகம |

இவை அனைத்தையும் நினைவில் கொண்டுதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டும். சிங்களப் படையினர் தமிழ் மண்ணிலிருந்து வெளியேற வேண்டும். தமிழ் மண்ணில் தமிழ் மக்கள் மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை அறிவுறுத்தியிருக்கிறார். அது பெரிதும் வரவேற்கத்தக்கது, பாராட்டப்பட வேண்டியதும் கூட என்கிறார் ஈழவேந்தன்.

## உதவி கோருகிறார்



சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சைக்காக கிண்ணியா வாசியான ஐ.ஜவ்பர் என்பவர் மக்களிடம் பண உதவி கோரியுள்ளார்.

இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஜவ்பருக்கு அவரது தாயாரின் ஒரு சிறுநீரகத்தை சத்திர சிகிச்சை மூலம் மாற்றுவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதற்கான வைத்தியச் செலவாக 5 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

31 வயதான இவர், மூன்று பிள்ளைகளின் தந்தை. கூலிவேலை செய்தே தனது குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். எனவே சிகிச்சைக்கான தொகையை அவரால் திரட்ட முடியாதுள்ளது. அந்தத் தொகையை தாராள மனதுடையோர் தந்துதவ வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

இந்த ஏழை நோயாளிக்கு உதவ விரும்புவோர் இலங்கை வங்கி மருதானைக்கிளையின் சேமிப்புக் கணக்கு இலக்கம் 10276873 இல் பணத்தொகையை வைப்புச் செய்யலாம்.

## இலங்கை இனப் பிரச்சினை தீர்வில் நோர்வே இன்னும் அக்கறை

கொழும்பு, டிச.16

இலங்கையில் சமாதான முயற்சிகளை மீண்டும் முன்னெடுப்பதற்கு புதிய அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அழைப்பு விடுத்தால் அதற்கு உதவ எமது அரசு தயாராகவிருக்கிறது. இலங்கைப் பிரச்சினையில் தீர்வு காணப்படவேண்டும் என்ற விடயத்தில் எமது அரசு மிகுந்த அக்கறையுடன் இருக்கிறது.

இப்படித் தெரிவித்திருக்கிறார், நோர்வே தூதரக அதிகாரி ஒருவர். புதிய அரசாங்கத்தின் கீழ் நோர்வேயின் நிலைப்பாடு தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிக் சொல்ஹெய்ம் நோர்வே மத்திய வலது சாரிக் கட்சிக்காரர். எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் ஆட்சி பீடம் ஏறியிருக்கிறது. இலங்கை விவகாரத்தில் சொல்ஹெய்ம் ஈடுபட்ட போது ஐ.தே.க எதிர்க்கட்சியாக இருந்தது.

தற்போது அதுவும் ஆட்சி பீடம் ஏறிவிட்டது.

இந்த நிலையில் ஆட்சியிலுள்ள இரண்டு அரசுகளும் இலங்கை விவகாரம் பற்றி முடிவுகள் மேற்கொள்வதில் சிக்கல்கள் ஒன்றும் இராது. இப்படி இராஜதந்திர வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

இதேவேளை—

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய, அமெரிக்கத் தூதுவர்களுடன் உத்தியோகப்பற்றற்ற பேச்சுகளை நடத்தியிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிட்டும் எந்த முயற்சிக்கும் தாம் பூரண ஆதரவு வழங்குவதாக சந்திப்பின்போது தூதுவர்கள் கூறியிருக்கிறார்கள். (ற)

## ஜனாதிபதி- பிரதமர் அரசியல் தேன்நிலவு தொடருமா? சமாதானப் பேச்சு பதில் கூறும்

கொழும்பு, டிச. 16

சமாதானத்துக்கும் பொருளாதார மாற்றத்துக்கும் மக்கள் கடந்தவாரம் வழங்கிய ஆணை ஜனாதிபதிக்கும் புதிய பிரதமருக்கும் இடையிலான பதற்றமானதும் எதிரெதிருமான உறவுகளுக்கு மத்தியில் தொங்கிக்கொண்டிருக்கிறது.

தோல்வியுற்ற பொ.ஐ.மு தலைவியான சந்திரிகா குமாரதுங்க 2005 ஆம் ஆண்டு வரை நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கொண்டிருப்பார். அவரது அரசியல் எதிரியான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். கடந்த 18 ஆண்டுகளாகத் தொடரும் இனப்பிரச்சினை போரை நாடு எவ்வாறு கையாளப் போகிறது என்பதே இவ்விருவரும் ஒன்றாகப் பணியாற்றுவதைத் தீர்மானிக்கும்.

இப் பதவிகளை வகிக்கும் பிரமுகர்களிலேயே அனைத்தும் தங்கியுள்ளன என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் அரசியல் ஆய்வாளரான கேதீஸ் லோகநாதன் கூறுகிறார்.

அமைச்சரவை நியமனத்தில் ஜனாதிபதி ஆரம்பத்தில் எதிர்ப்பு காட்டினார். பின்னர் விட்டுக் கொடுத்தார்.

ஆனால் இந்த 'தேன் நிலவு' தொடரும் என்பதில் அவதானிகள் அவ்வளவாக நம்பிக்கை வைக்கவில்லை.

நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சியை இரு தலைவர்களும் ஆதரிக்கின்றனர். தமிழருக்கு பரந்த அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளிக்கின்றனர்.

ஆயினும் பேச்சுவார்த்தைக்கு முன்னரே இயக்கம் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்ற புலிகள் இயக்க கோரிக்கையை ஏற்க ரணில் விரும்புவதை சந்திரிகா கண்டிக்கிறார்.

இவ்விருவருமே அரசியல் சட்ட விதிகள் மூலமான அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றனர். அந்த அதிகாரங்கள் அடுத்தவரை செயலிழக்கச் செய்ய முடியும். அரசாங்கத்தை முடக்கச் செய்யலாம்.

'ஒரு திகில் நிறைந்த அரசியல் சட்ட சமபலம் என்று ஒரு இராஜதந்திரி இந்நிலையை வருணித்துள்ளார்.

(ராய்ட்டர்)



GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER
Euromind Active Antenna.
for Clear Reception
Of all Channels in all Locations
Importers and Suppliers
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha,
(Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax:075-370018



என்டெனா பொருத்துதல்

Get it Installed by professionals
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk




Eurostar
Sole Distributors in Sri Lanka for
UKAAYE
190 - 1st Floor, Bodhiraja Mawatha,
(Gaswork Street) Colombo - 11.
Tel: 075-370019, Fax:075-370018



அவசர திருத்தங்கள்

Guaranteed repair & service by trained technicians
TELECAVE (PVT) LTD.
PETTAH : 445377, 439467 (TEL/FAX)
KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)
E-mail : telecave@eureka.lk

சுடர் ஒளி
டிசம்பர் 16, 2001
36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com

## சமாதான முயற்சிகளில் இனி ஏன் தாமதம்?

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு, நிலையான சமாதானத்தை எட்டுவதற்கு நாடு எவ்வளவு ஆவலாக இருக்கின்றது என்பதை நடந்து முடிந்த பொதுத்தேர்தல் துலாம்பரமாக எடுத்தக்காட்டியிருக்கிறது.

சமாதானத்துக்கான மக்களின் தாகத்தை தேர்தல் முடிவுகள் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

சமாதானத்தின் பெயரால் ஆட்சி பீடத்தைக்கைபற்றியிருப்பவர்கள் அதற்காக உழைக்க வேண்டிய கடப்பாட்டுடன் பதவியை இப்போது ஏற்றிருக்கின்றார்கள்.

இனிமேல் அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையும் சமாதானத்தை எட்டும் இலக்கை நோக்கியதாக இருக்கவேண்டும்.

சமாதானத்துக்காக மிகுந்த எதிர்பார்ப்பில் இருக்கும் முழு நாடும், மக்களும் இது விடயத்தில் அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் மிகுந்த அவதானமாக நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தலில் வெற்றியீட்டிய ஐக்கிய தேசிய முன்னணி எம்.பிக்கள் அனைவரையும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழனன்று ஒன்றாகச் சந்தித்தார். புதிய அரசு நாடாளுமன்றக் குழுவின் முதல் கூட்டம் அது.

அந்தக் கூட்டத்திலும் சமாதானத்துக்காக உழைப்பதே தனது முதல் பணி என்று புதிய பிரதமர் அறிவித்திருக்கின்றார்.

''இனவாதத்துக்கு எதிராக, இன சௌஜன்யத்துக்காக, சமாதான விருப்போடு அனைத்து மக்களும் ஒன்று திரண்டு எமக்கு வாக்களித்திருக்கின்றார்கள். அவர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்வதே எமது தலையாய கடமையாக அமையவேண்டும். அதுவே எமது முதல் பணி.

இந்தப் பணியை முன்னெடுக்கும் நோக்கோடு இன்னும் பத்து நாள்களில் இந்தியா செல்கிறேன். சமாதானத்துக்கான முன் நடவடிக்கை அங்கு ஆரம்பிக்கப் படும்''.

இப்படி பிரதமர் ரணில் இந்தக் கூட்டத்தில் தனது எம்.பிக்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

முன்னதாக கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரும், இந்தியத் தூதுவரும் பிரதமர் ரணிலைச் சந்தித்து உரையாடியிருக்கின்றார்கள்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தும் விடயத்தில் மூன்றாம் தரப்பாக நோர்வே செயற்படுவதைத் தமது நாடுகள் வரவேற்கின்றன என்று அவர்கள் இருவரும் பிரதமர் ரணிலிடமும் மீண்டும் கூறியிருக்கின்றனர். இந்த விடயத்தில் தேவையான உதவி, ஒத்தாசைகளை வழங்கவும் தங்களது நாடுகள் தயாராக இருக்கின்றன என்று அவர்கள் பிரதமரிடம் உறுதியளித்திருக்கின்றார்கள்.

இதேவேளை —

''இலங்கையில் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்து முன்னெடுப்பதற்கு உதவும்படி இலங்கையின் புதிய அரசும், விடுதலைப்புலிகளும் அழைப்பு விடுப்பார்களேயானால் அதை ஏற்றுச் செயற்படுவதற்கு மூன்றாம் தரப்பு ஏற்பாட்டாளராகப் பணி புரிவதற்கு எமது அரசு தயாராக, அக் கறையாக உள்ளது'' என்று தெரிவித்திருக்கின்றார் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக அதிகாரி ஒருவர்.

''போர் நெருக்கடியும் பொருளாதாரத் தடைகளும் நீங்கிய இயல்பான, அமைதியான சூழ்நிலையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவேண்டும்.

''தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வு காணப்பட்டால் தமிழர்களும் சிங்களவர்களும் ஏனைய சமூகத்தினரும் இந்த அழகிய தீவில், ஆனந்தமாக ஒற்றுமையாக, ஒன்றுகூடி வாழ முடியும்'' — என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தனது 'மாவீரர் தின உரையில் தெரிவித்திருந்தார்.

ஆக —

அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகளை தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஆவலோடு ஆதரிக்கின்றார்கள்; ஆட்சி பீடமேறியிருக்கும் பிரதமரும் அவரது சகாக்களும் அதையே விரும்புகின்றார்கள்; அரசுக்கு மறுதரப்பில் இருக்கும் விடுதலைப் புலிகளும் வரவேற்கின்றார்கள்; அயல் நாடான இந்தியாவும், வல்லரசான அமெரிக்காவும் அதை அங்கீகரிக்கின்றன; மூன்றாம் தரப்பு மத்தியஸ்தப் பங்கை வகிக்கக் கூடிய நோர்வே முழு ஈடுபாடு காட்டுகின்றது.

எனவே இனித் தாமதம் ஏன்? நடவடிக்கைகளை செயல்படுத்தத் தொடங்க வேண்டிய தருணமிது!

# யுத்தமா சமாதானமா? தீர்மானிப்பது யார்?

## கைமாறிய அமைச்சுப் பொறுப்பும் கைகட்டி நிற்கும் படையினரும்

மழை விட்ட பின்னும் தூவானம் நிற்கவில்லை என்பது போன்று வன்முறைகள் மலிந்த தேர்தல் திருவிழாக்கள் முடிவடைந்தும் அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்பதிலும், கையளிப்பதிலும் ஜனாதிபதியும், புதிய பிரதமரும் மோதிக் கொண்டார்கள்.

பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போவது போல் நாதியற்று சமாதானத்திற்காக வாக்களித்த மக்கள் இன்னமும் அதற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மிகவும் சர்ச்சைக்குரிய பாதுகாப்பு அமைச்சர் பதவியையும், நிதி அமைச்சர் பதவியையும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று அழுங்குப்பிடியாக நின்ற ஜனாதிபதி கடந்த 11 ஆம் திகதி செவ்வாய் இரவு சுமார் மூன்று மணிநேரம் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியதையடுத்து அவற்றை தாரைவார்க்க முன்வந்தார்.

ஜனாதிபதி இவ்வாறு விட்டுக் கொடுத்ததற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரபலங்களால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் முக்கிய காரணமாகும் என ஒரு தரப்பினர் கதைக்கின்றனர்.

ஜனாதிபதிக்கு அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சர் பதவி மட்டும் அல்ல எப்பதவியும் வழங்கப்பட மாட்டாது.

அவர் முரண்டு பிடித்தால் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை வீதிகளில் இறக்கி, ஜனாதிபதி அமைச்சுப் பதவிகளை மட்டுமல்ல, ஜனாதிபதி பதவியையே அவர் விட்டுச் செல்லுமளவுக்குப் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் என்று எஸ்.பி. திஸாநாயக்க, ரவி கருணாநாயக்க மற்றும் ராஜித சேனாரத்ன போன்ற ஐ.தே.க.வின் கிளர்ச்சியாளர்கள் சூளுரைத்திருந்தனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தலையடுத்து இராணுவத் தளபதியின் அறிவுறுத்தலின் பேரில் விசேட இராணுவ கொமாண்டோக்கள் ஜனாதிபதி மாளிகையின் நுழைவாயில்களை அண்டிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

அப்பகுதி பொதுமக்களின் பாவனைக்காக தடை செய்யப்பட்டது.

புதிதாக ரஷ்யாவிலிருந்து தருவிக்கப்பட்டு யுத்தமுனைக்கு அனுப்பப்படவென தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த துருப்புக் காவி கவச வாகனங்களும் அனுப்பப்பட்டன.

### பணிந்தார் படைகளின் பதி

ஆனாலும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் பதவியை விட்டுக் கொடுக்க உடன்பட்டதையடுத்து நிலைமை வழமைக்கு திரும்பியது. இவ்வாறு ஜனாதிபதி இறங்கி வந்ததையடுத்து அதுவரை இரு பெரும்பான்மை கட்சிக்காரர்களுக்கிடையே நிலவி வந்த முறுகல் நிலைசற்றுத்தணிந்தது. எனினும் படையினர் மத்தியில், குறிப்பாக அதிகாரிகள் மத்தியில் இது பெருங்குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

ஏனெனில் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தமாக நிலவி வந்த நெருக்கடி தற்காலிகமாக தணிந்திருக்கிறதே தவிர, அதற்கு நிரந்தரமான தீர்வு இன்னமும் காணப்படவில்லை. நாளாந்த நடைமுறையில் இருக்கக்கூடிய சிக்கல்களுக்கு உறுதியான பரிகாரமும் இன்னமும் காணப்படவில்லை.

உதாரணமாக நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் அரசமைப்புப்படி புதிய அமைச்சரவையை அமைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் கையிலேயே இருக்கிறது. அதற்கு முன்னர் அவர் பிரதமரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளலாம். என்றாலும் அந்த ஆலோசனையின் பிரகாரம் தான் செயற்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அத்துடன் முப்படைகளினதும் தளபதியாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியே இருப்பார்; இருக்க வேண்டும். இதன்படி படைத்தளபதிகளுக்கான நியமனங்கள், படை அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகள், மற்றும் இராணுவ நடவடிக்கைகளுக்கான உத்தரவுகள் என்பன ஜனாதிபதியினாலேயே மேற்கொள்ளப்படும்.

இராணுவ சட்டவரைவுகளின்படி அவசரகாலச் சட்டம் ஜனாதிபதியால் சுமார் ஒரு மாத காலத்திற்கு வழங்கப்படலாம் எனினும் அதனை நீடிக்க நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை. ஆகவே இங்கு பாதுகாப்பு அமைச்சரின் தலையீடு ஜனாதிபதியின் முடிவைப் பாதிக்கலாம்.

### பின்னுக்குள்ள பிரச்சினைகள்

இது போன்ற நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற போர்வையில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களில் தலையிட அல்லது மோதிக்கொள்ள பாதுகாப்பு அமைச்சருக்கு வாய்ப்புக்கள் அதிகம். ஆகவே பாதுகாப்பு அமைச்சருக்குரிய கடமைகளையும் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களையும் வரையறை செய்வதில் நிறைய சட்டச் சிக்கல்களும், நடைமுறைச் சிக்கல்களும் இருக்கத்தான் செய்கின்றன.

உதாரணமாக, அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தினாலும், பயங்கரவாதத் தடைச்சட்டம், பொருளாதாரத்தடை மற்றும் தடைநீக்கம் சம்பந்தமான நடவடிக்கைகளும் முடிவுகளும் பாதுகாப்பு அமைச்சினாலேயே மேற்கொள்ளப்படும்.

இதைவிட, வழமை போலல்லாது உள்ளகப் பாதுகாப்புக்கென இம்முறை புதிய அமைச்சு ஒன்று பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு வத்தளை நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, பொலிஸ் பிரிவும், அதன் விசேட அதிரடிப்படைப்பிரிவும் இவரது கட்டுப்பாட்டின் கீழ்தான் செயற்படும்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால், புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளில் அண்மைக் காலங்களில் பொலிஸார் — விசேடமாக அதிரடிப்படையினர் — பயன்படுத்தப்பட்டு வருகின்றனர். ஆகவே, இனிமேல் அது எவ்வாறு செயற்படப் போகின்றது என்பதை ஜனாதிபதியல்ல உள்ளகப் பாதுகாப்பு அமைச்சரே தீர்மானிப்பார்.

இதனைவிட வாராந்தப் பாதுகாப்பு கவுன்சில் ஜனாதிபதி என்ற ரீதியில் அவரின் தலைமையிலேயே நடத்தப்படும். ஆனால் அங்கு எடுக்கப்படும் முடிவுகளை யார் நெறிப்படுத்தப் போகிறார்கள் என்பதில் தான் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எடுக்கப்படும் முடிவு ஓர் இராணுவ நடவடிக்கை சம்பந்தமானதாகவோ அன்றி படைத்தளபதிகளின் நியமனம் சம்பந்தமானதாகவோ இருக்குமானால் அதற்கான உத்தரவை ஜனாதிபதியே வழங்குவார்.

ஆனால் மேலே கூறியதுபோல பொருளாதாரத் தடை நீக்கம், பயங்கரவாதச் சட்டம் சம்பந்தப்பட்டவையாக இருந்தால் அதனை பாதுகாப்பு அமைச்சரே மேற்கொள்வார்.

ஆகவே, ஒரு வகையில் ஜனாதிபதி எடுக்கும் முடிவுகளில் செல்வாக்கு செலுத்தக்கூடிய அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சர் கொண்டிருப்பார். அத்துடன், பாதுகாப்புப் படைகளுக்கான நிதி ஒதுக்கீடு, ஆயுதக் கொள்வனவு சம்பந்தமான சகல நடவடிக்கைகளும் பாதுகாப்பு அமைச்சின் பூரண கட்டுப்பாட்டிலேயே இருக்கும்.

ஆகவே இங்கு படைபலத்தைக் கட்டுப்படுத்தும் பொறுப்புப் பாதுகாப்பு அமைச்சரிடம் தான் இருக்குமே தவிர, முப்படைகளினதும் தளபதியாகவுள்ள ஜனாதிபதியிடம் அல்ல.

அவ்வாறாயின், படைத்தளபதிகளும் படை உயர் அதிகாரிகளும் யாருடைய உத்தரவை ஏற்று நடப்பது என்பதில் சற்று குழம்பியிருக்கிறார்கள்.

இவ்வாறான சிக்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் இராணுவ சட்ட வல்லுனர்களினதும், நீதிபதிகளினதும் ஆலோசனைகளின் பேரில் தான் இயங்க வேண்டியிருக்கும்.

ஜனாதிபதியிடம் இருந்து பாதுகாப்பு அமைச்சர் பதவியைக் கைப்பற்ற வேண்டும் என்று அடம்பிடித்த ஐ.தே.கட்சிக்காரர்கள், அதனை அவரிடம் விட்டு வைப்பது புலிகளுடன் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளவுள்ள சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவித்துவிடும் என்றே நியாயம் கற்பிக்கின்றனர்.

ஆனால் உண்மையிலேயே ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஆட்சியாளர்களும் சமாதானத்தை நோக்கி விரைகின்றனரா அல்லது தக்கமுறையில் இராணுவத்தைப் பலப்படுத்தி புலிகளுக்கெதிரான போரை கட்டவிழ்த்து விடப்போகிறார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### இப்படியான இழுபறி இலங்கையில் இப்போதுதான்

சுதந்திரத்துக்குப் பின்னைய இலங்கை வரலாற்றில் பாதுகாப்பு அமைச்சராகவும் முப்படைகளினதும் தளபதியாகவும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியே இருந்து வந்த படியால் இவ்வாறான சிக்கல்கள் இதுவரை எழவாய்ப்பிருக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் காலஞ் சென்ற லலித் அத்துலத் முதலியும், ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில் காலஞ்சென்ற ரஞ்சன் விஜேயரத்தனவும் தேசியப் பாதுகாப்பு அமைச்சர்களாக இருந்த போதிலும், அவர்கள் ஜனாதிபதியின் நேரடி அதிகாரத்தின் கீழேயே செயற்பட்டு வந்தனர்.

அத்துடன் அவர்கள் அனைவரும் ஒரே கட்சிக்காரர்கள் என்பதால் கட்சி அரசியல் அங்கு தலை தூக்கவில்லை.

ஆனால் இம்முறை ஜனாதிபதி ஒரு கட்சியை சார்ந்தவராகவும், பிரதமர் இன்னொரு கட்சியைச் சார்ந்தவராகவும் இருப்பது மட்டுமல்லாது ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் நம்பிக்கை பெரும்பான்மையை இழந்தவராகவே காணப்படுகின்றார்.

இதனால் சட்டச் சிக்கல்களும், நடைமுறைச் சிக்கல்களும் அரசியல் கட்சிகளின் பின்னணியில் அடிக்கடி எழ வாய்ப்புக்கள் இருக்கின்றன.

அத்துடன் படைத்துறை நியமனங்களிலும் அரசியல் தலையீடுகள் நிறையவே காணப்படுகின்றன ஆதலால், பதவிக்கு வரும் படைத்தளபதிகள் சுதந்திரமாக செயற்படுவதும் கடினமாகவே இருக்கும்.

புதிய பிரதமர் தான் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காப்பாற்ற உடனேயே சமாதான முயற்சிகளில் ஈடுபடுவாரா அல்லது தேசிய நல்லிணக்கம் சர்வகட்சி உடன்பாடு என்று காலத்தை வீணாக்கி, மீண்டும் யுத்தம் வலுப்பெற வழிவகுப்பாரா என்பதுதான் இன்று மக்கள் மனதில் எழும் முக்கிய கேள்வி ஆகும்.

காலம் காலமாக சமாதானம் பேசி ஆட்சிக்கு வருவதும், பின்னர் 'யுத்தமென்றால் யுத்தம்', ''சமாதானம் என்றாலும் யுத்தம்,' மற்றும் ''சமாதானத்துக்கான போர்'' என்று இனவாதப் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்ட சிங்கள தலைமைகளின் சரித்திரத்தில் ரணில் புதிய வரலாறு எழுதுவாரா அல்லது பழைய குருடி கதவைத் திறவடி விளையாட்டுத்தானா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

— பி. ரமணன்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# வன்னி வாக்களிப்புத் தடை விவகாரம் எருமைமாட்டில் மழை போலத்தான்?

''ஐயாவை நம்பினாலும் ஒன்றும் நடக்காது போலையிருக்கு''

அரட்டையைத் தொடங்கினார் விநாசியர்.

''விடுதலைப்புலிகளுடன் ரணிலுக்கு தொடர்பிருக்கு, ஐ.தே. க ஆட்சிக்கு வந்தால் புலிகளிடம் வடக்கு கிழக்கை கொடுத்து விடுவார் என்றெல்லாம் அம்மாவின்ரை ஆட்கள் தொண்டை கிழியக் கத்தினவை. ஆனால் அதெல்லாம் பெரும்பான்மையினர் மத்தியிலை எடுபடாமல் போயிட்டுது, எப்பிடியெண்டாலும் தமிழர் பிரச்சினை தீரட்டும் என்று தானே யு.என். பியை அவையள் வெல்ல வைச்சிருக்கினம். அப்பிடியிருக்க ஐயா எங்களை ஏமாத்துவாரோ?'' கேட்டார் மாஸ்டர்.

''எங்கடை சனம் ஏமாறுவதற்கென்றே பிறந்திருக்கு'' என்றாள் சின்னாச்சி

''ஏன்? இவ்வளவு காலமும் தேர்தலைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்து போட்டு இந்த முறை தேர்தலிலை நீயும் அக்கறை காட்டினனியெல்லே'' கேட்டார் விநாசியர்.

''உவை ஏறிக் கட்டி. நாடாளுமன்றத்துக்குப் போய் எங்களுக்கு இறக்கிச் சுமந்து கொண்டு வந்து தருவினம்.என்று நான் நம்பி தேர்தலிலை அக்கறை காட்டேல்லை. ஏதோ ஜனநாயகம் என்றால் புனிதம் புண்ணாக்கு என்றும், அதாலை பிரச்சினையைத் தீர்க்கலாம் என் றும் சொல்லுறவை முயற்சிக் கட்டும் என்றுதான் இருந் தனான். எங்கடை தலைகளும் சூரியன் மேற்கிலை உதிச்ச மாதிரி ஒற்றுமையாக கூட்டமைப்பு உருவாக்கிச் சினம். சரி வேறை ஆள்கள் போய் தமிழருக்கு எதிரான சட்டத்துக்கு ஆதரவாய்க் கை தூக்குறதுக்குப் பதிலாக இவைபோய் எதிர்க்கட்டும் என்று தான் இந்தமுறை நினைச்சனான்.''விளக்கினாள் சின்னாச்சி.

'' விநாசியர்,ஐயாவை நம்ப ஏலாது என்று ஏதோ சொன்னார். பிறகு கதையை விட்டுப் போட்டார்.'' ஞாபகப்படுத்தினான் லோகன்.

''இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னி மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வர வாக்களிப்புத் தினத்தன்று அனுமதி மறுக்கப்பட்டது.''

''ஓம் அந்த அயோக்கியத்தனத்தைத் தான் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களிலை இருந்து எல்லோரும் கண்டிச்சவை. ஆனால் அந்தக் கண்டனங்கள் எல்லாம் எருமை மாட்டிலை மழை பெய்த மாதிரி வீணாப்போனது தான் மிச்சம்'' விசனித்தான் லோகன்.

''உதுக்குத்தான் ஜனநாயக வழியாலை ஏலாது. வேற வழியைப்பார்ப்பம் என்றனாங்கள் '' இடித்துரைத்தாள் சின்னாச்சி.

சிக்கலுக்கு வழிகோலும் சின்னாச்சியை ''விநாசியரைப் பேசவிடு'' என்று அடக்கினார் மாஸ்டர்.

விநாசியர் தொடர்ந்தார்.

''தடுக்கப்பட்ட மக்கள் மட்டும் அன்று வாக்களித்திருந்தால் தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களின் எண்ணிக்கை 18ஐ தாண்டியிருக்கும் என்பது நிச்சயம். இராணுவத்தின் போக்கிலித்தனத்தால் வன்னியில் ஒன்று, மட்டக்களப்பில் ஒன்று என்று இரண்டு எம்.பிக்களையும் ,தேசியப் பட்டியலில் இரண்டாவது உறுப்பினரையும் கூட்டமைப்பு இழந்து விட்டது என்பது நிச்சயம்''

''உது அம்மாவின்ரை அடாவடியெல்லோ? ஐயாவை ஏன் நம்பேலாது என்றனீங்கள்''கேட்டான் டானியல்

''இராணுவக் கட்டுப்பாடில்லாத இடங்களில் இருந்து வந்த மக்கள் வாக்களிக்க விடாமல் தடுக்கப் பட்டதை தேர்தல் ஆணையாளரிடம், எழுத்து மூலம் தெரிவித்த கூட்டணியினர் மறு வாக்களிப்பு நடத்தி அவர்கள் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கும்படி கோரியிருந்தனர். ஆனால் இதற்கு ஐயாவோ,அவரின்ரை கட்சியோ ஆதரவளித்து தேர்தல் ஆணையாளருக்கு அழுத்தம் கொடுக்காமல் நைசாக காலை வாரி விட்டினம்.''

''ஏனாம் அப்படிச் செய்தவை என்று ஏதும் தெரியுமே? ''கேட்டார் மாஸ்டர்.

''வன்னியிலும் மட்டக்களப்பிலும்இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்கள் வாக்களித்தால் கூட்டமைப்புக்கு அதிக வாக்குகள் கிடைக்கும். இதனால்வன்னியில் ஐ.தே.க .பட்டியலில் போட்டியிட்டும்,மட்டக்களப்பில் தனித்




துப் போட்டியிட்டும் இரு உறுப்பினர்களைப் பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தனது உறுப்பினர்களை இழக்க நேரிடும். இதனால் தான் பாதகமடைவோரின் நெருக்குதலுக்குப் பணிந்து கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ஆதரவாக செயற்படாமல் ஐயா நழுவினாராம். இப்ப சொல்லுங்கோ?. அந்தாளை எப்படி நம்பச் சொல்லுறியள்?'' கேள்வியுடன் முடித்தார் விநாசியர்.

''உந்தப் பிரச்சினைக்கு நீதி மன்றத்தை அணுகித் தீர்வு காண ஏலாதோ?'' அப்பாவியாகக் கேட்டார் மாஸ்டர்.

''ஓ,அந்தத் தீர்ப்பு வருவதற்கு முன்னர், இரண்டு தரம் தேர்தல் வந்து போயிடும்'' என்ற சின்னாச்சியின் குரல் சிரிப்பலைகளைப் பரப்பியது.

''வாக்களிக்க அடையாள அட்டை காட்டத் தேவையில்லை என்ற தீர்ப்புக் கிடைக்க யாழ்ப்பாணத்தில் அரச நிர்வாகத் தலைமை அனுப்பிய கடிதம் தான் காரணம் என்று கூட்டமைப்பு கூறி வருகுது. குடாநாட்டில் பலரிடம் அடையாள அட்டை இல்லை என்று விதானைமார் தனக்கு முறையிட்டனர் என்று அரச தலைமை நீதிமன்றத்துக்கு சாட்சிக் கடிதம் கொடுத்ததாம். அதனால்தான் ஈ.பி.டி.பியின் மனுவை ஏற்று தீர்ப்பு வழங்கப்பட்டதாம்.'' என்றான் லோகன்.

''சண்முகா, பாவம் கூடுதப்பா உலகத்திலை'' கோவிலைப் பார்த்து கும்பிட்டார் விநாசியர்.

''என்ன செய்யிறது விநாசியர்,ஊரை அடிச்சு உலையிலை போட்டு கோடியாய் சம்பாதிச்சுப் போட்டு , சிக்கல் வரக்கை பிறகு பதவியை விட்டுட்டு மாறுகினம், இவைக்கு தண்டனை கிடைக்காது.போற போக்கிலை, எல்லோரும், இருக்கு மட்டும் தட்டிச் சுத்திச் சம்பாதிப்பம், பிறகு வெளி யிலை போய் பேசாமல் இருப்பம் என்றுதான் நினைக்கப் போகினம்.'' மனம் வெதும்பினார் மாஸ்டர்

''உப்பிடிக் கனபேர் இருக்கினம் .இனி மேல் எப்பிடி அவை பச்சோந்தி மாதிரி நிறம் மாறப் போகினம் என்று வேடிக்கை பார்க்கலாம்'' சிரித்த படி சொன்னான் டானியல்.

''யாழ். செயலகத்தில் வாக்கு எண்ணிக்கை தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதாம். அப்போது ஏதோ கோல்மால்களை செய்யத் திட்டம் தீட்டப்படுவதாக கூட்டமைப்பினருக்கு சந்தேகம் எழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டதாம். அதோடு அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்க நிர்வாகத் தலைமை அனுமதி மறுத்துத் தடை போட்டுவிட்டதாம்'' என்றான் டானியல்.

''மற்றவையைப் பற்றிக் கதைக்கிறியள், கூட்டமைப்புக் குள்ளையும் குத்து வெட்டு தொடங்கும் போலை இருக்கு'', கூறினான் லோகன்.

''இதென்ன புதுக்கதை, கூட்டமைப்பைக் குழப்பினால் என்ன நடக்கும் என்று தமிழ் எம்.பிமாருக்குத் தெரியாதோ? சினந்தார் சின்னாச்சி.

''இனிப்பிளவு பட்டால், அடுத்த தேர்தலுக்கு வாக்குக் கேட்டு வரமுடியாது என்று அவைக்குத் தெரியும். ஆனால் நான் சொன்னது தேர்தலில் போட்டியிட்டு விருப்பு வாக்கிலை கோட்டை விட்ட ஒருவரைப் பற்றி, கூட்டுத் தலைவரான அவர், தனது கட்சியிலை கேட்ட மற்ற இரண்டு பேருக்கும் அதிக விருப்பு வாக்குகள் கிடைத்த போதும்,இவருக்கு குறைவாகத்தான் கிடைத்தது. அதனால் தனக்கு எதிராக வேணுமென்றே சதி செய்யப்பட்டதாக அவர் எண்ணுகிறாராம்'' கூறினான் லோகன்.

''இனிமேல் பழசுகளை நினைத்துக் கலங்காமல் ,இந்த முறை பொங்கலுக்காவது, குடாநாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் சர்க்கரை, பயறு, அரிசி கிடைக்க வழி செய்தால் ,அடுத்த தேர்தலில் கூட விருப்பு வாக்கு கிடைக்குமெல்லே? '' கேட்டான் டானியல்.

''யாழ் .மாநகராட்சி மேயர் பதவிக்கு ஆள் போடுவதில் சிக்கல் நிலவினதாம். ஏதோ பொதுத் தேர்தலை ஒற்றுமையாக சந்திச்சிட்டினம். ஆனால் மற்ற எல்லா விஷயங்களிலும் குத்து வெட்டு தொடருது. அது உள் வீட்டுப் பிரச்சினையாக இருக்குமட்டும் கரைச்சலில்லை. ஆனால் அந்த வண்டவாளங்கள் வெளியிலை வந்து தமிழரை சந்தி சிரிக்க வைக்காமல் இருந்தால் சரி'' என்றாள் சின்னாச்சி

''மூத்த ஒருத்தர் தலைமையேற்று நடத்த, கூட்டமைப்பு தமிழர் உரிமைகளை மட்டும் வலியுறுத்தி தங்கடை தனிப்பட்ட சுயநலங்களை புறக்கணித்து செயற்பாடுகளை நடத்தினால் நல்லது'' அறிவுரை வழங்கினார் விநாசியர்.

தேரடி கலைந்தது

—ஏகலைவன்

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00—10.30 | கலை ரசம் | ஆலோசனை நேரம் | நம்ம நேரம் | இப்படிக்கு நீங்கள் | திரை விமர்சனம் | குட்டிச் சுட்டி | குட்டிச் சுட்டி |
| 10.30—11.00 | கேளுங்க மாமியாரே | கேளுங்க மாமியாரே | மூன்று முடிச்சு | மரியாதை | கதை நேரம் | | களம் |
| 11.00—11.30 | சினிமா விருது... | சினிமா விருது..... | தேனமுது | பெப்ஸி உங்கள்.... | திரை இசை | மங்கை | காலைக் கதிர் |
| 11.30—12.00 | நம்பிக்கை | நம்பிக்கை | நம்பிக்கை | நம்பிக்கை | நம்பிக்கை | அரட்டை அரங்கம் | |
| 12.00—12.30 | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | சின்னச் சின்ன ஆசைகள் | சிரிக்கலாம் வாங்க |
| 12.30—13.00 | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | | கையில காசு |
| 13.00—13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| | | | | | | | |
| 13.30—14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00—14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30—15.00 | | | | | | | |
| 15.00—15.30 | | | | | | | டொப் 10 மூவீஸ் |
| 15.30—16.00 | | | | | | நிலாக்ஸ் டைம் | சார்ட் ஷோ |
| 16.00—16.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கெல்லி | பக்கி ஓ ஹேரே | ஆங்கில கார்ட்டூன் | சூப்பர் சீன்ஸ் | |
| 16.30—17.00 | பூஞ்சோலை | பௌன்ட் பப்பீஸ் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | சினிமா விருது..... | அட்வென்சர் டாஸான் |
| 17.00—17.30 | பாட்டுக்கு பாட்டு | கம்பியூட்டர் | ஸ்போர்ட்ஸ் | களம் | தில்லானா தில்லானா | | இப்படிக்கு நீங்கள் |
| 17.30—18.00 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கலாசார நிகழ்ச்சி | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | மின்னல் |
| 18.00—18.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | செம்பருத்தி | |
| 18.30—19.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | இசைக் கோலம் | சப்த ஸ்வரங்கள் |
| 19.30—20.00 | சின்னத்திரை | சனிதபதனி | பில்லர் | சீமான்களே சீமாட்டி.... | இப்படிக்கு தென்றல் | நிம்மதி உங்கள்..... | நயானி |
| 20.00—20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30—21.00 | கோகிலா எங்கே பேரகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# நிம்மதிக்குப் பஞ்சப்பட்ட மக்களிடம் லஞ்சம் இட்டு வாங்கிய வாக்குப் பிச்சை!

## மட்டக்களப்பில் தமிழ்த் தலைவர்களின் பிரசாரத்தில் தனி ஸ்டைல்!

அரசியலில் 'ஊழல்' எப்பொழுது ஆரம்பமாகின்றது என்று ஆராய்ந்து பார்த்தால், தேர்தல்காலத்தில்தான் அவை ஆரம்பமாகின்றன என்று அடித்துக் கூறிவிடலாம். அதுவும் வாக்காளர்களே இதனை இரண்டையும் முதன்முதலில் ஆரம்பித்து வைக்கின்ற தரப்பினராக இருப்பதை இந்த பொதுத்தேர்தல் காலங்களில் பரவலாகக் காணமுடிந்தது.

தமிழீழ தனி அரசுக்கான ஆணை கோரி நடைபெற்ற 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்போது தமிழ் மக்களிடையே காணப்பட்ட பாரிய எழுச்சிக்கு ஒப்பான ஒரு விடுதலை எழுச்சி, இம்முறைப் பொதுத்தேர்தலிலும் பெரும்பான்மையான தமிழ் மக்களிடையே ஏற்பட்டிருந்தது.

ஆனால், தமிழ்மக்களின் விடுதலை உணர்வை உல கிற்கு காண்பிக்கவென்று தமிழர் தரப்பினரால் பிரகடனப் படுத்தப்பட்ட இந்தத் தேர்தலிலும்கூட சலுகைகளையும், சுயநலன்களையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பல தமிழர்கள் செயற்பட்டனர் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

வாக்காளர்களிடம் வாக்குக் கேட்டுச் சென்ற தமிழ்க்கட்சி வேட்பாளர்களிடம் பணம் வேண்டும்; வேலைவாய்ப்பு வேண்டும்; பதவி உயர்வு, இடமாற்றம் வேண்டும்; புனர்வாழ்வுக்கு சிபாரிசு செய்யவேண்டும் என்று, பல தமிழ் வாக்காளர்கள் தாம் அளிக்க இருந்த வாக்குக ளுக்கு விலைபேசினார்கள். தாம் அளிக்க இருந்த வாக்குகளுக்கு இலஞ்சமாக இவற்றைத் தரவேண்டும் என்ற 'இலஞ் சத்தை' அரசியல் வாதிகளின் அரசியல் வாழ்க்கையில் மக்களே முதன்முதலே ஆரம்பித்து வைத்தார்கள்.

500 ரூபாய்க்கு ஒரு வாக்கு, சாராயப் போத்தலுக்கு ஒரு வாக்கு என்று பல தமிழ் மக்கள் இனத்திற்கான தமது வாக்குகளையே விலை பேசிய விடயம் சாதாரணமாகவே மட்டக்களப்பில் இடம்பெற்றது.

தமிழ் இனத்தின் ஒற்றுமையை இத்தேர்த லின்போது வெளிக்காட்ட ஒவ்வொரு தமிழனுக்கும் ஒரு ஜனநாயகக் கடமை இருக்கின்றது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் முதற்கொண்டு தமிழர்பால் அக் கறை கொண்டுள்ள அனைத்துத் தரப்பினரும் அடித்துக் கூறிவந்திருந்த போதிலும், தமது கடமைக்கு விலைபேச ஒரு சில தமிழர்கள் இப்பொழுதும் துணிந்திருப்பதை இந்தப் பொதுத்தேர்தல் வெளிப்படுத்தியுள்ளது.

சலுகைகளுக்காக தமது உரிமைகளைத் தாரை வார்க்கத் தயாராகவிருந்த ஒரு தொகுதித் தமிழ் வாக்காளர்களின போக்கினை பெரும்பான்மை இனக் கட்சிகளும், அதன் தோழமைக் கட்சிகளும் இந்தத் தேர்தலில் நன்கு பயன்படுத்திக் கொண்டன.

எந்தவித பிரசாரத்திற்கும் வெளியே செல்ல முடியாத நிலையில் தனது வாசஸ்தலத்திலேயே தங்கியிருந்த ஒருவர், 2000 ரூபா புனர்வாழ்வு காசோலைகளை மட்டும் வழங்கி இத்தேர்தலில் 3,000 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டக்களப்பு நகரை விட்டு வெளியே பிரசாரத்திற்குச் செல்ல முடியாத நிலையிலிருந்த ஒரு தமிழ்க்கட்சி, சில இளைஞர் யுவதிகளுக்கு அபிவிருத்தித் தொண்டர் நியமனங்களை வழங்கியும், புனர்வாழ்வு கொடுப்பனவை காசோலைகளாக வழங்கியும் 4, 000 இற்கு அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தது. எந்தவித உத்தரவாதமும் இல்லாத நியமனங்களையும், பிழையான திகதிகள் பொறிக்கபட்ட காசோலைகளையும் பெற்றுக்கொண்ட இந்தத் தமிழ் இளைஞர் யுவதிகள் குறிப்பிட்ட இந்தக் கட்சிக்காக தேர்தல் பணிகளில ஈடுபட்டுத் திரிந்ததுடன், அக்கட்சிக்கு வாக்களிக்கவும் செய்தார்கள்.

இதேபோன்று, தாம் ஆட்சிக்கு வந்தால் வேலைவாய்ப்பு வழங்குவோம், பிரதேசத்தை அபிவிருத்தி செய்வோம்



என்பனவை போன்ற பொய் வாக்குறிதிகளை நம்பி சுமார் 14 000 தமிழ்வாக்குகள் ஐ.தே.கட்சிக்கு அளிக்கப்பட்டிருந்தன. சுமார் 12 000 இற்கும் அதிகமான தமிழ் வாக்குகள் எந்தவித கொள்கையும் இல்லாது அரச படைகளுடன் இணைந்து செயற்பட்டுவரும் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு அளிக்கப்பட்டி ருந்தன. இவற்றில் சில கள்ள வாக்குகள் போக மிகுதி வாக்கு கள் அனைத்தும் மதுபானத்திற்கும், கையூட்டுக்குமாக (இலஞ்சம்) அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் கூட்டமைப்பு சார்பாகப் பிரசாரப் பணிகளில் ஈடுபட்ட ஒரு பிரமுகர் கருத்துத்தெரிவிக்கையில், 'புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று இந்தத் தேர்தல் மூலம் உலகிற்கு வெளிப்படுத்தப் பல தமிழ் மக்கள் தயாராக இருந்ததை இந்த் தேர்தல் காலத்தில் காணக்கூடியதாக இருந்த போதிலும், ஒரு தொகுதி தமிழ் மக்கள் தொடர்ந்தும் அரசியல் மலடர்களாகவே இருந்து வருவதையும் காணக்கூடியதாக இருந்தது. தமிழ்க் கூட்டமைப்பின் கொள்கைகளை விளக்கி வாக்குகேட்டுச் சென்ற எம்மிடம் அற்பசலுகைகளையும், இனாம்களையும் எதிர்பார்க்கும் நிலையில் பல தமிழ் மக்கள் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். எமது வாக்குகளுக்காக மற்றக் கட்சிகள் பலவற்றைத் தருவதற்கு தயாராக இருக்கை யில் தமிழ்க் கூட்டமைப்புக்கு எதற்காக நாம் சும்மா வாக்களிக்க வேண்டும் என்று பலர் பேரம் பேசினார்கள். இதனால் ஒரு கொள்கைக்காக தேர்தலில் குதித்திருந்த தமிழ் கூட்டமைப்பினர் கூட தவிர்க்கமுடி யாமல இந்த மக்கள் எதிர்பார்த்த அற்பசலுகைகளை வழங்கவேண்டி இருந்தது என்று தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் காலத்தில் மட்டும் குறைந்தது 10 இலட்சம் ரூபாய்க்கு அதிகமான பணத்தை செலவுசெய்தே ஆகவேண்டிய ஒரு கட்டாயத்தை இதுபோன்ற வாக்காளர்கள் ஏற்படுத்தியதன் மூலம், அடுத்த தேர்தலுக்கும் இதே அளவிலான தொகையை எந்த வகையிலாவது சேகரித்தேயாக வேண்டும் என்ற அவசியத்தையும் தமிழ் வேட்பா ளர்களுக்கு அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் அந்தப் பிரமுகர் மேலும் தெரிவித்தார்.

சுமார் இரண்டு தசாப்த காலமாக தமது இனத் தின் விடுதலைக்காக தியாகங்களுடன் கூடிய போராட்டத்தை மேற்கொண்டுவரும் தமிழ் மக்களின மத்தியில் விடுதலை உணர்வு அற்ற ஓர் இனக் குழுமம் தொடர்ந்தும் இருந்துவருவது போராட்டத்தின் நோக்கம் பற்றிய ஒரு கேள்வியையே சர்வதேச மட்டத்தில் உருவாகிவிடும் என்பதை ஒவ்வொருவருழ் கவனத்தில் கொள்ளவேண்டும்.

விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் ஒரு சமுகத்திற்கு போதிய அரசியல் அறிவினையும், அரசியல் எழுச்சியையும் ஏற்படுத்தாத குற்றத்தை தமிழ் அரசியல்வாதிகளும், செய்தி ஊடகங்களும், பொது அமைப்புக்களும் ஏற்கவேண்டிய அதேவேளை, எமது இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் அரசியல் தெளிவை ஏற்படுத்தவேண்டிய கடமை ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு என்பதையும் நாம் ஒவ்வொருவரும் ஏற்றுச் செயற்பட வேண்டும்.

— சாத்வீகன்

## பித்தன் பதில்கள்

ஆர். ஐங்ஸ், மண்டூர்.

கே: நான் ஒரு வளைக்காத லிக்கிறேன். அதுமட்டுமல்ல அவளோடு வரும்தோழி யையும் காதலிக்கிறேன். இது தப்பா பித்தா?



ப: *உங்கள் காதலி உங்களையும் காதலித்து, உங்கள் நண்பனையும் காதலித்தால் எப்படி இருக்கும்.*

நிபன்குமார், வத்தளை.

கே: பித்தா! என் மனைவி இரவிரவாக தூங்காமல் அடம் பிடிக்கிறாளே!



ப: *ஏணையில் போட்டு ஆட்டிப் பாருங்களேன்.*

ப.செந்தில்வேல் — பளை

கே: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற் கான முன் முயற்சியாக இந்தியா, நோர்வே ஆகிய நாடுகளுக்கான இலங்கைத்தூதுவர்களை மாற்ற ரணில் திட்டமிடுகிறாராமே.

ப: *தலையிடிக்குத்தலையணையை மாற்றிய கதையாகிவிடக்கூடாது ரணிலின் முயற்சி.*

கனகுமாரம், தெஹிவளை.

கே: பித்தனே! கவலை இல்லாத மனிதன் யார்?



ப: *அப்படி ஒருவர் இருக்கிறார். அவர் எனது நண்பர். அவர் சொல்லுவார்: "நானும் என் மனைவியும் வீட்டு வேலைகளை ஆளுக்கு ஆள் பகிர்ந்து செய்வோம். நான் சமைப்பேன் அவ சாப்பிடுவா. நான் துவைப்பேன் அவ போட்டுக்குவா.*

பி.ரமேஸ், வவுனியா

கே: பித்தனே எதிர்க்கட்சித் தலைவராக ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவாகியிருக்கிறார். இனி என்ன நடக்கும்?

ப: *இனி என்ன புலி, புலி என்று மீண்டும் கிலி பிடித்துக் கத்தப் போகிறார்.*

ப. தர்மசீலன், இயங்கராவூர்.

கே: 10 ரூபா, 20ரூபா, 50ரூபா, 100ரூபா நோட்டுக்களில் தங்கள் பெயர்களை எழுதுபவர்கள் பற்றி...

ப: *காசு பறக்கும் இடங்களிலெல்லாம் காசுக்காரன் நானும் பறக்கிறேன் என்ற நப்பாசைதான்.*

ஏ.ஆர். மன்சூர், கம்பளை.

கே: இலங்கை அரசியலில் அடுத்தடுத்து கிங்மேக்கர்சாதனை புரிந்தவர்கள் யார்?

ப: *நிச்சயமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான்.*

லதா, தெஹிவளை.

கே: பித்தனே! தேசிய அரசாங்கம் அமைக்க ரணில் ஏன் விரும்பினார்?

ப: *இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் ஏற்படும் தோல்வியை சகல கட்சிக ளின் தலையிலும் கட்டிவிடத்தான்.*

ஆர்.எம். அப்துல்காதர், கண்டி.

கே: கண்டி முஸ்லிம் இளைஞர்கள் கொலைக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்கிறாராமே அனுருத்த ரத்வத்த?

ப: *முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கும் முயற்சி.*

எல். சூரிய குமார், வத்தளை.

கே: நாடாளுமன்றம் கூடும் திகதி 17 என்றார்கள். பின்பு 18 என்றார்கள். ஏன் பித்தா இந்த தடுமாற்றம்?

ப: *அதுதான் முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்களே.*

மரீனா சங்கீதா, முகாத்துவாரம்.

கே: பித்தனே! புலிகளுடன் பேச்சு நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணக் கோருகி றதே தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு?

ப: *திரும்பத் திரும்ப அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கீறல் விழுந்த றெக்கோட்.*

சுந்தரம், சுன்னாகம்.

கே: பெண்களைப் பெண்களுக்குப் பிடிக்காத காரணம் என்ன பித்தா?

ப: *ஒத்த முனைகள் ஒன்றையொன்று தள்ளும். எதிர் முனைகள் ஒன்றையொன்று கவரும் என்று சும்மாவா சொன்னார்கள்.*

வி. எஸ். சிவகரன், இலுப்பைக்கடவை.

கே: பேச்சுத்திருமணமா? காதல் திருமண மா? வாழ்க்கையில் வெற்றி தரும்?

ப: *கடின உழைப்பே வாழ்க்கையில் வெற்றி தரும்.*

எம். சுரேஸ்குமார், கந்தானை.

கே: இன்றைய நிலையில் கணவனை மதிக்கும் பெண்கள் அதிகமா? மிதிக்கும் பெண்கள் அதிகமா?



ப: *இன்றைய நிலையில் மனைவியை மதிக்கத் தெரியாத கணவன் மார் மிதிக்கப்படு கிறார்கள் என்பதே உண்மை.*

ஆர்.எஸ்.ஸ்ரீதாஸ், நல்லூர்.

கே: பித்தனே கல்யாணவீட்டில் உங்களுக்குப் பிடிக்காதது?



ப: *மணமக்க ளிடம் புகைப்படப் பிடிப்பாளர் நல்லா சிரியுங்கோ என்று கூறுவதும், திருமண நிகழ்வுக்கு வந்திருப்பவர்கள் நிகழ்வுகளைப் பாராமல் பந்தியைப் பார்ப்பதும்.*

கார்த்திகா, ஹெந்தளை.

கே: இரகசியம், பரம இரகசியம் என்ன வேறுபாடு?

ப: *கஞ்சன், படுகஞ்சன்.*

க.சுதர்ஷன், ரங்கார்.

கே: பித்தா நீங்கள் காமத்துப்பால் படித்திருக்கிறீர்களா?

ப: *இல்லை, குடித்திருக்கிறேன்.*

மகேஷ், சிலாபம்.

கே: பித்தனே மனக்குழப்பத்தைப் போக்க என்ன செய்யலாம்?

ப: *மனம் என்கிற குதிரையின் கடிவா ளத்தை அறிவின் கையில் ஒப்படைத்து விட்டால் குழப்பம் குறுக்கே வராது.*

பி.மாலதி, வத்தளை.

கே: சிதம்பர ரகசியம் சொல்லுங்களேன் பித்தனே, ரகசியமாக.

ப: *சொன்னேனே காதில் விழுந்ததா?*

லால்றமணன், கொழும்பு — 4.

கே: எதிர்காலத்தில் பத்திரிகைத்துறை எப்படி இருக்கும்?

ப: *எதிர்காலத்தில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி எல்லாமே இணைய வலைக்குள் சிக்கிக் கொள்ளும் என்று சிலர் சொல்லியுள்ளார்கள் என்றாலும் எல்லாமே இருந்து கொண்டுதான் இருக்கும். இது அனுபவ உண்மை.*

# ஜோர்ஜ் பெர்னாண்டஸை கலக்கும் சவப்பெட்டி கொள்வனவு ஊழல்

## கார்கில்ஸில் உயிர் நீத்த வீரர்களுக்கு அவமதிப்பு என குற்றச்சாட்டு

இந்திய,டெகல்கா போலி ஆயுத பேர ஊழல் பிரச்சினையில்ஏற்கனவே சிக்கித் தவிக்கும்,இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது தற்போது 'சவப்பெட்டி' ஊழல்' சுமத்தப்பட்டுள்ளது.

கார்கில் போரில் வீர மரணம் அடைந்த வீரர்களை அடக்கம் செய்ய சவப்பெட்டி கள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது. எனவே, அமைச்சர் பெர்னாண்டஸின் பதவி பறிக்கப்பட வேண்டும்,'' என்று எதிர்க்கட்சிகள் ஒட்டு மொத்த எதிர்ப்பைக் காட்டி வருகின்றன. இதனால் இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் கடும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது.

### ஊழலும் பதவி துறப்பும்

'டெகல்கா போலி ஆயுத பேர ஊழல்' தொடர்பாக வீடியோ ரேப்புகளும் வெளியிடப்பட்டிருந்தன. நாடு முழுவதும் கடந்த மார்ச் மாதம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது: இப்பிரச்சினை பெரிதானதை அடுத்து அப்போது பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த பெர்னாண்டஸ் பதவி விலகி னார்.

இந்திய அமைச்சரவை சமீபத்தில் விஸ்தரிக்கப்பட்ட போது பெர்னாண்டஸ் மீண்டும் பாதுகாப்புத்துறை அமைச்சரானார். இதற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் ,' பெர்னாண்டஸ் பதவி விலக வேண்டும், அல்லது பதவி விலக்கப்பட வேண்டும் 'என்று கோஷங்கள் எழுப்பப்பட்டு வந்தன. இந்நிலையிலேயே, புதிதாக சவப் பெட்டி ஊழலை பெர்னாண்டஸ் மீது எதிர்க்கட்சிகள் சுமத்தி உள்ளன.

'கார்கில் போரில் இறந்த வீரர்களை அடக்கம் செய்ய வாங்கப்பட்ட சவப்பெட்டிகளில் ஊழல் நடந்து இருப்பதற்கு பொறுப்பேற்று, பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்' என்று எதிர்க்கட்சியினர் லோக்சபையில் கோஷம் எழுப்பினர். இரு சபைகளிலும் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இரு சபைகளிலும் அலுவல்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டு சபையில் ஒத்திவைக்கப்பட்டன.

### ஊழல் குற்றச்சாட்டு

கார்கில் போரின் போது இறந்த வீரர்களை அடக்கம் செய்ய சவப்பெட்டி கள் வாங்கப்பட்டன. அப்போது அதில் பணம் கையாடல் நடந்திருப்பதாக மத்திய தணிக்கைத் துறை சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இதையடுத்தே இதற்கு பொறுப்பேற்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பின.

ராஜ்ய சபையில் முதலில் பேச காங்கிரஸ் உறுப்பினர் அர்ஜுன் சிங்கிற்கு ராஜ்ய சபைத் தலைவர் கிருஷ்ணகாந்த் அனுமதியளித்தார். இதைத் தொடர்ந்து அர்ஜுன் சிங் பேசினார். ''கார்கில் போரில் இறந்த வீரர்களை அடக்கம் செய்ய சவப்பெட்டிகள் வாங்கப்பட்டன. அப்போது பலகோடிக்கு பணம் கையாடல் நடந்துள்ளதாக மத்திய தணிக்கைத் துறை சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பேற்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலக வேண்டும். இந்த ஊழல்,கார்கில் தியாகத்தில் இறந்த வீரர்களை அவமானப்படுத்தியது போல் உள்ளது.'' என்று அர்ஜுன் சிங் கூறினார். ''இந்தக் குற்றச்சாட்டுக்கு பொறுப்பேற்று பாதுகாப்புத்துறை அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.'' என்று எதிர்க்கட்சித் தலைவர் மன்மோகன் சிங் கோரிக்கை விடுத்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங், பாதுகாப்புத் துறையில் நடந்ததாக கூறப்படும் இந்தக் குற்றச்சாட்டு குறித்து இரு சபைகளிலும் விவாதிக்க தயாராக இருக்கிறோம்.கேள்வி நேரத்தில் இந்த விவாதத்தை எடுத்துக் கொள்ளலாம்'' என்றார்.

இதைத் தொடர்ந்து சபையில் கூச்சல் குழப்பம், ஏற்பட்டது. காங்கிரஸ் ,இடதுசாரி கட்சிகள் மற்றும் சமாஜ்வாடி கட்சி உறுப்பினர் கள் இருக்கையில் இருந்து எழுந்து சபையின் மையப் பகுதிக்குச் சென்று ''சவப்பெட்டி திருட்டு, பதவி விலகு'' போன்ற கோஷங்களை எழுப்பினர். இதனால் சபையை 12 மணி வரை ராஜ்ய சபைத் தலைவர் கிருஷ்ணகாந்த் ஒத்தி வைத்தார்.

மீண்டும் அவை 12 மணிக்குக் கூடியது. அப்போதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோஷம் எழுப்ப,சபை இரண்டு மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

இதே போல் லோக சபையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூச்சல் எழுப்பினர்.

இரு அவைகளிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையை நடத்த விடாமல் தொடர்ந்து கோஷம் எழுப்பியதால் லோக சபை துணை சபாநாயகர் பி.எம். சையீத், ராஜ்ய சபைத் துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா ஆகியோர் சபைகளை ஒத்தி வைத்தனர். இந்த ஊழல் குறித்து பத்திரிகையாளர்களிடம் மார்க்சிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சோம்நாத் சட்டர்ஜி விளக்கம் தந்தார். நம்முடைய வீரர்கள் நமக்காக தங்கள் உயிர்களை மாய்த்து வருகின்றனர். ஆனால் இவர்கள் நமது ஹீரோக்களின் இறந்த உடல்களை வைத்து பணம் சம்பாதித்தது அதிர்ச்சியை அளிக்கிறது. எனவே , பிரதமர் இதில்தலையிட்டு இதற்கு பொறுப்பான ஜோர்ஜ் பெர்னாண்டஸை பதவியில் இருந்து அகற்ற வேண்டும். இந்த விடயத்தில் அரசு மவுனமாக இருப்பது ஆச்சரியத்தை அளிக்கிறது. ஆளும் கட்சியினர் 'பொடோ' சட்டத்தை நிறை வேற்றுவதிலும் , உத்தரப்பிரதேசத் தேர்தலிலும் தான் அக்கறை கொண்டுள்ளனர். இரண்டு முறை ஊழல் புரிந்துள்ள ஒருவர் தொடர்ந்து பதவியில் இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவியில் நீடிப்பது நாட்டிற்கு ஆபத்தானது '' இவ்வாறு கூறினார் சட்டர்—ஜீ.

கார்கில் போரில் இறந்த வீரர்களை அடக்கம் செய்ய வாங்கப்பட்ட சவப்பெட்டிக ளில் எந்த ஊழலும் நடைபெறவில்லை என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார். இது குறித்து பத்திரிகையாளர்களுக்கு ஜோர்ஜ் அளித்துள்ள விளக்கம் வருமாறு:

''அமெரிக்காவில் வாஷிங்டனில் உள்ள ஒரு அமெரிக்க கம்பெனிக்கு சவப்பெட்டிகள் செய்யும் பணி கொடுக்கப்பட்டது. இக்கம்பனி 18 கிலோவில் ஒரு சவப்பெட்டி தயாரிக்க ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 500 ரூபா என விலை நிர்ணயித்தது . 150 சவப்பெட்டிகளுக்கு ஏற்பாடு



செய்யப்பட்டது.

கார்கில் போரின் போது அவசரத் தேவை ஏற்பட்டதால் விலை மதிப்பீடு செய்யப்படவில்லை. இந்த விலையில் வாங்க மத்திய பாதுகாப்புதுறையின் விலை நிர்ணயக்குழு அனுமதியளித்தது. ஆனால் 18 கிலோவிற்கு பதிலாக 54 கிலோ எடையில் சவப்பெட்டிகளை அமெரிக்க கம்பெனி தயாரித்ததால் அவற்றை இராணுவம் வாங்க மறுத்துவிட்டது. 150 சவப்பெட்டிகள் வாங்க 180 லட்சம் ரூபா மதிப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் இந்த சவப்பெட்டிகள் வாங்கப்படாததால் இந்தப் பணத்தில் 78 லட்சம் ரூபாவை இராணுவம் திரும்ப வாங்கிவிட்டது. இன்னும் 102 லட்சம் ரூபா வரவேண்டியுள்ளது. மீதித் தொகையை வாங்க முயற்சித்து வருகிறோம். பணத்தைக் கொடுக்க மறுத்தால் அரசு சார்பில் நீதிமன்றம் செல்வோம். தணிக்கைத்துறை கண்டுபிடித்தது உண்மையா இல்லையா என்பதை பொதுக்கணக்கு குழுவே முடிவு செய்து கொள்ளும் . இவ்வாறு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் விளக்கம் தந்திருக்கிறார்.

1999 ஆம் ஆண்டு நடந்த கார்கில் போரை எதிர்கொள்ள ரூ 2, 163 கோடி ரூபாவில் அவசரஅவசரமாக ஆயுதங்கள் வாங்கப்பட்ட தில் பெரும் முறைகேடுகள் நடந்துள்ளன.

இத்தகவலை இந்திய நாட்டின் தலை மைக் கணக்கு அதிகாரியான கம்ப்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஒப் இந்தியா (சி.ஏ.ஜி) தெரிவித்துள்ளார். இவரது அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

போரின்போது கிட்டத்தட்ட 123 ஆயுத பேரங்கள் நடந்தன. ஆயுதங்கள் வாங்க ரூ 2,163 கோடி ரூபா செலவிடப்பட்டது, 35 ஆயுத பேரங்களில் முறைகேடுகள் நடந்து அரசுக்கு அனாவசியமாக 1,046 கோடி செலவாகியுள்ளது.

போர்முடிந்த பின்னரும் கூட தொடர்ந்து போருக்குத் தேவையான ஆயுதங்கள் அவசரமாய் வாங்கிக் குவிக்கப்பட்டன. இதற்காக ரூ 2,150 கோடி ரூபா செலவிடப்பட்டது. போர் முடிந்த பின்னர் ரூ 1,606 கோடிக்கு ஆயுத ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. பல விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன.

இந்த முறைகேடுகளில் சவப் பெட்டிகள் கூட தப்பவில்லை. அமெரிக்காவைச்சேர்ந்த பைர்ட்ரான் அன்ட் பிரைஸ்நிறுவனத்திடம் 500 அலுமினிய சவப் பெட்டிகள் 3,000 பொடி பாக் எனப்படும் உடல்களை வைக்கும் பைகள் தருவிக்கப்பட்டன. சிலவற்றின் மதிப்பு 1.5 மில்லியன் ரூபா (6.55 கோடி இந்திய ரூபா)

ஒவ்வொரு அலுமினியப் பெட்டிக்கும் ரூ. 1.09 லட்சம் (2,500 டாலர்) வழங்கப்பட்டது. ஆனால், 5 ஆண்டுகளுக்கு முன் இதே பெட்டிகள் வெறும் 172 டாலருக்கு வாங்கப்பட்டன.

109 லட்சம் கொடுத்து பெட்டியை வாங்குவது குறித்து எந்த விதமான முன்அனுமதியும் பெறப்படவில்லை. விலையைக் குறைக்கவும் பேச்சு நடத்தப்படவில்லை. அவசரம் என் ற பெயரில் அமெரிக்க நிறுவனத்துக்கு பணத்தை அள்ளிக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதே நேரத்தில் திடீரென அந்த நிறுவனம் இந்தப் பெட்டிகளின் எடையை 18கிலோவிலிருந்து 55 கிலோவாகக் கூட்டப் போவதாகவும் இதனால் கூடுதல் பணம் தர வேண்டும் எனவும் இந்திய அரசிடம் கோரியது. இது குறித்து அரசு விவாதித்துக் கொண்டிருந்தபோதே, 55 கிலோ கொண்ட 150 பெட்டிகள் டெல்லி வந்து இறங்கின. அரசம் உடனே அந்த நிறுவனத்துக்கு ரூ 1.47 கோடி பணத்தை வழங்கியது.

ஆனால், அந்தப் பெட்டிகளை சோதனையிட்டபோது அவை உதவாதவை எனத் தெரியவந்தது. அதிக எடையுடன் இருந்தால் அவற்றைப் பயன்படுத்த முடியாது என ராணுவம் கூறிவிட்டது. மேலும் இந்த பெட்டிகளில் வெல்ட் வைக்கப்பட்டிருந்தது. மாறாக அவை மோல்ட் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனவே, அந்தப் பெட்டிகளை இராணுவம் நிராகரித்துவிட்டது. ஆனால், பெட்டிகளுக்கு பாதுகாப்புத்துறை பணம் தந்து விட்டது.

சவப்பெட்டிகளைத் தயாரிக்க விமானங்களுக்குப் பயன்படுத்தும் அலுமினியத்தை பயன்படுத்தியுள்ளதாக வும் இதனால் தான் விலை கூடுதலாக உள்ளதாகவும் கூறுகிறார்கள். ஆனால்,இதே அலுமினியத்தை இந்தியாவின் ஹிந்துஸ்தான் விமான ஆராய்ச்சி நிறுவனம் கிட்டத்தட்ட 10 மடங்கு குறைவான விலைக்குத் தான் இறக்குமதி செய்து வருகிறது.

ஆகவே ,சவப் பெட்டிகள் வாங்கியதில் பெரிய முறைகேடுகள் நிச்சயம் நடந்துள்ளன,

இவ்வாறு சி.ஏ.ஜி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்தச் செய்தி வெளியானதையடுத்து இந்தியா முழுவதுமே அதிர்ச்சி அலை பரவியுள்ளது.

இதன் மூலம் நாடும் நாட்டுக்காக உயிர் நீத்த வீரர்களும் அவமதிக்கப்பட்டுள்ளனர். நாட்டுக்குள் ஊடுருவிய தீவிரவாதிகளும் பாகிஸ்தானியர்களும் செய்த தீங்கைவிட அதிகமான கெடுதலை உள் நாட்டு அதிகாரிகளோ செய்துள்ளனர் என்று குற்றஞ் சாட்டப்படுகிறது.

—கதாசி

# சிறுவருக்கு வாழ்வளிக்கும் 'பீஸ் விலேஜ் ஸ்ரீலங்கா'

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அல்லது விபத்துக்கள் காரணமாக முழங்காலுக்குக் கீழ் கால்களை இழந்துள்ள அல்லது வேறுவகையில் பாதிக்கப்பட்டுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த 14 வயதுக்குக்குறைந்த சிறுவர், சிறுமியர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளித்து செயற்கைக்கால்களை பொருத்துவதற்கு 'பீஸ்விலேஜ் ஸ்ரீலங்கா' என்ற அமைப்பு முன்வந்துள்ளது.

இந்த அமைப்பு சிலாபத்தை அண்மித்த வலஹபிட்டிய என்ற இடத்தில் அதன் சிகிச்சை நிலையத்தையும், விடுதியையும் அமைத்து செயற்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் அல்லது அதற்கு முன்னர் இரண்டு ஜேர்மனிய சிகிச்சை நிபுணர்கள் வருகைதந்து சுமார் ஒரு மாதகாலம் வரை தங்கியிருந்து சிகிச்சை அளித்து, செயற்கைக்கால்கள் தயாரித்துப் பொருத்துவதில் பயிற்சியும் வழங்குவார்க ளென இந்த அமைப்பின் தலைவரும் ஜேர்மன் பிரஜையுமான டியட்மார் டோரிங் தெரிவித்துள்ளார்

தற்போதைக்கு சுமார் ஐம்பது குழந்தைகளுக்கு இந்தவகையான சிகிச்சை அளிக்க முடியுமென்று டோரிங் தெரிவித்தார்.

மேலதிக நிபுணத்துவ சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை இந்த அமைப்பு அதன் சொந்தச் செலவில் ஜேர்மனிக்கு அனுப்பி சிகிச்சை அளிக்கும் என மேலும் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளான ஆப்கானிஸ்தான், வியட்நாம் உட்பட இருபது நாடுகளில் 'பீஸ்விலேஜ் இன்டர்நஷனல், (Peace Village International) ஏற்கனவே இவ்வகையான சேவைகளை வழங்கிவருகின்றது.

சிகிச்சை பெற விரும்புவோர் டியட்மார் டோரிங் — பீஸ்விலேஜ் —ஸ்ரீலங்கா, மேபா,எக்வேரியஸ் பீச் ஹோட்டல், பீச் வீதி, மாறவில என்ற விலாசத்துடன் டிசம்பர் 15ஆம் திக திக்கு முன்பு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே செயற்கைக்கால்கள் பொருத்தப்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் புலிகள் நடத்திய இரு பதிலடித் தாக்குதல்கள்

## புதிய அரசு பதவி ஏற்றபின் எதிர்நோக்கிய முதலாவது சவால்

மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்காக 32 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், மற்றும் பொலிஸ் நிலையம் ஆகிய வற்றின் மீதும், மூதூர் நகரிலிருந்து 5 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள பாலத்தோப்பூர் இராணுவ புலனாய் வுப் பிரிவு முகாம் மீதும் விடுதலைப் புலிகள் 11ஆம் திகதி செவ்வாய் நள்ளிரவு 11.30 மணி யளவில் தாக்குதல் நடத்தினர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின் நடத்தப்பட்ட முதலாவது தாக்குத ல்கள் இவை ஆகும்.

இத்தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் சவாலையும், பலத் தையும் காட்டுவதற்கு நடத்தப் பட்டவை எனத் தெரிவிக்கப் படுகிறது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்ட தினமான 6ஆம் திகதி இரவு பலியான விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை படைத் துறைப் பொறுப் பாளர் கேணல் ஜீவன் நினைவாக வாழைச் சேனை உதவி பொலிஸ் அத்தி யட்சகர் அலுவலகமும் பொலிஸ் நிலையமும் தாக்கி அழிக்கப் பட்டன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

### ஜீவன் பலியானது எப்படி?

கடந்த 6ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை படைத்துறைப் பொறுப்பாளர் கேணல் ஜீவன் தலைமையிலான அணி ஒன்று வாகனேரி மியாங்குளம் பகுதியால் பிரதான வீதியை கடக்க முற்பட்ட வேளையில் அங்கு மறைந்திருந்த இராணுவத்தினர் தாக்குதலை நடத்தினர். இந்த எதிர்பாராத தாக்குதலில் கேணல் ஜீவன் உட்பட எட்டுப்போராளிகள் பலியாகினர். அவர்களின் ஆயுதங் களையும் படையினர் எடுத்துச் சென்றனர்.

கேணல் ஜீவன் வன்னியில் ஜயசிக்குறு எதிர்தாக்குதல் மற்றும் ஆனையிறவு சமர் உட்பட ஓயாத அலைகள் — 3 தாக்கு தல்களில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவர். ஜெயந்தன் படைப் பிரிவின் முக்கிய தளபதிகளில் ஒருவர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் படைமுகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு தலைமை வகித்துச் சென்றவர்.

கேணல் ஜீவன் மற்றும் அவருடன் உயிர்நீத்த போராளிகளின் நினை வஞ்சலி நிகழ்வுகள் செவ்வாய் க்கிழமை வாகரை, கண்டலடி, கதிரவெளி, பாலச்சேனை, பணிக்கேணி, ஆண்டான்குளம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.

ஆண்டான்குளம் பிரதேச படைத்துறைப் பொறுப்பாளர் நிசாம் தலைமையில் இந்நிகழ்வுகள் நடை பெற்றன. இந்நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் பிரதேச தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். கேணல் ஜீவனின் நினைவாக படையினருக்கு பாரிய பதிலடி கொடுக்குமுகமாக அன்றிரவே வாழைச்சேனை பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தைச்சுற்றி கும்புறுமூலை இராணுவ முகாம், கிரான் இராணுவ முகாம், காகிதஆலையில் அமைந்து ள்ள 232வது படைப்பிரிவு தலைமை யகம், துறைமுக இராணுவ முகாம், கல்குடா இராணுவ முகாம் என்பன உள்ளன. மிகுந்த பாதுகாப்பு வலயம் ஒன்றுக்குள்ளேயே இப்பொலிஸ் நிலையம் உள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணி தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னரே பொலிஸ் நிலையத்தை சுற்றியுள்ள இராணுவ முகாம்களி லிருந்து இராணுவத்தினர் வெளியே றாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் ஆரம்பமானதும் உதவிக்கென இந்த முகாம்களிலிருந்து புறப்பட்ட இராணு வத்தினர் மீது விடுதலைப்புலிகளின் அணிகள் தாக்குதல்களை மேற் கொண்டதால் இராணுவத்தினர் தங்க ளது முகாம்களை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டது.

புதன்கிழமை காலையில் விடுதலைப்புலிகளின் அணிகள் விலகிச் சென்றபின்னரே முகாம் களை விட்டு இராணுவத்தினரால் வெளியேற முடிந்தது. இந்த த்தாக்குதல் வெற்றிக்கு விடுதலைப்புலிகளால் இராணுவ முகாம்களுக்குப் போடப்பட்ட தடுப்பு, தாக்குதல் அணிகள் பலமாக இருந்தமையும் ஒரு காரணமென கூறப்படுகிறது.

பொலிஸ் நிலையம், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் என்பனவற்றின் மீது நள்ளிரவு 11.30 மணியளவில் விடுதலைப்புலிகள் மோட்டார் மற்றும் சிறிய ரக ஆயுதங் களைக் கொண்டு தாக்குதலை ஆரம்பித்தனர். சுமார் இருமணிநேரம் கடும் சமர் நீடித்தது என்றும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது பொலிஸார் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதன் அதிகாலை சுமார் 1.30 மணியளவில் பொலிஸ் நிலை யத்தையும், உதவிப்பொலிஸ் அத்தி யட்சகர் அலுவலகத்தையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். இத் தாக்குதலில் சப்இன்ஸ்பெக்டர் உட்பட 6 பொலிஸார் பலியாகினர். 12 பொலிஸார் காயமடைந்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள ரெலிக்கொம் அலுவலகமும் இத்தாக்குதலினால் சேதமடைந்தது. ரெலிக்கொம் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் பலியானார். பொலிஸ் நிலையத்தை அண்டிய சில அலுவலகங்களும் சேதமடைந்தன.

வாழைச்சேனை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு அருகிலேயே உதவிப்பொலிஸ் அத்தியட்சகரின் விடுதியும் அமைந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கான சமயம் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அங்கிருக்கவில்லை. செவ்வாய்க்கிழமை காலையில் அவர் விடுமுறையில் சொந்த ஊருக்கு சென்றிருந்தார் என்று தெரிவிக்கப் படுகிறது.

### ஆயுதங்களை எடுத்துச்சென்றனர்

பொலிஸ் நிலையத்தை கைப்பற்றிய விடுதலைப்புலிகள் அங்கிருந்த ஆயுதக் கிடங்கினை உடைத்து பெருந் தொகை யான ஆயுதங்களையும் எடுத்துச் சென்றனர். தங்களால் கொண்டு செல்ல முடியாத மற்றும் பாவனைக்குதவாத ஆயுதங் களைத் தீயிட்டு கொளுத்தினர். ஆயுதக் களஞ்சிய சுரங்கஅறை முற்றாக சேதமடைந்தது.

பொலிஸ் நிலைய உடைமைகள், பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக உடைமைகள் அனைத்திற்கும் தீ வைத்த துடன் கட்டடங்களையும் சேதமாக்கினர்.

பொலிஸ் நிலையத்தில் உள்ள பல ஆவணங்கள் எரிந்து சாம்பலா கிவிட்டன என்று பொலிஸ் வட்டா ரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் நிலையத்திற்கு சொந்த மான ஜீப், வான் என்பனவற்றையும் புலிகள் தீயிட்டுக் கொளுத்தினர். இத்தாக்குதலில் ஏ.கே. எல்.எம்.ஜி, ரி 56 துப்பாக்கிகள், எறிகணைகள், உட்பட பெருந்தொகையான ஆயுதங் களையும் தொலைத்தொடர்பு கருவி களையும் புலிகள் கைப்பற்றிச் சென்றனர் என்று படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமது தளபதி மீது தாக்குதல் நடத்திய படையினர் மீது விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இதன் மூலம் தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் கடுமையான எதிர்த்தாக்குதல் நடத்தப்படும் என்ற செய்தியையும் படையினருக்கு இத்தாக்குதல் மூலம் புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

### மூதூரில் தாக்குதல்

இதே போன்ற பதில் தாக்குதல் ஒன்றே மூதூர் பாலத்தோப்பூரிலும் நடத்தப்பட்டிருக்கிறது. மூதூர் பாலத்தடியில் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் கடந்த 9 ஆம் திகதி மறைந்திருந்து தாக்குதல் நடத்தியதால் விடுதலைப்புலிகள் உறுப்பினர் மூன்றுபேர் பலியானார்கள். இதற்கு பதில் தாக்குதலாகவே பாலத்தோப்பூர் இராணுவ புலனாய்வு பிரிவு முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 12 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

முன்னரங்க காவல் அரணை கைப்பற்றி சில மணிநேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகள் அங்கிருந்து 81 மி.மீ. எறிகணை, ஏ.கே.எல்.எம்.ஜி உட்பட சில ஆயதங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த வாரத்தில் மட்டக்களப்பில் குறிப்பிடக்கூடிய மற்றொரு தாக்குதலும் இடம் பெற்றுள்ளது. 10 ஆம் திகதி அதிகாலை மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் மறைந்திருந்து தாக்குதல் நடத்தச் சென்ற இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் இராணுவ ப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சற்குருநாதன் என்பவர் கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிகளுக்கு பெரும் சவாலாக இருந்து வந்த நிதிகுறூப்பைச் சேர்ந்தவரே குயில் என்றழைக்கப்படும் சற்குருநாதன். இவரின் சகாக்களான நிதி, ரமேஷ், டோரா ஆகியோர் கடந்த மாதம் மட்டக்களப்பு நகரில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். தம்மீது தாக்குதல் நடத்தினால் கடுமையான பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்பதையே விடுதலைப்புலிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் புலப்படுத்துகின்றன.

— துவாரகன்




### நெட் → மொபைல் — SMS அனுப்பலாம்

எஸ்.எம்.எஸ் அனுப்பி யிருக்கிறீர்களா? என்னிடம் செல்போன் இல்லையே என்கிறீர்களா? செல்போன் இல்லாத துரதிஷ்டசாலி களும் இந்தப் புதுமையான வெப்சைட் மூலம் நண்பர்களுக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பலாம். அவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சரி. அதுவும் இலவசமாக.

எஸ்.எம்.எஸ். என்றால் என்ன என்று கேட்பவர்களுக்கு:

உங்கள் கையில் இருக்கும் மொபைல் போன் மூலம் உங்கள் சக மொபைல் பயனாளிகளுக்கு நீங்கள் அனுப்பும் சின்னச் சின்ன குறிப்புகள் தான் எஸ்.எம்.எஸ். (Short Mesaging Service)இது 'சீக்கிரம் அந்த ஃபைலை அனுப்பும் ' என்பது முதல் 'ஹாய் டியர், இன்னிக்கு ஈவினிங் மறக்காதே ' என்பது வரை என்ன மெசேஜாகவும் இருக்கலாம்.

www.sms.ac, மொபைல்போன் இல்லாதவர்களும் எஸ்.எம்.எஸ். அனுப்ப உதவுகிறது. இது மொபைல் பயனாளி களுக்கான ஒரு சேட்டிங்சைட் மாதிரியும் இருக்கிறது. நீங்கள் லாக்— இன் செய்திருக்கும் நேரத்தில் எத்தனை பேர் மொபைல் போனை ஆன் செய்து வைத்திருக்கிறார்கள் என்பதையும் காட்டும்.

அவர்கள் எந்த நாட்டவர்கள், அவர்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறது என்கிற மாதிரியான தகவல்களைத் தரும். உங்களுக்கு விருப்பம் இருந்தால் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளலாம்.

நீங்கள் மொபைல்போன் வைத்திருந்தால் உங்கள் நம்பரைக் கொடுத்து வைக்கலாம். உங்களுக்கு அனுப்பப்படும் மெசேஜ்களை ஃபோனிலும் பார்க்கலாம், இன்பாக்ஸிலும் பார்க்கலாம்.



# வாய்ப்பு வந்தால் நடிப்பாராம் தேவயானி


தேவயானி

வலிய வந்து வாய்ப்புக்கேட்க மாட்டேன் வாய்ப்பு வந்தால் நடிப்பேன். என்று ஸ்டேட் மென்ட் கொடுத்து வருகிறார் தேவயானி. தேவயானி திருமணம் செய்து கொண்டதனால் சில படங்களில் இருந்து நீக்கப்பட்டார். ஒரு சிலர் திருமணத்திற்குப்பின்னர் தேவயானி நடிக்கமாட்டார் என்றும் எண்ணியிருந்தனர். இதனால் படக்கம்பனிகளில் தேவயானியைக்கண்டவுடன் அவர் வலியச்சென்று வாய்ப்புக் கேட்பதாகக்கதையும்கட்டிவிட்டனர். இப்போது ஆரவாரமில்லாமல் ஐந்தாறு படங்களில் நடித்துவருகிறார். இதனாலேயேவலியச்சென்றுவாய்ப்புக் கேட்க மாட்டேன் என்று கூறியிருக்கிறார்.

'பிரகாஷ் ராஜ் —மீனா ஜோடியாக நடிக்கும் பிரகாஷ் ராஜின் சொந்தப் படமான 'தயா' படத்தின் படப்பிடிப்பு பாதி முடிவடைந்து விட்டது. தெலுங்கில் 'தயா' விற்கு என்ன பெயர் தெரியுமா? 'நந்தா' .(அட இது தெலுங்கு நந்தாங்கோ)

# சிம்ரனின் மச்சராசி பிரசாந்தை தூக்கி நிறுத்துமா?

## அவரே கூறுகிறார்

சிம்ரனின் உடலிலுள்ள மச்சங்கள் எத்தனை? அந்தந்த மச்சத்திற்குரிய பலன்கள் என்ன! என்பதைப் பற்றி பழனி பாரதி பாடலாக வடித்திருக்க அந்தப் பாடலுக்கு வாயசைத்தபடி சிம்ரனுடன் டூயட் பாடிக் கொண்டிருந்தார் பிரசாந்த். அவரது அணைப்பில் சிணுங்கிக் கொண்டிருந்தார் சிம்ரன். 'தமிழ்' படத்திற்காக இப்பாடலை படமாக்கிக் கொண்டிருந்தனர். பாடலை ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்தார் ப்ரியன். பேக் முடிந்து ஓய்வாக கதிரையில் நடிக, நடிகையர் வந்தமர்ந்தனர். கோர்ட்டொன்றை அணிந்த வாறு வந்தமர்ந்த சிம்ரனை ஒய்வெடுக்க விடாது பேச்சுக் கொடுத்தோம். சிரித்தபடியே உரையாடினார்.


பிரசாந்த் —சிம்ரன்

கே: எல்லா பேட்டிகளிலும் நீங்கள்தான் ராஜு சுந்தரத்தைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் என்று கூறுகிறீர்கள். ஆனால் சுந்தரம் ஸார் இதைப்பற்றி வாயே திறப்பதில்லையே என்றதும்,

ப:ப்ளீஸ். மேரேஜ் பற்றிய கேள்விகள் போரடித்து விட்டது.ரிலாக்ஸ்ஸாக வேறு ஏதாவது பேசலாமே என்றார் செல்லச் சிணுங்கலுடன்.

கே:அப்படியென்றால் உங்கள் திருமணம்!

ப:திருமணத்தைப்பற்றி நிறையச் சொல்லி விட்டேன். இனிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. திருமணம் நடக்கும் போது உங்களுக்கும் தெரியும்தானே

கே:புதிய பலபடங்களில் ஒப்பந்தமாகியுள்ளீர்கள் போலுள்ளதே?

ப:புதிய படங்கள் என்று சொல்வதற்கில்லை. ஏற்கனவே ஒப்பந்தமான படங்களின் படப்பிடிப்புகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

கே:'பாப்கார்ன்' படத்தில் உங்களுடைய கடைசித் தங்கை ஜோதியும் அறிமுகமாகப் போகிறாராமே!

ப:ஆமாம்.

கே:வீடு மாறப் போகிறீர்கள் என்று செய்தியடிபட்டதே?

ப: ஆமாம். வாடகை வீட்டிலிருந்து வெளியேறி கொட்டிவாக்கம் பகுதியில் வாங்கப் போகும் சொந்த பங்களாவிற்கு விரைவில் குடியேறப்போகிறேன்.

கே:ஆங்கிலப் படமொன்றிலும் ஒப்பந்தமாகியுள்ளீர்களா?

ப: ஆமாம். 'தேவதாசி1930' என்ற படத்தில் நடிக்கிறேன்.

கே: மணிரத்னம் ஸாரின் டைரக்ஷனில் நடித்த அனுபவம் பற்றி...!

ப: ஹீ இஸ் கிரேட் மேன். மற்ற இயக்குநர்களின் படங்களில் நடித்ததற்கும் அவருடைய படங்களில் நடித்ததற்கும் நிறைய வித்தியாசத்தை உணர முடிந்தது.

படம் முழுவதும் மேக்கப்பே இல்லாமல் ஒரே மாதிரியான ஹேர்ஸ்டைலில் நடிக்க வைத்திருந்தார்.

படப்பிடிப்பில் அவர் அதிகம் பேசமாட்டார்.ஆனால் அவர் உருவாக்கும் காட்சிகள் மக்களிடையே அதிகம் பேசப்படும் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்ள முடிந்தது.


சிம்ரன்

கே:கமலுடன் முதன் முதலாக 'பம்மல் கே. சம்பந்தம்' படத்தில் இணைந்து நடித்துள்ளீர்கள்?

ப: ஆமாம். கமல் ஸார் மிகப் பெரிய நடிகர் ஒவ்வொரு காட்சியில் நடித்த போதும் அவரிடமிருந்து புதிய புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது.அந்தப்படமே நகைச் சுவை கலந்த கதை என்பதனால் படப்பிடிப்பு முழுவதும் கலகலப்பாக இருந்தது.

கே: உங்கள் தங்கை மோனல் எப்படி இருக்கிறார்?

ப:முன்னேறிக் கொண்டிருக்கிறார். (நடிப்பில்)

கே:தற்போது நீங்கள் நடித்து வரும் படங்களின் பெயர்களைக் கூறுங்களேன்? விஜய்யுடன் 'உதயா' மாதவனுடன் 'குடை' கமல் ஸாருடன் பம்மல்கே. சம்பந்தம்

என் காதலருடன் (ராஜு சுந்தரம்) 'ஐ லவ் யூடா' பிரசாந்துடன் 'தமிழ்' மோகன் லால் ஸாருடன் 'பாப்கார்ன்' தெலுங்கில் பாலகிருஷ்ணா வுடன் 'சீமா சிம்மன்' போன்ற படங்களில் நடித்து வரு கிறேன்.

கே: சமீப காலங்களில் பிரசாந்தின் படங்கள் எதுவும் ஹிட் ஆகவில்லை. உங்களுடன் சேர்ந்து நடிக்கும் மச்சராசி அவரை தூக்கி நிறுத்தும் போலிருக்கிறதே?

ப: அது அவரைத்தான் கேட்க வேண்டும்.

கே:ரம்பாவின் சொந்தப் படமான 'த்ரீரோஸஸ்' படத்துக்காக அட்வான்ஸ் வாங்கிய நீங்கள் பின்னர் அப்படத்தில் நடிக்க மறுத்து விட்டீர்கள் என்று செய்திகள் உலா வருகின்றனவே.

ப: அது அப்பட்டமான பொய். த்ரீரோஸஸ் படத்துக்காக ரம்பாவின் அண்ணன் வாசு என்னிடம் கால்ஷீட் கேட்டது உண்மைதான். ஆனால் கதை கேட்டபோது எனக்கு அந்தக் க்ரெக்டர் பொருந்தாது என்று தோன்றியதனால் மறுத்துவிட்டேன். ஆனால் நான் அந்தப் படத்தில் நடிப்பதற்கென அட்வான்ஸ் எதுவும் வாங்கவில்லை.

—ஷாம்

# "லவ்மேரேஜ்" ரிலீஸுக்கு ரெடி

கே. சுபாஷின் இயக்கத்தில் அஜய்— ரஞ்சனா நடித்த படம் 'லவ் மேரேஜ்'. தெலுங்கில் மாபெரும் வெற்றியைப் பெற்ற 'சுயம்வரம்' என்ற படத்தையே தமிழில் 'லவ்மேரேஜ்' ஆக்கியிருக்கிறார்கள்.

வித்தியாசமான கோணத்தில் காதலைச்சொல்லும் இப்படம் நகைச்சுவை, சென்டிமென்ட் என அனைத்து தரப்பினருக்கும் பிடிக்கும் வகையில் உருவாகி இந்த மாதம் திரைக்கு வரப்போகின்றது. திருமணத்தின் மீது நம்பிக்கை யில்லாதவன் லவ்மேரேஜின் நாயகன். முரண்பாடான சிந்தனை கொண்ட இந்த நாயகன் காதலை வரவேற்கிறான் இது எப்படி? இந்தக்கேள்விக்கு விடை சொல்ல வருகிறது 'லவ்மேரேஜ்'.


மீனா

# திரை மறைவில்

அம்மா அனுவின் ஆலோசனைப்படி. அங்கங்களை மெருகேற்றிக் கொண்டார் அபி நடிகை. அம்மணி நடித்த 'சப்தம்' சத்தமில்லாமல் அவரை ஏற்றிவிட்டிருக்கின்றது. படத்தின் கிளுகிளு அம்சமே அம்மணி தானாம். இன்னமும் கதாநாயகியாக நடிக்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தாலும் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி எப்படியாவது முன்னேறி விடுவேன் என்று தன்னம்பிக்கையுடன் கூறிவருகிறார்.

* *

ஸ்நேக நடிகை சிகர இயக்குநர் மேல் கோபமாக இருக்கிறார். வயசானாலும் அவருக்கு இன்னும் மன்மதன் என்ற நினைப்பு போகவில்லை. வாலாட்டினால் ஒட்ட நறுக்கிவிடுவேன் என்று மறைமுக எச்சரிக்கையும் விடுத்து வருகிறார். அம்மணி நடித்த தேசப் புன்னகைத்தாலும் அம்மணியினால் புன்னகைக்க முடியவில்லையாம் ஏனோ?

* *

சங்கத்தின் கவி சாப்பாட்டைக் குறைத்து டயட்டில் இருந்து உடல் மெலிந்திருக்கிறார்.

ஆனால் அவரைப் பார்ப்பவர்கள் நோயாளியை விசாரிப்பது போல விசாரிக்கிறார்களாம். மறுபடியும் கண்டதை விழுங்கி குண்டாகும் முயற்சியைத் தொடங்கலாமா? என்று தனது ஆலோசகரான டென்டல் டொக்டர் தாயாருடன் ஆலோசித்து வருகிறாராம்.

ஷாஜகான் படத்தில் தியேட்டரில் ரசிகர் களைக் கட்டிப்போட்ட ஒன்று 'பிஷ்' நடிகை யின் சரக்கு வச்சிருக்கேன் அதை இறக்கி வச்சிருக்கேன் என்ற பாட்டுத்தானாம். 'பிஷ்' நடிகையைப் பப்ளிக்கில் கண்டாலும் ரசிகர்கள் இந்தப் பாடலைப்பாடத் தொடங்கி விடுகிறார்களாம். இந்தப்பாடல் 'கட்டிப் புடிடா' பாடல் போன்று மக்களைக் கவர்ந்திருக்கிறது. அதனால் 'பிஷ்' நடிகையையும் கட்டிப் புடிடா மும்தாஜின் லிஸ்டில் சேர்த்து விடுவார்களோ என்று நடிகை தவித்துக் கொண்டிருக்கிறாராம்.


ஷாம் —ஜோதிகா

# ஜோதிகா போட்டோவுக்கு தட்டை

''எந்ததமிழ்போட்டோகிராபருக்கும் போஸ் கொடுக்க மாட்டேன்'' என்று அறிவிப்புச் செய்திருக்கிறார் ஜோதிகா. இதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. கடந்தவருடம் அம்மணியைப் போட்டோ எடுத்தவர்களில் பெரும்பாலானோர் அம்மணியின் தொப்புள் வெளித் தெரியும்படி போட்டோ எடுத்து விட்டார்களாம். அந்தப் போட்டோக்கள் பத்திரிகைகளிலும் வெளியாகி விட்டன. அதைப் பார்த்துப் பழகிய ரசிகர்கள் ஜோதிகாவின் தொப்பையைப் பெரிது படுத்தி விட்டார்களாம் கடிதங்களிலும் ஈ—மெயில்களிலும் ஜோதிகாவை விசாரிப்பதைவிட அதிகமாக அவருடைய தொப்பையை விசாரித்து இருக்கிறார்களாம்.




## விஜய்க்கு சற்றும் சளைக்கவில்லை ப்ரியங்கா

'தமிழன்' படத்தில் விஜய்யுடன் ஜோடி சேர்வதற்காக கோடம் பாக்கம் வந்திருக்கிறார் ப்ரியங்கா சோப்ரா.

சமீபத்தில் இசையமைப்பாளர் இமான் இசையில் விஜய் — ப்ரியங்கா சோப்ரா நடிக்கும் ஹார்ட் பார்ட்டி ...ஹார்ட் பார்ட்டி உள்ளுக்கு சிம்லா ஊட்டி.........என்ற பாடல் காட்சி பிரசாத் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

இளையதளபதி விஜய்யின் துள்ளல் நடனத்திற்குச் சற்றும் சளைக்காத விதத்தில் நடன மாடி அங்கிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தி விட்டாராம் ப்ரியங்கா.

## ரோஜா, பானுப்பிரியா நடிக்கும் 'கற்பூரநாயகி'

'வீடு, மனைவி, மக்கள்', 'பட்ஜெட் பத்ம நாபன்' 'மிடில் கிளாஸ் மாதவன்' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கிய டி.பி கஜேந்திரன் அடுத்துப் பரவசமூட்டும் பக்திப் படம் ஒன்றைத் தயாரிக்கப் போகின்றார். ரோஜா, பானுப்பிரியா, சஞ்சய் வினுச்சக்கரவர்த்தி, செந்தில், அலெக்ஸ், வெண்ணிற ஆடைமூர்த்தி, வாசுவிக்ரம் ஆகியோர் நடிக்கின் றனர். படத்தின் பெயர் 'கற்பூர நாயகி' லட்சுமி கல்யாணி கம் பைன்ஸ் சார்பில் டி.எஸ். ரேவதி அதிக பொருட் செலவில் தயாரிக்கும் படம் இது. ஒளிப்பதிவு ராஜராஜன். இசை — தேவா.



சம்யுக்தா வர்மா

## அடம்பிடிக்கிறார் அஜித்

'சிட்டிசன்' படத்திற்குப் பிறகு 'ரெட்' படத்தில் நடித்து வருகிறார் அஜித்குமார்.

'சிட்டிசன்' தந்த பாடத்தினால் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் நடிப்பில் கவனமெடுத்து நடித்து வருகிறார். தான் நடிப் பதாக இருந்த 'வாமனா' 'நியூ' போன்ற படங்களி லிருந்தும் விலகி விட்டாராம் அதே போன்று 'தீனா' இயக்குநர் கார்த்தி கேயனின் தயாரிப்பில் கவுதமின் இயக்கத்தில் நடிப்பதாக இருந்த படத்திலும் இப்போது அஜித் நடிக்கவில்லை. 'ரெட்' படம் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு வெளியாகும் வகையில் உருவாகி வருகின்றது. படம் தைப்பொங்கலுக்கு வெளியான பின்னரே வேறு படங்களில் நடிப் பதைப்பற்றி யோசிப் பாராம். இப்போ தைக்கு புதிய படங்களிற்குக் கால்ஷீட் வழங்க மாட்டேன் என்று அடம் பிடிக்கி றாராம்.



லைலா
படம்:— 'த்ரீ ரோஸஸ்'

## மீனாவைப் பார்த்து பொறாமைப்படுகிறார் குஷ்பு

'காதலே சுவாசம்' படத்தில் வித்தியாசமான தலையலங்காரத்துடன் நடித்திருக்கிறார் மீனா. இப்படத்தின் பாடல் கசெட் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் குஷ்பு கலந்து கொண்டு பேசினார். அவர் பேசுகையில், மீனாவின் அழகைப் பற்றி நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அழகு தேவதையாக இருக்கும் அவர் இந்தப் படத்தில் இந்த வித்தியாசமான தலையலங்காரத்தில் இன்னும் அழகாகத் தெரிகிறார். அவரைப் பார்க்கும்போது எனக்குப் பொறாமையாகவும் இருக்கின்றது என்றார்.

உடனே அருகிலிருந்த மீனா, உங்கள் பாராட்டுக்கு நன்றி. உங்கள் அழகு கோயில் கட்டவைத்த அழகல்லவா? என்று பாராட்டினார்.

*டைரக்டர் சேரனும் கதாநாயகனாக நடிக்க வந்து விட்டார். படத்தின் பெயர் 'பொக்கிஷம்' படத்தை இயக்குவதும் அவரேதான்

## அசத்த வருகிறார் சம்யுக்தா வர்மா

தமிழில் நடிப்பதா? மாட்டேன்! மலையாளப்படவுலகை விட்டு விட்டு வரமாட்டேன் என்று அடம்பிடித்துக் கொண்டிருந்தவர் சம்யுக்தா வர்மா.

இப்போது இவரை ஆசைகாட்டி அழைத்து வருகின்றனர் 'அசோகா' யூனிட்டினர். கே. பிரபாகரனின் தயாரிப்பில் ஷாஜி கைலாஷ் இயக்கும் அசோகா படத்தில் அர்ஜுன் ஜோடியாக நடிக்கிறார். இதனைத் தொடர்ந்து சரத்குமார், நெப்போலியன் நடிக்கும் தென்காசிப் பட்டணம் படத்திலும் கதாநாயகியாக நடிக்கிறார்.

## பிரதியூஷாவின் கவர்ச்சிக் கண்டிப்பு

சின்னச்சின்ன வேடங்கள் என்றாலும் முகம் சுளிக்காமல் ஒத்துக்கொண்டு நடித்து வருகிறார் பிரதியூஷா. மற்ற நடிகைகளை தயாரிப்பாளர்கள் தான் கவர்ச்சியாக நடிப்பதற்கு வற்புறுத்து வார்கள். ஆனால் பிரதியூஷாவின் விஷயத்தில் தலைகீழாக இருக்கிறது.

படத்திற்குத் தன்னை ஒப்பந்தம் செய்யவரும் போதே கண்டிப்பாக தன் சம்பந்தப்பட்ட கவர்ச்சிக் காட்சி இருக்க வேண்டும் என்று கூறிவருகிறார்.

சம்பள விஷயத்திலும் அதிக கட்டுப்பாடு விதிப்பதில்லை. இதனால் கைவசம் பல படங்களை வைத்திருக்கும் அவரின் ஒரே இலட்சியம் சம்பளம் மட்டும்தானாம்



சத்யராஜ் — பிரதியூஷா
படம்:— 'விவரமான ஆளு'

*தமிழ்ப்படங்களில் பாட்டு எழுதியே சொந்தமாக கார் வாங்கி விட்டார். கவிஞர் பா.விஜய்

*அஜித் பக்திப்பட மொன்றில் நடிக்கப் போகிறார் படத்தின் பெயர்— 'முருகா முருகா'

*நடிகர் ராமராஜனின் காட்டில் இப்போது அடை மழை பெய்ய ஆரம்பித்திருக்கின்றது. 'பொன்னான நேரத்தினைத் தொடர்ந்து. 'சொந்த ஊரு சோழவந்தான்' என்ற படத்தை தனது அண்ணனின் மகன் சுரேஷ் காந்த் பெயரில் தயாரிக்கிறார். மதுரை ஏரியாக் களைத்தானே வாங்கிக் கொண்டு பொன்னான நேரத்தை ரிலீஸ் செய்தார். படம் நன்றாக வசூலைக்கொடுத்திருக்கிறது. இந்தத் தைரியத்தில் தான் சொந்த ஊரு சோழ வந்தானைத் தயாரிக்கப் போகிறார்

### இனி இவங்கள்

*மோனலைத் தொடர்ந்து சிம்ரனின் கடைசித் தங்கை ஜோதியும் நடிக்க வந்து விட்டார். 'பாப்கார்ன்' படத்தில் சிம்ரனின் மகளாக நடிக்கிறார்.

## தென்காசிப்பட்டணத்தில் சரத்குமார்—தேவயானி

'நான் புடிச்ச மாப்பிள்ளை' பொறந்த வீடா புகுந்த வீடா', விரலுக்கேத்த வீக்கம், காலம் மாறிப் போச்சு, வீட்டோட மாப்பிள்ளை உட்பட பல வெற்றிப்படங் களைத் தயாரித்த திருவள்ளுவர் கலைக் கூடம் சார்பில் எஸ். எஸ். துரை ராஜ் தயாரிக்கும் படம்— தென் காசிப் பட்டணம். மலையாளத்தில் மிகப் பெரிய வெற்றி யைப் பெற்றுள்ள இப் படத்தின் தமிழ்ப் பதிப்பு இது. சரத் குமார்— தேவயாணி, சம்யுக்தா வர்மா ஆகியோர் நடிக்கின்றனர்.

இவர்களுடன் பி.வாசு, விவேக், வினுச் சக்கரவர்த்தி, சார்லி, வையாபுரி, குமரிமுத்து, தியாகு, ஸ்ரீவித்யா ஆகியோரும் நடிக்கின்றனர்.



## அற்புத அழகி அனுபிரபாகர்

'அற்புதம்' படத்தின் கதாநாயகி அனுபிரபாகர். நடிகர் அர்ஜுனுக்கு நெருங்கிய உறவினர். இருபதுக்கும் மேற்பட்ட கன்னட படங்களில் நடித்தவர். தமிழில் பல நிறுவனங்கள் நடிப்பதற்கு அழைத்தும் சம்மதிக்க மறுத்தவர். சூப்பர் குட் பிலிம் ஸினர் அழைத்ததுமே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

கலகலவென பழகி அருமையாகப் பேசும் அனு கவர்ச்சியாகவும் நடிக்க முடியும் அதே நேரம் நடிப்புத்திறமை யையும் வெளிப்படுத்த முடியும் என்ற ஆரம்ப அறிவிப்புடன் களமிறங்கியிருக்கிறார்.

## பிரசாந்தின் ஜோடியாக ஆர்த்தி அகர்வால்

மதர் இந்தியா மூவிஸ் இன்டர் நேஷனல் சார்பில் ஆர். பூமாராமச்சந்திரன் அதிக பொருட் செலவில் தயாரிக்கும் படம் 'வின்னர்'. இதில் பிரசாந் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக ஆர்த்தி அகர்வால் அறிமுகமாகிறார். அமெரிக்க இறக்குமதியான ஆர்த்தி அகர்வாலின் பூர்வீகம் குஜராத்தி தமிழ்த் திரையுலகில் இப்பொழுதுதான் காலடி வைத்துள்ளார். வந்தவுடன் ஆர்த்தி முதல் செய்த வேலை தமிழ் கற்றுக் கொள்ள ஆரம்பித்தது தானாம்.

## மாதவ நடிகரின் மறுபக்கம்

மும்பாய் சின்னத் தொடர்களில் நடித்ததன் மூலம் விளம்பரத் திரையுலகில் புகுந்தவர் மாதவ நடிகர்.

அப்போது அவர் தான் இத்தனை பெரிய ஹீரோவாக வருவார் என்றோ தமிழ் ரசிகைகள் தன்னை தலைமேல் வைத்துக் கொண்டாடப் போகிறார்கள் என்றோ அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் 'குருட்டு லக்' என்று சொல்வார்களே அந்த குருட்டு அதிர்ஷ்டம் மாதவ நடிகரையும் அரவணைத்துக் கொண்டதனால் இப்போது தமிழ் ரசிகைகள் தங்கள் தலையணைகளில் நடிகரின் பெயரைப் பதித்து வைக்கும் அளவுக்கு மயங்கிப் போயிருக் கிறார்கள்.

இதனால் நடிகரை வைத்துப் படமெடுத்த தயாரிப்பாளர்களும் இவ்வாறே படமெடுத்தார்கள். இயக்குவதில் சிகரம் என்று பெயரெடுத்த மூத்த இயக்குநரும் மாதவ நடிகரை வைத்து எடுத்த பரவச படத்தில் மாதவ நடிகரின் பின்னாலே பெண்கள் ஓடுவது போல் படமெடுத்தார். பரவசத்தின் மூலம் சகாப்தம் படைப்பேன் என்று விளம்பரப் படங்களில் உறுதியும் செய்தார். ஆனால் நடந்தது என்னமோ வேறு. ரசிகைகள் பரவசத்தைப் பார்க்க மறுத்து விட்டார்கள்.

ஆனாலும் தன்னைச் சுற்றியே கதை அமைக்கப்படுவதனால் மாதவ நடிகருக்கு சற்று மமதையும் ஏற்பட்டு விட்டதாம். தான் வந்த பாதையை மறந்து தலைகீழாக நடக்க ஆரம்பித்திருக்கிறார்.

தமிழில் அறிமுகமாவதற்கு மாதவ நடிகர் படாத கஷ்டமில்லை. வெங்கடேஸ்வராலயம் பட நிறுவனத்தின் வாசலே கதி என்று கிடப்பாராம்.

தனக்கு சின்ன வேடமாவது கொடுத்து சினிமா இன்டஸ்ரியில் அறிமுகப்படுத்தி விடுங்கள் என்று அகப்படுபவர்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பாராம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் ஒளிப் பதிவாளர் ஸ்ரீராமின் நட்பு மாதவ நடிகருக்குக் கிடைத்திருக்கின்றது. தன் வழக்கமான வேண்டுகோளை ஸ்ரீராமிடமும் சொல்லியிருக்கிறார்.

இந்த நேரத்தில் மணிரத்தினம் 'அலைபாயுதே' படத்திற்கு கதாநாயகன் தேடி அலைபாய்ந்து கொண்டிருந்தார். ஒளிப்பதிவாளர் ஸ்ரீராம் மாதவ நடிகரைப் பற்றிக் கூறவே அலைபாயுதே படத்தில் அட்டகாசமாக அறிமுகமானார் மாதவ நடிகர்.

பின்னர் நடந்தது தான் உங்களுக்குத் தெரியுமே. அலைபாயுதே அலை அடித்த வேகத்தில் மின்னலேயும் வெளிச்சம் பரப்பியது.

ஆனால் இப்போது மாதவ நடிகர் தான் நடிப்பதற்கு உதவிய ஸ்ரீராமைக் கண்டு கொள்வதில்லையாம்.

கடந்த சில மாதங்களுக்கு முன் மாதவ நடிகரைச் சந்தித்த ஸ்ரீராம் தான் இயக்கும் படத்தில் நடிப் பதற்கு கால்ஷீட் கேட்டாராம்.

முதலில் சம்மதித்த மாதவ நடிகர் தனக்கு சம்பளமாக ஒரு கோடி தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

மாதவ நடிகர் இப்படிக் கேட்பார் என்று எதிர்பார்க்காத ஸ்ரீராம் தலை கிறுகிறுத்துப் போனவராக சைலண்ட்டாக வந்த வேகத்திலேயே திரும்பிப் போயிருக்கிறார்.

இப்போது அதே படத்தினை கன்னடத்தில் பிஸியாக இருக்கும் உதய் கிரணை வைத்து இயக்குகிறார் ஸ்ரீராம்.

ஆனால் மாதவ நடிகர் தன்நிலை உணராமல் அதிகம் அலட்டிக் கொண் டிருக்கிறார் என்று தமிழ்த்திரையுலகினர் கூறுகின்றனர். மின்னலேயின் ஹிந்திப் பதிப்பு படுதோல்வி, பார்த்தாலே பரவசம் அவ்வளவு பரவசம் அளிக்கவில்லை. இப்போது மாதவ நடிகர் நம்பிக் கொண்டிருப்பது மணிரத்தினத்தின் குடை, அச்சம் தவிர் இவையிரண்டையும் தான்.

மாதவ நடிகர் தனது வீண் மமதையைக் குறைத்தால் திரையுலகில் நின்று பிடிக்கலாம்.

# திருமலை தமிழ் பிரதிநிதித்துவம் இரண்டாவது தவறியது எப்படி?

## கத்தி விளிம்பில் நடப்பதற்கு ஒப்பானது என்பது நிரூபணம்

நடந்துமுடிந்த தேர்தல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும், சிறுபான்மைத் தமிழர்களுக்கு திருப்புமுனையாக அமைந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் திருகோணமலை மாவட்டம் இரண்டாவது பிரதிநிதித்துவத்தை எட்டாததையிட்டுத்தான் இன்று கேள்வி எழுப்பப்படுகின்றது.

திருமலையில் இரண்டு தமிழ் பிரதிநிதித்துவம் கிடைப்பது, கத்திவிளிம்பில் நடப்பதற்கு ஒப்பானது என்று அப்போதே 'சுடர் ஒளி' சுட்டிக்காட்டியிருந்தது.

அப்போதைய தேர்தல் களத்தை அவதானித்து இக்கருத்தை முன்வைப்பதற்கு காரணமாகவிருந்தவையே இன்றும் காரணமாக அமைகின்றன. ஐ.தே.கவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தனித்துப் போட்டியிட்டிருந்தால் தமிழர் கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்திருக்கும் என திட்டவட்டமாக கூறியிருக்கலாம்.

ஆனால் இந்த இரண்டு கட்சிகளும் கூட்டாக யானைச்சின்னத்தில் போட்டியிட்டபோது தமிழர் பிரதிநிதித்துவம் இரண்டும் கிடைக்கலாம் என எதிர்பார்த்ததே தவறு என சொல்லத் தோன்றுகின்றது.

ஐ.தே.கவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தவுடனேயே ஐ.தே.கவுக்கு 40.000 வாக்குகளும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 25, 000 தொடக்கம் 28,000 வரையான வாக்குகளுமாக மொத்தம் 68,000 வாக்குகள் எதிர்பார்க்கப்பட்டன.

வாக்களிக்கத் தகுதி பெற்ற 2,12,280 வாக்காளர்களில் ஏனைய கட்சிகள் பெறவிருக்கும் வாக்குகளையும் கணிப்பிட்டு கழித்துப்பார்த்தால் தமிழ் கூட்டமைப்புக்கு 60,000 வாக்குகள் கிடைக்கும் என்பது சந்தேகமே. அதனால்தான் இரண்டு ஆசனங்கள் கிடைக்கும் என எதிர்பார்த்தது தவறு என குறிப்பிட நேர்ந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை 15 அரசியல் கட்சிகளும், 6 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன.

இதன்படி ஐ.தே.க எதிர்பார்த்த 68,000 வாக்குகளில் 62,000 வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களைப் பெற்றது. எப்படியும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு ஆசனம் கிடைக்கும் என்பது தெரியும். அதுவும் கிடைத்துவிட்டது. ஆகவே எஞ்சியுள்ள ஒரு ஆசனம் தான் தமிழர் கூட்டமைப்புக்கு கிடைத்தது.

ஆயினும் எப்படியும் இரண்டு ஆசனங்களையும் பெற வேண்டும் என்ற முனைப்புடன் தமிழர் கூட்டமைப்பு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது. அது கைகூடாமல் போனதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

* கந்தளாய், மூதூர், கிண்ணியா போன்ற சிங்கள, முஸ்லிம் கிராமங்களை அண்டிவாழ்ந்த தமிழர்கள் அங்குள்ள பெரும்பான்மைக்கட்சிகளுக்கே வாக்களித்தமை.
* ஆரம்பம் தொட்டே பெரும்பான்மை கட்சிகளின் பின்னே குரங்குப்பிடியோடு திரிந்தவர்கள், அவர்களது குடும்ப சகிதம் அக்கட்சிகளுக்கே வாக்களித்தமை.
* எப்படியும் ஐ.தே.கதான் ஆட்சி அமைக்கும் என்ற நம்பிக்கையோடு, அதனிடமிருந்து அற்ப சொற்ப சலுகைகளை எதிர்பார்த்து வாக்களித்தமை.
* கிராமப்புற மக்களுக்கு சரியான வழிகாட்டலும், தெளிவும் இல்லாததால் அதிகப்படியான வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை. உதாரணம் மூதூர் — சம்பூர் மக்கள் அளித்த வாக்குகளில் 5000 வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை. இப்பகுதி மக்களுக்கு தமிழர் கூட்டமைப்பின் வேட்பாளர் க.துரைரட்ணசிங்கம் போதிய தெளிவை ஊட்டியதாகக் கூறுகின்றார். அவ்வாறாயின் 5000 வாக்குகள் எப்படி நிராகரிக்கப்பட்டன என்பது புரியவில்லை.
* ஐ.தே.கட்சியில் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டது.
* ஐ.தே. க , பொதுஜன ஐக்கிய முன்னணி இரண்டிலும் தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெற்ற முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்டமை.
* கட்டுப்பாட்டுப் பிரதேசமக்கள் தேர்தல் சாவடிகளுக்கு சமுகமளிக்காமல் ஏற்பட்ட இடர்பாடுகள்.
* ஈ.பி.டி.பி கிட்டத்தட்ட 2000 வாக்குகளை சுவீகரித்துக் கொண்டமை.
* மக்கள் அனைவரும் வாக்களிக்கச் செல்லாமை.
* தமிழர்விடுதலைக்கூட்டணிமீது இருந்த நம்பிக்கையீனம்.

இவையே தமிழர் வாக்குகள் சிதறடிக்கப்பட்டதற்கும், இரண்டாவது ஆசனம் இழந்ததற்கும் காரணம் எனச் சொல்லலாம்.

எஸ். எஸ் . ஆர்.



### புத்தாண்டே வருக!

பார்க்கும் இடமெல்லாம் வெறும்
பாழடைந்த கட்டடங்கள்
கேட்கும் சத்தமெல்லாம் உயிர்
குடிக்கும் வெடிச்சத்தங்கள்!

நோக்கும் முகமெல்லாம் வாடி
நொந்திருக்கும் சாயல்கள்
ஏங்கும் நெஞ்சமெல்லாம் தினம்
கறைபட்ட காயங்கள்!

பத்திரிகை செய்தியெல்லாம் தினம்
பயம் தரும் செய்திகள்
சஞ்சிகை யாக்கமெல்லாம் யதார்த்த
சோகத்தின் கதைகள்!

வெந்த மனவடுக்களெல்லாம் மாற்றிட
யார் வருவார்கள்?
நொந்த உளக்காயங்கலெல்லாம் தீர்த்திட
யார் வருவார்கள்!

இத்துயர்கள் தீர்த்திடவே புத்தாண்டே
புறப்பட்டு வருக!
பார்துயர்கள் நீக்கிடவே புத்தாண்டே
புறப்பட்டு வருக!

— அரியாலையூர்,
வி. பி. தனேந்திரா

### நிஜம் எது...?

பொய் என்று கூறி
வார்த்தை வானவில்லால்
உண்மை வளைகிறதே...
தேடப்படும் போதே
தொலைந்து விட்ட வாழ்க்கை...
நிரந்தரப் புதைகுழியில்
தள்ளப்படும் இளைஞர்கள்...
நிலவுக்குக் கல்லெறியும்
நிஜமில்லா நினைவுகள்...
சுயநல ஏகாதிபத்தியத்தில்
சுருண்டழும் மானுடங்கள்...
ஏக்கங்கள் நெருப்பாகித்
தோற்றங்கள் கருக்க...
புன்னகை மறந்து
புதுயுகம் என்கிறீர்களே?
பிரபஞ்சத்தின் எல்லைகளிலாவது
நிஜங்கள் தேடப்படுமா?
இனியாவது!!!...

— அளவை கலைக்கரன்

### புறப்படு மனிதா!

புறப்படு புறப்படு
புன்னகை பூத்த பூமியை
மீட்டெடுப்போம்
புலர்ந்திடும் நாளைய பொழுது நமக்காக
புத்தம் புது பூமிசெய்து
யுத்தம் அழித்திடுவோம்.

— சு. உமாகந்தன், வவுனியா.

### சேதிசொல்வாய் காற்றே நீ...!

காதினிக்க நெஞ்சினிக்க
உலகத்து ஓசையெல்லாம்
கொண்டு சேர்க்கும் காற்றேநீ இதையும்கேளு!

ஓதாயோ; வன்செவியில்
சேராயோ ஒடுக்கப்படும்
ஓரினத்தின் கவிக்குரலை கொண்டு சேரு.
நீதியிழந்து நிலைதளர்ந்து
நீண்டகாலமாய் மெலிந்து
வாடும் ஈழத் தமிழர் நிலை நீயறிவாய்
நாதியற்ற கூட்டமிது
ஆனாலும் தன்மானம்
தானழியா கூட்டமென்றே போயுரைப்பாய்!

அடக்குமுறையும் ஒடுக்குமுறையும்
அகந்தையதும் அரசோச்சும்
பூமியதன் சோகங்களை ஒலிபரப்பு
கருவினின்றும் வெளிவரவே
திறனற்று போய் மாளும்
பாலகரின் நிலைசொல்லி செவிநிரப்பு
அரைகுறையாய் சத்தின்றி
பிறந்தவர்க்கே பாலுமின்றி
மருந்தின்றி சாகும்நிலை தானும்
கொழுப்புமிஞ்சி தமிழர்கள்
போராட்டம் நடத்தவில்லை
சுதந்திர தாயகமே அவர்நோக்கு!
எழும் சூழ்ச்சி பொய்களினால்
பயங்கரவாத பூச்சிகாட்டும்
பொய்யரால் இட்டதடை தனை போக்க
உலகத்துத் தலைவரெல்லாம்
கூடிப்பேசும் மண்டபத்தில்
ஓங்கி ஓங்கி நீயொலிப்பாய் காற்றே
கலகக்காரர் அல்ல இவர்
சுதந்திரத்துப் புருஷரென
நீக்கிவிடச் சொல்லு இவர் தடையை

— திருமலை சந்திரன்

### "எங்கள் நாடு"

செந்தமிழும் சிங்களமும்
சிங்கார இஸ்லாமும்
மங்காத பெருமையுடன்
'அறம்' காத்து வாழ்ந்த நாடு!
பொல்லாத புல்லர்களின்
அல்லாத செயல்களினால்
சொல்லொண்ணா சோகமதில்
அல்லாடி கிடக்கும் நாடு!
மரணத்தின் மடியினிலே
இரணத்தின் கொடுமையிலே
கரணமிட்டுக் களங்கப்பட்டு
சொரணை கெட்டுப் போன நாடு
யுத்தக் கொடுமையினால்
சித்தமது கலங்கி நின்று
பித்தமது தலைக்கேறி
செத்தவரைக் கணக்கெடுக்கும் நாடு.

இரா. தமிழ்ப்பித்தன், மடுவக்கொல்லை.

### பனிமணி

புல்லில் விழுந்தது பனிமணி
கண்மணி களித்தது பனிஒளி
ஆஹா இது என்ன புல்லுமணி
இரத்தினம் போன்று ஒளிர்ந்தது; சிற்சில
நேரத்தில் மறைந்தது இவ்வொளி.
உள்ளொளி உள்ளோர் சிலகாலமிருந்து
இருப்பிடத்தை விட்டுப் போனதுபோல்
மறைந்து போன பனிஒளி;
அறைந்து சொன்னது மறைமொழி!
'இருக்குமிடம் புல்லுவோர் இதழெனில்
யாருக்குமில்லைப் புகழ் ஒளி'.

— கவிஞர் 'திக்கவயல் தர்மு'

### எமது சுதந்திரம் தான்

அன்றாடம் விடிகின்ற போது ஒலிப்பது
பறவைகளின் குரலோசை மட்டுமல்ல...
எதிரியின் வெடி ஓசையும் தான்
காலையும் மாலையும்
செந்நிறமாவது — அந்த
வானம் மட்டுமல்ல
குருதியினால் இந்த பூமியும் தான்...
அனுதினம் வேகுவது உலையில் உள்ள
அரிசி மட்டுமல்ல
உடலில் உள்ள உள்ளமும் தான்...

— ஆர். கே. மேனன், வவுனியா

### போய் விடு நிலவே

கண்ணீரின் கசிவுகளில்
நனைந்த உடல்கள்
உருக்குலைந்து உரமாகி
மண்ணுக்கு கனிப்பொருளாய்
கவிக்கோர் கருப்பொருளாய்
மூழ்கிய செரு மண்ணில்
மாதமோர் முறை உலாவரும்
விண்பெற்ற முழுநிலவே
ஏன் மறந்தாய்?....

மனிதப் பிடிக்குள் சிக்காமல்
சுழன்றடிக்கும் சுதந்திரநிலவே
கடந்து விட்ட பௌர்ணமியில்
நீயுரைத்தாய் எனக்கு
"வாங்கி வருவேன் சுதந்திரக் காற்றை
உன் வாழ்வின் நிம்மதிக்காக" வென்று
போ... ஏமாற்றிவிட்டாய் இன்று

எட்டாக்கனிதான் நிம்மதியோவென
எண்ணவில்லை என்மனம்
திகைதது ஓர் கணம்...
எதிர்பார்ப்பின் உச்சத்தில்
உரசிப் போகும் உன் ஒளியில்
விரைந்திடும் உன்னிடம் ஓர் வார்த்தை...

வருகின்ற பௌர்ணமியில்
வாங்கி வா சுதந்திரக்காற்றை
இல்லையேல் நெருங்காதே — எமை
போய்விடு... போய்விடு...
சுடுகின்ற உன்னொளி நமக்கெதற்கு?
தேவையெமக்கோர் குளிர் நிலவே....

கே. எஸ். அகிலன்
கரணவாய், யாழ்ப்பாணம்.

### நேரம் எட்டுமணி!

குயிலின் சங்கீத சப்தங்களில்
குளிர்ந்து போய் விடத் துடிக்கும்
இதயங்கள் மீது
வெயிலின் வெப்பம் பாய்ச்சி
வேக வைக்கும் காலமிது!

நம்பிக்கை நட்சத்திரங்கள்
தோன்றுவதாயெண்ணிக்
காத்திருந்த நாட்களெல்லாம்
தும்பிக்கையால் எம்மைத்
தூக்கி அடித்துவிட்டுப் போகின்றன!

வரண்டு போகும்
எங்கள் நாவுகளைக் காட்டி
வாங்கிக் கொள்ளும் தண்ணீரில்
தங்கள்
கால்களைக் கழுவிக் கொள்ளும்
நாதியற்ற கூட்டம்!
ஏமாற்றங்கள் மட்டுமே
எம் எதிர்பார்ப்புகளாக மாறிய
எங்கள் வாழ்க்கை!

எங்கே செல்கிறோமென
எமக்கே தெரியவில்லை
தங்க இடமின்றி
தரணி முழுவதும் தவிக்கும்
சமகால ஓட்டங்கள்,

இப்படியே
இடி விழுந்த பனை மரம் போல்
வட்டிழந்து வடிவிழந்து
வானை நோக்கிய
வார்ப்பிரும்பாய்...
எம் வாழ்க்கை
வரையப் பட்டிருக்கிறது!

அதனால் தான்
இயற்கையை இரசிக்கவும்
வயற்கரை மீது
வண்ணக் கவி எழுதவும்
வாய்ப் பெனக்கில்லை!

சீக்கிரமாய் நான்
மூச்சிரைக்க ஓடி
வீடு சென்றடைய வேண்டும்
நேரம் எட்டுமணி!

—புதுமை

**சுடர் ஒளி சிறுகதை**

# அமைதிப் படை

உரும்பையூர் - தனேஷ்

யாழ்ப்பாணத்தைச் சுட்டெரித்த சூரியக்கதிர் போல, உச்சி வானத்துச் சூரியன் தன் அனல் கதிர்களை அள்ளி வீசிக் கொண்டிருந்த நண்பகல் வேளை.

கட்டாக் காலிகளாய்த் திரியும் கால் நடைகளும், வெட்ட வெளிகளில் சுதந்திரமாய் உலாவிய பறவைக் கூட்டங்களும் வெயில் கொடுமையில் துவண்டு நிழல்கள் தேடி ஒதுங்கிக்கொள்ள, அப்பிரதேச வாழ் மக்களும் விரைந்தோடி அந்தக் காமாட்சி அம்மன் கோவில் மண்டபத்திற்குள் அடைந்து கொள்கின்றனர்.


கால் நடைகளும், பறவைகளும் நிழலுக்காகத்தான் ஆங்காங்கே ஓடி ஒதுங்கிக் கொள்கின்றன. ஆனால் அந்த மக்கள் கூட்டம் ஒதுங்குவதோ நிழல் தேடி அல்ல.

போருடையும், கொல் கருவியுமாய் நரபலியாட வந்த அந்தப் படையினரின் நிர்ப்பந்திப்பில்தான் அந்த ஆலயம் நோக்கி மக்கள் ஓடுகிறார்கள்.

கோயில், குளம், வயல்வெளி, தெருக்களென எங்கள் தேசம் கொலைக் களமாக ஒப்பனை செய்யப்பட்டுக் கொண்டிருந்தது.

சுடுகாடாய் மாறிக் கொண்டிருந்த எங்கள் அழகிய ஊர்களில் யாழ் கோண்டாவிலூரும் தவறவில்லை. ''சிவகாமி அம்மன்'' கோவில் அந்த ஊருக்கு மிகப் பழையது.

கிடைக்கின்ற தங்கள் வருவாயில் அந்த ஆலயத்தின் வளர்ச்சிக்குத் திருப்பணி செய்து பிரமாண்டமாக்கிய



அவ்வூர் மக்கள் அந்த அம்மனின் அருளால் செழிப்பாகத் தானிருந்தார்கள்.

பொன், பொருள் செல்வமென வளமோடு வாழ்ந்தாலும நிம்மதியைத் தொலைத்து விட்டுத் தானிருந்தார்கள்.

பசிக்கின்றபோதெல்லாம் புசிக்கின்றவர்களாய் கொலைப் பசியெடுக்கின்ற போதெல்லாம் நரபலி ஆடிக் கொண்டிருந்த அப்படையினர்தான் எம்மக்களின் நிம்மதியை தின்று தீர்த்தனரே. சுற்றிவளைப்புகளும், கைதுகளும், ஆட்தொலைவுகளும் வழமை தான். அது தான் இன்றும்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை.

கோண்டாவிலூர் திடீரென இடம்பெற்ற சுற்றி வளைப்புக்குள் அவர்களின கோரப்பிடியில் அவ்வூர் மூச்சுத் திணறித்துடித்தது. பூவும் பிஞ்சுமாய் சிறியவர், பெரியவரென அப்பகுதி மக்கள் மட்டுமன்றி தங்கள் சுயதேவை கருதி அவ்வூருக்குள் வந்து, சென்று கொண்டிருந்த அனைவருமே அந்தச் சுற்றிவளைப்பிற்குள்ளி லிருந்து நழுவவில்லை. வீதி, வீடுகளெனப் புகுந்தவர்கள் ''போ வாவா எல்லாரும் வா கோயிலுக்கு ஓடு'' எனக் குற்றுயிர்த் தமிழில் கூக்கூரலிட்டதில் அயலூர்களான கொக்குவில், உரும்பிராய், திருநெல்வேலியூர் மக்கள் கூட திடுக்குற்றுத் துவண்டு போனார்கள்.

அடையாள அட்டை, குடும்பப்பதிவு அட்டைகளெனக் கையில் அகப்பட்ட ஆட்பதிவுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களோடு கதி கலங்கியபடி மக்கள் சிவகாமி அம்மன் மண்டபத்தை அடைகிறார்கள். பயமும், பதற்றமும் அவர்கள் உள்ளத்தில் உறைந்து கிடப்பதை ஒவ்வொருவர் முகங்களும் துல்லியமாய்ச் சொல்லுகிறது.

''ஆண்டவா! இண்டைக்கி ஆரைக் கொண்டு போகப் போறாங்களோ எந்தச் சந்தியில், எநதச சுடலைக்குள்ள, போடப்போறாங்களோ'' இது கோயில் நோக்கி ஓடிக் கொண்டிருந்த முதியவர் ஒருவரின் முணுமுணுப்பு.

''அமைதி காக்கவெண்டு வந்தவை. இருந்த அமைதியையும் கெடுத்து எங்கட வாழ்வுகளை சூனியமாக்கிறதை ஆருக்குச் சொல்லுறது'' அது கோயில் மண்டபத்து நெரிசலில் நசியும் மூதாட்டி ஒருத்தியின் முணுமுணுப்பு.

இவ்வாறு ஒவ்வொருவர் மனங்களிலும் வெறுப்புக கோலங்கள். வந்தவர்கள், நின்றவர்களென அனைவரும் அந்தந்த இடங்களிலே பறிக்கப்பட்டு கோவிலுக்கு விரட்டப்படுகின்றனர்.

''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' அது தான் இப்போது அந்தப் படையினரின் நிலை.

அவர்களால் மறிக்கப்பட்டுத துரத்தப்பட்டவர்களில் ஒருவனாக ஓடி வந்த அருளம்பலம். தன் சைக்கிளையும், அதில் கட்டப்பட்டிருநத மீன் வியாபாரப் பெட்டியையும், துலைகளையும் காட்டிக் கெஞ்சியபடி மீனளைந்த கையால் சேட்டையிலிருந்த தனது அடையாள அட்டையையும் எடுதது நீட்டுகிறான். ஆனால் அதை வாங்க மறுத்தபடி ''போ போ ஓடு ஓடு'' என தனது ஏ.கே.47 துப்பாக்கியின் முனைக்கத்தியால் ஓங்கி விரட்டினான் ஒரு மீசைக்காரத் தடியன்

கண்ணி வெடியில் சிக்கிய கவச வாகனம் போல் உப்பு நீர்க் கசிவால் துருப்பிடித்த ஓட்டையும், குட்டையுமாகவிருந்த தன் சைக்கிளையும் அதன்மீது கரியரில் கட்டப்பட்டுக் கிடந்த மீன் சுமைப் பெட்டியையும் அந்தக் கோயிலின் எதிர்வேலி மீது சாய்த்து விட்டு அடையாள அட்டையைக் கையில் பிடித்தபடி கோயிலுக்குள் ஓடினான் அருளம்பலம்.

அங்கே நின்றவர்கள் ஒவ்வொருவர் மனமும் தங்கள் தங்கள் உயிர்களைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தது. ஆனால் அருளம்பலத்தின் மனம் மாத்திரம் சைக்கிளிலிருந்த மீன் சுமையை சுற்றிக் கொண்டிருந்தது. ஏனெனில் வறுமையே வாழ்வாகிப் போன அவன் குடும்பத்திற்குக் கஞ்சி வார்ப்பது அவனது மீன் வியாபாரமல்லவா.

கூலித் தொழிலுக்காய்த்தன் உடலைக் காய்ச்சி வலுவிழந்து போன அருளம்பலத்தால் இனி கடின வேலை செய்ய இயலாது என்ற போது மனைவி மிகவும் வேதனைப்பட்டாள். கிடைத்த சிறு வருவாயிலும் குடும்பத்தைக் கண்ணியமாகக் காத்த கணவனின் பரிதாபத்தைக் கண்டு தான், இந்த வியாபார முயற்சிக்கு அவள் ஒழுங்கமைத்தாள்.

அதற்குக் கூடப் பணம் தேவைப்பட்டபோது வேறு வழியின்றி தன் காதிலிருந்த அந்தக் குச்சித் தோட்டை விற்றுத்தான் பணம் கொடுத்தாள்.

தான் கொள்வனவு செய்த முழு மீனையும் விற்று கை முதலையாவது எடுக்க வேண்டுமென்பதில் உறுதியாகவே இருப்பான் அருளம்பலம்.

இன்றும் கூட தனது மீன் முழுவதையும் விற்றாக வேண்டுமென்றே ஊரலைந்து களைத்து வந்தவன் இங்கு படையினர் பிடியில்.

பெட்டியில் நிரம்பியிருந்த மீன்கள் பழுதாகி விடுமோ? அதைக் காக்கையும், நாரையும், நாய்களும் நாசமாக்கி விடுமோ என்ற ஏக்கம் அவன் மனதை நிலை கொள்ளவிடவில்லை.

கோண்டாவில் சந்திக் காவலரணில் வீசப்பட்ட கைக்குண்டின் தாக்கத்தால் ஒவ்வொரு படையினர் முகத்திலும் ஆத்திரத்தின் தழும்புகள் துடிக்கின்றன. சாராய வெடில் வயிற்றைக் குமட்டியது. நரமாமிச நரிகளாய் வெறிகொண்டு அங்குமிங்குமாய் அலைகின்றனர். அவர்களில் தான் கூர்க்காஸ், தலைப்பாகைக்காரர் என பல வகையினர் எல்லோருமே மாமிசமலைகள் தான்.

வெளியே வருவதும், மீன் சுமையை எட்டிப் பார்ப்பதும் உள்ளே ஓடுவதுமாகவே நின்ற அருளம் பலத்தை மற்றவர்கள் ஏசுகிறார்கள். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல் அவன் எட்டி எட்டிப் பார்க்கிறான். தொலைவில் நின்ற ஒருவன் தனது நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்ததை அருளம்பலம் அவதானிக்கவில்லை.

''டோ! டோ! வா வா வெளியே வா'' என்றபடி அவன் சுடு குழலை சுடுநிலையில் தயார்ப்படுத்தியபடி ஓடி வந்தான். கோயிலுக்குள் நின்றவர்களின் மரண ஒலி கோபுரத்தையே சாய்ப்பது போலிருந்தது.

எல்லோருமே கூச்சலிட்டுக் கெஞ்சுகிறார்கள். துப்பாக்கி முனையில் இழுத்துவரப்பட்ட அருளம்பலம் அடுத்திருந்த வேலி மறைப்பிற்கு தள்ளிச் செல்லப்படுகிறான்.

''டோ! நீ எல்.ரீ.ரீ. தானே காம்புக்கு குண்டு போட்டது நீ தானே'' தமிழில் அரை குறையாய் ஒருவன் அதட்டினான்.

''ஐயா! இல்லை நான் மீன் பெட்டி யைத்தான் பார்த்தனா ஐயா. நான் பிள்ளை குட்டிக் காரனய்யா என்னை விட்டுடுங்கோ ஐயா'' அருளம்பலத்தின் கெஞ்சல் அவனுக்குப் புரிந்ததோ என்னவோ அதைப் பொருட் படுத்தாமல் தனது சகா ஒருவனை வேகமாக தனது மொழியில் கூவி அழைத்தான்.

''பசுவைக் கண்ட புலிபோல்'' தன் இடுப்பிலிருந்த கத்தியை உருவிக் கையிலெடுத்தபடி அவனும் ஓடி வருகிறான்.

கூர்க்காஸ்காரன் கத்தி உருவினால் இரத்தம் காணாமல் சொருகமாட்டானென்பதும், முடியாது போனால் தன் விரலையாவது வெட்டி இரத்தம் கண்டு தான் சொருகுவான்'' என்று தான் மக்களிடம் ஒரு கருத்து.

அருளம்பலமும் அதை அறிந்திருந்ததால்தான் தன் கைகளைக் கூப்பியபடி கதற முற்பட்டான். ஆனால் தோற்றுப் போகிறான். அருளம்பலத்தின் வாயைத் தன் இரும்புக் கரத்தால் பொத்தினான் ஒரு முரட்டு ஆசாமி. கண்கள் பிதுங்க மூச்சுத் திணறிய அருளம்பலத்தின் மூச்சுக் குழாயைப் பதம் பார்த்தான் அடுத்தவன். மாறிமாறித் தன் வெறி தீர அருளம்பலத்தின் உடலைக் கத்தியால் துண்டாடினான். அங்கே நடப்பவை எதுவும் மற்றையோருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அது ஒரு ஒதுக்குப்புறமாச்சே.

சத்தமின்றிச் சரிந்து விழுந்தவனின் உயிர் என்னவோ அவன் உடலை விட்டுப் பிரிய தாமதமாகியது. உயிர் போகும் வேளையில் மனைவி, பிள்ளைகளை நினைத்தான் போலும்.

துடித்துக் கொண்டிருந்த அருளம்பலத்தின் உயிர் பிழைக்காத வகையில் அவனது குதிக்கால் நரம்பைக் கூட கத்தி முனையால் இழுத்தறுத்தான் அந்த இரணியன். அருளம்பலத்தின் உடல் அடங்கிப் போனது.

ஏற்றி வைத்த உலைப்பானையைச சுற்றியிருந்த அவனது பிள்ளைகளுக்கும், வாசல் கடவையில் காத்துக்கிடந்த மனைவிக்கும் தெரியாமல் அமைதி காப்பாளர்களால் அவன் உயிர் குடிக்கப்பட்டு விட்டது. அருளம்பலத்தின் உடல் அனாதையாய் இரத்த வெள்ளத்தில். அங்கே அவன் குடும்பம் கண்ணீர் வெள்ளத்தில்.

அமைதியின் தந்தை தேசத்துப் புதல்வர்களின் வெறியாட்டத்தை தன் கண்முன்னே கண்டும் சிவகாமி அம்மன் அமைதியாகவே இருந்தாள். ஏனெனில் அவர்கள் தான் உலக வல்லரசுகளில் முன்னிலையிலுள்ளவர்களாச்சே. அதிலும் அவர்கள் அமைதிகாக்க வந்தவர்களல்லவா!

(யாவும் கற்பனை)






# உதவிக்கு வந்த பொதுமக்களால் புலிகளுக்கு ஏற்பட்ட உபத்திரவம்

ஓயாத அலைகள்
வெளிவராத தகவல்கள்
9

முல்லைத்தீவில்.....
தமது தாக்குதல் நடவடிக்கையைத் தொடர்வதிலும் தப்பிப் பிழைத்த படையினரைத் தேடி அழிப்பதிலும் கைப்பற்றிய முகாமை மீட்பதற்கு வரக்கூடிய அரசு துருப்புக்களின் மீட்பு அணிகளைத் தடுத்து நிறுத்துவதிலும் விடுதலைப் புலிப் போராளிகள் தீவிரமாக இருந்த போது, உதவி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்ட பல நூற்றுக்கணக்கான பொது மக்களின் நடவடிக்கைகளை சரியான முறையில் அவர்களால் கண் காணிக்க முடியாது போயிற்று. அதன் விளைவு? முகாமில் இருந்த ஆயுதங்கள் உட்பட பெறுமதியான பொருட்கள் பொதுமக்களின் கைகளில் சிக்கி விட்டன. இவற்றை மீட்பதற்கு புலிகள் வாகனங்களில் சென்று பகிரங்க அறிவிப்பை விடுக்க வேண்டியதாயிற்று.

''முல்லை முகாம் தகர்ப்பின் போது போராளிகளுக்கு உதவ வந்த பொதுமக்கள் மற்றும் பார்க்க வந்த பொதுமக்கள், முகாம் வீழ்ந்த மகிழ்ச்சியில் தெரிந்தோ, தெரியாமலோ முகாமிலிருந்த பொருள்கள் சிலவற்றை சில ஆயுதங்கள் உட்பட தம்முடன் எடுத்துச் சென்று விட்டனர் என்று தெரிகின்றது. இத்தகைய ஆயுதங்களை வைத்திருப்பது தேசத்துரோகக் குற்றமாகும். அவற்றை வைத்திருப்போர் தாமாக முன்வந்து எம்மிடம் அவற்றை ஒப்படைத்தால் அவர்கள் மன்னிக்கப்படுவார்கள்; அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. அப்படிச் செய்யாமல் தொடர்ந்து ஆயுதங்களை ஒளித்து வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்''— என்று புலிகளால் அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு முகாம் தகர்க்கப்பட்டு சில நாள்கள் கழித்து முகாம் பகுதியை நேரில் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் யாழ். திரும்பிய மதகுரு ஒருவர் பின்வருமாறு கூறினார்:

''முல்லைத்தீவு முகாமிலிருந்த ஆயுதங்களில் கணிசமான ஒரு தொகுதி பொது மக்களின் கைகளில் சிக்கிக் கொண்டது குறித்து புலிகள் அதிகம் கவலை கொண்டுள்ளனர். அவற்றை மீட்பதில் அவர்கள் தீவிரமாக இருக்கின்றார்கள். ஆயுதங்களைத் தம்முடன் எடுத்துச் சென்ற பொதுமக்கள் பின்னர் புலிகள் விடுத்த எச்சரிக்கை அறிவிப்பால் கலவரமடைந்திருக்கிறார்கள். என்றாலும் தாம் எடுத்துச் சென்ற ஆயுதங்களை புலிகளிடம் நேரில் சென்று ஒப்படைப்பதற்கு அவர்கள் அஞ்சுகின்றார்கள். அதனால் அவர்களில் ஒரு பகுதியினர் தாம் எடுத்துச் சென்ற ஆயுதங்களைத் தங்களுடன் வைத்திருக்காமல் யாரும் பார்க்காத வேளையில் வீதி ஓரங்களிலோ, பொது இடங்களிலோ போட்டுவிட்டு அகன்று விடுகின்றார்கள். இப்படி பொது இடங்களில் போட்டுவிட்டால் அவை எப்படியும் புலிகளின் கைகளுக்குப் போய்ச் சேரும் என்பது அவர்களின் எண்ணம்.

இவ்வாறு வீதியோரங்களில் கிரனேற்றுக்கள், றவைகள் போன்ற ஆயுதங்கள் பெருமளவு வீசப்பட்டுக் கிடப்பதை முல்லை முகாம் பகுதிக்குச் செல்லும் வழியில் நான் கண்டேன்.'' —என்றார் அந்த மதகுரு.

இது தாக்குதல் நடவடிக்கையின் பின் மேற்கொள்ளப்பட்ட உதவி வேலைகளில் பொதுமக்களை ஈடுபடுத்தியதால் ஏற்பட்ட நெருக்கடியைக் காட்டுகின்றது.

### ரத்வத்தையின் கோபம்

முதல் நாள் 18 ஆம் திகதி — அரசுத் துருப்புக்களைப் பொறுத்தவரை மீட்புப் பணி பல முனைகளிலும் பலனளிக்காத ஒன்றாகவே முடிந்தது.

வான் வழியாகத் துருப்புக்களைத் தரையிறக்குவதிலும் சிக்கல்; தரையிறக்கிய துருப்புக்களை தரையில் தக்கவைப்பதிலும் அழிவு; கடல்வழியாக கரையை எட்டுவதிலும் இக்கட்டு.

அரச தரப்புக்கு இன்னோரன்ன கஷ்டங்களுடன் ஜூலை 18ஆம் திகதி பொழுது சாய்ந்து 19ஆம் திகதி புலர்ந்தது.

அதுவரை கடல்வழியாகத் துருப்புக்கள் முல்லைத்தீவுக் கரையை எட்டாததால் சீற்றமுற்றிருந்த பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ரத்வத்தை—

அதற்காக திருகோணமலை கடற்படைத் தளத்தில் பணியாற்றிய கடற்படை உயரதிகாரி ஒருவர் மீது சீறி விழுந்தார்.

அவருக்குக் கொடுத்த பணியை உரிய விரைவில் செய்து முடிக்க முடியாவிட்டால் மூடை, முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு அவர் வீட்டுக்குப் புறப்படலாம் என்று அந்த அதிகாரி மீது பாய்ந்தாராம் ரத்வத்தை.

### கடற்புலிகள் தாக்குதல்

இந்த அழுத்தங்களுக்கு மத்தியில் 19ஆம் திகதி பிற்பகலில்,



யாழ்ப்பாணத்திலிருந்து வர்த்தகக் கப்பல் ஒன்றில் அவசர அவசரமாகத் தருவிக்கப்பட்ட துருப்புக்கள், முல்லைத்தீவுக்குச் சற்று தொலைவில் ஆழ்கடலில் வைத்து, ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி கடற்படைப் படகுகளுக்கு மாற்றப்பட்டன.

கடற்படையின் தரையிறங்கு கலங்களில் சற்றுத் தொலைவு வரை ஏற்றி வரப்பட்ட இத்துருப்புகள், முல்லைத்தீவு முகாமை அண்டிய கரையில் தரையிறங்குவதற்கு வசதியாக டிங்கிகளுக்கு மாற்றப்பட்டன. 19 ஆம் திகதி நேரம் மாலை 4.30 மணி. கடற்படையின் தாக்குதல் படகுகள் பாதுகாப்பு வழங்க, இத்துருப்புகளை ஏற்றிய டிங்கிகள் கரையை நோக்கி நகரத்தொடங்கின. கரையிலிருந்து கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் கடற்படைப் படகுகளை நோக்கி சீறிப் பாய்ந்து வர ஆரம்பித்தன. கடற்புலிகள் படகுகள் திடீரென நூற்றுக்கணக்கில் மோதலுக்குத் தயாராகி பாய்ந்து வந்த போது முல்லைக்கடல் உண்மையில் சண்டைக் கடலாயிற்று.

### 'ரணவிரு' தகர்ப்பு

கடற்படை அணிகளுக்கு பாதுகாப்பாக வந்து கொண்டிருந்த ஷங்காய் ரக அதி வேகத்தாக்குதல் படகான ''ரணவிரு'' மீது கடற் கரும் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படகு ஒன்று மோதி வெடித்ததும் ''ரணவிரு'' தகர்ந்தது. அதற்கு கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்த லெப்டினன்ட் கொமடோர் பராக்கிரம சமரவீரவும் அவருடன் அந்தத் தாக்குதல் படகில் பணியாற்றிய 35 கடற்படையினரும் ரணவிரு தகர்ப்பில் உயிரிழந்தனர். கடற்கரும்புலிகளான சயந்தன் (தம்பிப்பிள்ளை துரைரத்தினம் —அக்கரைப்பற்று), மிதுபாலன் (வேதரஞ்சன் ஜெகநாதன்— சங்கானை), ஆகிய இருவருமே 'ரணவிரு' தகர்ப்பில் காவிய மான கடற்கரும் புலிகளாவர்.

### முயற்சி கைவிடப்பட்டது

முல்லைத்தீவு முகாம் தளத்தை அண்டிய கடற்கரைப் பிரதேசத்தில் தரையிறங்குவதற்காக கடல் வழியாகச் சென்ற படை அணிகள், 'ரணவிரு' அதிவேகத் தாக்குதல் படகின் தகர்ப்பின் காரணமாகவும், அதைத் தொடர்ந்து கடலில் கடற்புலிகள் காட்டிய கடும் எதிர்ப்புக் காரணமாகவும் அன்றைய தினம் (19 ஆம் திகதி) தமது முயற்சியைக் கைவிட்டு பின்வாங்கின.

''கடலில் கடற்புலிகளின் எதிர்ப்பு கடுமையாக இருக்கின்றது. பல டசின் கடற்கரும்புலிகளின் படகுகள் கடற்படை அணிகளை நோக்கி ஒரே சமயத்தில் சீறிக்கொண்டு வர முயற்சிப்பதால் ஒன்றைத் தாக்க மற்றையது மறுமுனையால் வந்து கடற்படைப்படகுகளில் மோதும் ஆபத்து இருக்கின்றது. அதனால் கரையை நோக்கிய நகர்வைத் தவிர்த்து பின்வாங்குகின்றோம்''—என்ற பாணியில் முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் இருந்து கடற்படை அதிகாரிகள் அடுத்தடுத்து அனுப்பிக் கொண்டிருந்த வானொலிச் செய்திகள் திருகோணமலை கடற்படைத்தளத்தில் (டொக்யாட்) உள்ள நடிவடிக்கை அறைக்கு தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன.

அதனால் அதுவரை கடல்வழியாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த மீட்பு முயற்சி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. ''ரணவிரு'' அதிவேகத் தாக்குதல் கலம் தகர்க்கப்பட்டதில் உயிரிழந்த 36 கடற்படைத் துருப்புகளின் சடலங்களிலும் ஏழு சடலங்களை மட்டுமே கடற்படையினரால் மீட்க முடிந்தது. அந்தக் கடற்பகுதியில் கடற்புலிகள் தொடர்ந்து காட்டி வந்த கடும் எதிர்ப்புக் காரணமாக எஞ்சிய படையினரின் சடலங்களைத் தேடிப்பிடிக்கும் முயற்சியும் கைவிடப்பட்டது.

எனினும் அன்று முல்லைக் கடற்பரப்பில் நடந்த மோதல்களில் குறைந்தது கடற்புலிகளின் எட்டுப் படகுகளைத் தகர்த்ததாகவும் முப்பது கடற்புலிகளைக் கொன்றதாகவும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

### அரசுக்குப் புரிந்தது

அன்று 19 ஆம் திகதி கடலில் கிடைத்த அனுபவம் காரணமாக அவசர கோலத்தில் —மீட்பு முயற்சி என்ற பெயரில் முல்லைத்தீவுக் கடற்கரையில் கண்ணை மூடிக் கொண்டு துருப்புக்களை இறக்க முயல்வது ஆபத்தானது; முட்டாள் தனமானது. அத்துடன் போதிய முன்னேற்பாடுகள், திட்டமிடுதல், அதிகபலம் ஆகியவற்றுடன் செல்வது தான் புத்திசாலித்தனமானது என்பதும் விளங்கியது.

இவற்றைச் செய்து கொண்ட பின்னரே கடல்வழியாகக் களத்தில் இறங்குவது எனத் தீர்மானிக்கப் பட்டதால் அடுத்த நாள் —20 ஆம் திகதி முழுவதும் —கடற்படையைப் பொறுத்த வரை கடல்வழி மீட்பு முயற்சிக்கான ஆயத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டன. மீண்டும் 21 ஆம் திகதி கடல் வழி முயற்சிகள் ஆரம்பமாகின. அந்த முயற்சிகள் பலித்தனவா? அடுத்து வரும் அத்தியாயங்களில் அதனைப் பார்ப்போம்.

(தொடரும்)

## 'பெருங்குடி' மக்களின், மீட்பு நடவடிக்கை!

முல்லை முகாம் புலிகளின் தாக்குதலில் வீழ்ந்ததும் அங்கிருந்த ஆயுத தளபாடங்கள் மற்றும் பொருள்களை அகற்றும் பணியில் பொதுமக்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

முகாமிலிருந்த படையினரின் 'பார்' (BAR) பகுதியும் சூறையாடப்பட்டது. அங்கிருந்த குடிவகைகள், சிகரட்டுகள் புலிகளுக்கு உதவ வந்த பொதுமக்களினால் அள்ளிச் செல்லப்பட்டதை புலிகள் கண்டும் காணாமல் விட்டுவிட்டனர். அது பொதுமக்களின் பங்கு என்று நினைத்தார்கள் போலும்.

முகாமைத் துடைத்தழிக்கும் புலிகளின் முயற்சி ஒரு புறமிருக்க கட்டிய சாரத்துக்குள்ளும் இடுப்பிலும் வெளிநாட்டு குடிவகைகள், சிகரட்டுகள் போன்றவற்றை அள்ளிக் கட்டிக் கொண்டு, 'பார்' பகுதியைத் துடைத்தழிப்பதில் இன்னொரு கும்பல் மறுபுறத்தில் ஈடுபட்டிருந்தது.

அந்தக் கும்பலில் இருந்த சில 'பெருங்குடி மக்களுக்கு' அவசரமோ அவசரம். கையில் சிக்கிய குடிவகைகளை வீட்டுக்கு எடுத்துப் போகக் கூட நேரமின்றி அங்கேயே திறந்து ஒருகை பார்த்தார்கள் அந்தப் பெருமக்கள்.

அப்படி அவசரப்பட்ட ஒரு 'குடிமகன்' மதுப்புட்டி எது, வினாகிரிப் போத்தல் எது என்று தெரியாமல் போத்தலில் இருந்த வினாகிரியை மட மட வென்று குடித்து விட்டு அவதிப்பட்ட சம்பவமும் நடந்தது.

மதுவால் மயங்கிய மற்றொரு குடிமகன் அங்கு காவற்கோபுரம் அருகே சரிந்து கிடந்த— கட்டு மஸ்தான —சிப்பாய் ஒருவரின் சடலத்தைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருந்தாராம்!

இது போல உயிரிழந்த படையினர் சடலங்களை முகாமில் இருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் சிலர் சிப்பாய்கள் அணிந்திருந்த மோதிரம், தங்கச் சங்கிலி, மணிக்கூடு, போன்ற பெறுமதி மிக்க பொருள்களையும் மற்றும் அவர்களின் உடைகளில் இருந்த பணம் போன்றவற்றையும் எடுத்துச் செல்லவும் தவறவில்லையாம்.!

# ஈதுல் பித்ர் ஈ...

# ரமழானில் பெற்ற பயிற்சிகளை வாழ்நாளில் தொடர்வோம்!

அருள் நிறைந்த மாதம் எம்மைவிட்டு அகன்று விட்டது. எம்மை அழகுபடுத்திய மாதம்; இச்சைகளை அடக்கி இறைதிருப்தியைப் பெற்றுக் கொள்ளச் செய்த இனிய மாதம்; இன்று எம்மைவிட்டு பிரிந்து செல்கிறது.

ரமழான் மாதம் வந்தால் அல்லாஹ்வின் மாளிகையான மஸ்ஜிதுகள் நிரம்பி வழிகின்றன. நல்அமல்களினால் மஸ்ஜிதுகள் செழிப்பாக்கப்படுகின்றன.

புனிதமிகு ரமழானில், நாங்கள் பர்ளுத் தொழுகைகளுக்கு மேலாக எந்த எந்த சுன்னத்தான, நபிலான தொழுகைகள் இருக்கின்றதோ, அவற்றையெல்லாம் தேடித் தேடித் தொழுதோம். இரவு, பகலென்று பாராது மஸ்ஜிதுகளில்'' இஃதிகாப்''இருந்தோம். வறியவர்களுக்கு வாஞ்சையோடு வாரி வழங்கினோம். அல்குர்ஆனை ஆர்வத்தோடு ஓதினோம்.

அல்லாஹ்வை எவ்வாறெல்லாம் நெருங்க முடியுமோ, அவ்வாறெல்லாம் நெருங்கி, தொழுது, அழுது, பாவமன்னிப்பு கோரினோம்.

இவ்வாறு எல்லா நல்அமல்களையும் இப்புனிதமிகு ரமழானில் செய்தோம்.

ஆனால்..... இவற்றுக்கெல்லாம் சிலர், ரமழான் மாதத்தோடு முற்றுப்புள்ளி வைப்பது தான், மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். ரமழானில் மாத்திரம் இவ்வாறெல்லாம் செய்தால், போதுமென நினைப்பவர்கள் நம்மில் ஏராளமுள்ளனர்.

மாதங்களில் ,புனித ரமழானை அல்லாஹுத்த ஆலா அருள் நிறைந்த மாதமாக்கியிருக்கிறான் என்பது உண்மைதான். அதற்காக அந்த ரமழானில் மட்டுமே நல்அமல்கள். செய்துவிட்டு மாதங்களில் அல்லாஹ்வை, அவனது கட்டளையை மறந்து வாழும்படி இஸ்லாம் ஒரு போதும் போதிக்கவில்லை.

முஸ்லிம்கள் எப்போதும் இஸ்லாத்தின் கட்டளைகளை மதித்து நடப்பது கட்டாயக் கடமையாகும்.

முஸ்லிம்கள் முஸ்லிம்களாக வாழாது, இஸ்லாத்தை மறந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதால் தான், இன்று முஸ்லிம்கள் நலிவுற்றிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று, நம்மில் அநேகமானோர் தமது முன்னேற்றங்களை சந்தோஷங்களையெல்லாம் இழந்து, ஏனோ தானோ என வாழ்வதைக் காண்கிறோம்.

இறையச்சம் அவர்களின் இதயத்தை விட்டகல, மறுமையை முற்றாக மறந்து, இம்மையின் சுகபோகத்தில் மூழ்கி, இப்படியாக வாழ்வையிழந்தவர்கள் நம்மில் எத்தனை பேர்.

இஸ்லாமியனாய் எம்மை பிறக்கச் செய்த, அந்த அல்லாஹ்வை ஒரு ஐந்து நிமிடம் செலவழித்து தொழுவதற்கு நேரமில்லாமல், உழைப்பதிலே மூழ்கிப்போனவர்கள் இன்று நம்மில் எத்தனை பேர்!

முஸ்லிம்கள் இன்று, இழிவுக்கும் அழிவுக்கும் ஆளாகிறார்கள் என்றால், அதற்கெல்லாம் காரணம் இஸ்லாத்தை மறந்த செயற்பாடுகள் தான்.

புத்தாடையுடுத்தி, புதுமணம் பூசி, அறுசுவை உணவுகள் உண்டு, மகிழ்வதோடு மட்டுமல்லாமல், இன்றிலிருந்தே சிந்திக்கத் தொடங்குவோம்.

ரமழானில் பெற்ற பயிற்சிகளை, வாழ்நாளில் தொடர்ந்து பின்பற்றுவோம். இஸ்லாத்துக்கு மாற்றமான செயற்பாடுகளில் இனிமேலாவது ஈடுபடாதிருப்போம்.

அனுதினமும் அல்லாஹ்வை தொழுது, அவனிடமே எமது தேவைகளைக் கோரி பெற்றுக் கொள்வோம்.

எப்போதும், இதயத்தில் இரக்கச் சிந்தையோடு செயற்படுவோம். என்றும், நெஞ்சில் நல்ல எண்ணங்களை வளரச் செய்வோம்.

அல்லாஹுத்த ஆலா அவனது திருப்தியைப் பெற்ற நல்லடியார்கள் கூட்டத்தில் எம்மை சேர்த்தருள்வானாக.!

ஆமீன்!

யாரப்பல் ஆலமீன்!

—சித்தி றிஸ்மினா காதிர்கான்


## RAIN BOW TRAVELS (Pvt) LTD

No.113, Chatham Street, (Ground Floor) Colombo - 01.
Tel: 320645, 321072, 075-363341 Fax: 075-363343



நியாயமான விலையில் மகத்தான சேவை

மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டன், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, சென்னை, திருச்சி, திருவனந்தபுரம் போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## Sethu Travels, Communication and Agency Post Office



49 C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 075-557311-2, 075-550076
Fax: 075-522491

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் எமது முகவர் தபால் நிலையமூடாக வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்கள், உறவினர்களுக்குத் தேவையான உடுதுணிகள், உணவுப் பொருட்கள், அன்பளிப்புக்கள் ஆகியவற்றை விரைவில் அனுப்பிவைப்பதற்கு உத்தரவாதம் வழங்கப்படும்.

**24 மணிநேர சேவை**

இதர சேவைகள் IDD, Local, Fax, Laminating, Translation, Typing, net 2 phone

கனடாவில் தொடர்பு:
கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்
தொலைபேசி: (416) 8987284



நம் அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த

**ஈதுல் பித்ர்**

**நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்**

**ஈத் முபாரக்**

இன்றைய மகத்தான நாளில் நாட்டில் சாந்தியும் சமாதானம் மகிழ்ச்சியும் நிலைபெற எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்

"என்றும் புதிய வெளியீடுகள் எண்ணில் அடங்கா தெரிவுகள்"

SAREES, SHALWAR, SHARARA, ABAYAS, GAGRACHOLY, READYMADE GARMENTS & IMPORTED LOCAL TEXTILES

**WORLD BAZAAR**
Textile Centre
4, Rohini Road, Wellawatte, Colombo - 06.
Tel: 599158, 593554
*(Parking Space Available)*

WHOLE SALE DIVISION

**FIVE STAR TEXTILES CENTRE**
95, 2nd Cross Street,
Colombo - 11.
Tel: 441810, 345280





Agent for all Air Lines

யாழ்ப்பாணம், வவுனியா Transport வசதியும் எம்மிடம் உண்டு.

## TRAVEL DATA TOURS & TRAVELS

நியாயமான விலையில் அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

Visa, Passport, Hotel வசதிகளையும் சிரமமின்றி நாம் செய்து தருகிறோம்

இல. 63, Maliban Street, Colombo - 11. Mobile : 071-734100

Toronto: Mr.Param 416-6098381

61, Chatham Street, Colombo - 11. Tel: 385900, 338241-3 Fax: 94-1-338244

ZURICH: Militarstass 88-Ch-8004 Zurich Tel: 01 - 2412885 / 86 E-mail:

எம்மிடம்
Zurich - Colombo-Rtn
Toronto-Colombo-Rtn
London-Colombo-Rtn
விமான டிக்கெட்டுக்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விமான நிலையத்திற்கான போக்குவரத்து வசதி இலவசம்!



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

"ஈத் முபாரக்"

## MYOWN TRADE EXCHANGE (PVT) LTD.

MANPOWER CONSULTANTS AND SUPPLIERS

(L. L. No : 590)

243, Dam Street, Colombo - 12, Sri Lanka.
Tel: 337547, 423289, 441833 Fax: 423289
E-mail: myowntrad@eureka.lk

MYOWN GROUP

# த்திருநாள் சிறப்பிதழ்

## பெருநாள் தொழுகைக்கு முன்
## ''ஸக்காத்துல் பித்ரா''வை வழங்குவோம்!

புகழுக்கும் புண்ணியத்துக்குமுரிய ரமழான் மாதத்தை, இவ்வருடமும் அடையக்கூடிய நற்பாக்கியத்தை நாமடைந்தோம். அல்ஹம்துலில்லாஹ்!

படைத்த நாயனின் ஏவலுக்கு வழிபடும் பொருட்டு, படைக்கப்பட்ட நாம்,புனித ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றோம். கடமையை நிறைவேற்றியதன் அடியார்களுக்கு அல்லாஹுத்தஆலா பரிசாக வழங்கிய ''ஈதுல் பித்ர்'' பெருநாளை கொண்டாடுகிறோம்.

இம் முக்கியமான தினத்தில், அதி முக்கியமான இறை குறிக்கோள் ஒன்றும் எம்மால் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

''செல்வந்தன், ஏழை'' என்ற பாகுபாடின்றி யாவருமே ரமழான் மாதத்தில் நோன்பு நோற்க வேண்டும் என்பதை கட்டாயப்படுத்திய அல்லாஹ், அதேபோல் அந்தச் செல்வந்தர்களுடன் ஏழைகளும் சமமாகவும் சகோதரத்துவப் பாசத்துடனும், இந்தப் பெருநாளையும் கொண்டாட வேண்டும் என விரும்புகிறான்.

ஏனெனில் அவன் நீதி பிசகாதவன். யாவரையும் ஒரே சமமாக பரிபாலிப்பவன்.

''நீங்கள் விரும்புபவற்றிலிருந்து செலவு செய்யாதவரையில் நிச்சயமாக நீங்கள் நன்மையடைய மாட்டீர்கள்.'' (அல் குர்ஆன் 3:92) இது இறைவனின் திருமறையின் ஒரு வசனமாகும்.

இவ்வசனத்துக்கொப்பவே ஏழைகளும் பெருநாளை கொண்டாட வேண்டும் என்றதோர் உன்னத நோக்கில் , இதன் மூலம் இஸ்லாமிய சமூகத்தில் சகோதரத்துவம், புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என்ற நன்னோக்கில், இப்பெருநாள் தினத்தில் ''ஸதக்கதுல் பித்ர்'' என்றதோர் தர்மத்தை இஸ்லாம் விதியாக்கியுள்ளது.

''பித்ர் ஸதகா''(தர்மம்) —நோன்பாளி வீணான,தவறான காரியங்களில் ஈடுபட்டதனால் ஏற்படும் பாவத்தை தூய்மைப்படுத்துவதாகவும், ஏழைகளுக்கு உணவுக்கு வாய்ப்பாகவும் அமைந்துள்ளது.

யார் அதனை (பெருநாள்) தொழுகைக்கு முன்பே கொடுத்து விடுகின்றாரோ, அதுதான் ஒப்புக்கொள்ளப்பட்ட பெருநாள் தர்மமாகும். யார் பெருநாள் தொழுகைக்குப் பின்னர் அதனை வழங்குகிறாரோ, அது சாதாரண தர்மமே அன்றி பெருநாள் தர்மம் அல்ல என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், (நூல்:புகாரி.)

மேற்கண்ட நபி மொழியின் மூலம் இப்பெருநாள் தர்மத்தின் சிறப்பையும் நோக்கத்தையும் தெளிவாக அறியலாம்.

நாம் நோன்பு காலத்தில் செய்த தவறான காரியத்தை இத்தர்மம் தூய்மைப்படுத்துவதாக, நபிமுஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

புனித ரமழானுடைய காலத்தில் நம்மில் பலர் வீணான பல காரியங்களில் ஈடுபட்டு ரமழானின் முழுப்பலனையும் பெறத் தவறியிருப்போம்.

இத்துரதிஷ்டவசமான நிலையிலிருந்து எம்மை மீட்டுக் கொள்ள அரிய வாய்ப்பாக இத்தர்மம் அமைந்துள்ளதால், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ,எமது நோன்புகளை தூய்மையானவையாக ஆக்கிக் கொள்ள நாம் முயல வேண்டும்.

இத்தர்மமானது,ஏழைகளுக்கு உணவுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.''என ரசூல்(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இங்கே தான் இத்தர்மம் வலியுறுத்தும் சகோதரத்துவம் பிரதிபலிக்கப்படுகிறது.

இஸ்லாம் கட்டிக்காக்க எண்ணும் ஐக்கியத்தின் பிரதிபிம்பம் இந்த நபிமொழியின் மூலம் காட்டப்படுகின்றது.

இன்று பெருநாள் தினம் வந்ததும், பணக்காரர்கள்,விதவிதமான ஆடைகள் அணிந்து, பல்சுவை உணவருந்தி, இப்பெருநாளை இன்பகரமாக கொண்டாடும் அதேவேளை, எத்தனையோ ஏழைகள், வாழ வழியற்றோர், இப்பெருநாளிலே ஒரு பிடி சோற்றுக்கு வீடு வீடாக,கடை கடையாக , தெருத் தெருவாக ,ஊர் ஊராக அலைந்து திரிவதைக் காண்கிறோம்.

இந்த அவல நிலையை, இந்த அசாதாரணத்தை இஸ்லாம் விரும்பவில்லை.

எல்லோருக்கும் நோன்பு கடமை என்றால், எல்லோருமே பெருநாளும் கொண்டாட வேண்டும் என இஸ்லாம் கருதுகிறது.

அதனாலேயே, இதனை பெருநாள் தொழுகைக்கு முன்னரே நிறைவேற்றுமாறு நபியவர்கள் பணித்துள்ளார்கள்.

இத்தர்மத்தை நிறைவேற்றும் முறையை நபி மொழியில் வழிகண்டு நாம் அறிந்து கொள்வோம்.

இன்று ,இத்தர்மத்தை வழங்கும் எத்தனையோ தனவந்தர்கள்,முறை தெரியாமல் இக்கடமையை நிறைவேற்றுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

தனது வீட்டு வாசலில் ஏழைகளை மிக நீண்ட வரிசையில் நிற்கச் செய்து '' பித்ர்'' வழங்குவதை காண்கிறோம்.

இதன் மூலம் ''தான் பெரிய கொடையாளி'' என்ற மமதையை ஷைத்தான் இந்த தனவந்தர்களின் உள்ளத்தில் போட்டு,இதன் நன்மையை இழக்கச் செய்யும் சந்தர்ப்பம் அவனுக்கு கிட்டுகிறது.

அத்தோடு சகோதரத்துவம்,ஐக்கியத்துக்குப் பதிலாக அந்த வரிசைகளிலே சண்டையும் முண்டியடித்துக் கொண்ட குழப்புதலுமே ஏற்படுகின்றன.

இவற்றை தவிர்த்து, இத்தர்மத்தின் சரியான நோக்கம் நிறைவேற நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு மொழிந்தார்கள்.

ஏழைகள் இன்று (பெருநாளன்று) வீடு வீடாக சுற்றி வருவதை தேவையற்றதாக்குங்கள்

ஆதாரம்: பைஹகி, இந் நபி நமது வீடு தேடி வருவதை முற்றாக தவிர்த்து,பகரமாக நாமே அவர்களை வீடு தேடிச் சென்று இதனை வழங்க வேண்டும் என்பதை உணர்கிறோம்.

இஸ்லாமிய அன்பர்களே, செல்வந்தர்களுடன் ஏழைகளும் சரிசமமாக இப் பெருநாளை கொண்டாட வேண்டும்.

அதன் மூலம் சமூகத்தினிடையே சகோதரத்துவம் ,ஒற்றுமை மிளிர வேண்டும் என்ற அல்லாஹ்வின் விருப்பத்தை நம் மனதில் பதித்து திருநபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த பிரகாரம் ''பித்ர்'' எனும் இப்பெருநாள் தர்மத்தை நிறைவேற்றி, ஐக்கியத்தின் அறங்காவலர்களாக எம்மை ஆக்கி, அல்லாஹ்வின் திருப்பொருத்தத்துக்கு நாம் ஆளாகுவோமாக! ஆமீன்!யாரப்பல் ஆலமீன்!!

—மொஹமட் ரமழான்


ஈகைத் திருநாளாம் நோன்புப் பெருநாளைகொண்டாடும் எமதருமை நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்...

வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு நம்பி நாட வேண்டிய



நிர்வாக இயக்குநர்
நியூ பாஹிம்

அரச அங்கீகாரம் பெற்ற நம்பிக்கையான ஸ்தாபனமான

**New Fahim Enterprises (Pvt) Ltd.**

உரிமையாளர்கள், கடமை புரியும் ஊழியர்கள் அனைவரினதும் பெருநாள் வாழ்த்துக்கள்

''ஈத் முபாரக்''



கொழும்பில்
**New Fahim Enterprises**
283-1/1, 2/1, 2/1, 3/1,
Main Street, Colombo -11.
Tel : 438030, 423935, 330692
Fax : 431773, 688284
E-mail Newfahim@diamond.lanka.net.
fahim@diamond.lanka.net
**L.L.No.736**

கிழக்கிலங்கையில்
**Fahim Enterprises**
Tel.: 065-47090
Main Street,
Kathankudy -02,
Tel : 065-47090
**L.L.No.1755**

உடனடி வேலை வாய்ப்பு

பெண் சுத்திகரிப்பாளருக்கு
* 3 நாளில் பயணம்
* பயிற்சி அவசியமில்லை
* வயது 21 க்கு மேல்

எம்மிடமுள்ள இதர தொழில் வாய்ப்புக்கள்

Electronic Technician
Telephone Technician
TV/ Radio Technician
Spray Painter * Mason Etc...

ஆண்களுக்குரிய சகல வேலை வாய்ப்புக்களும் கைவசம் உண்டு



RSL Remote Control
மூலம் இயங்கும்
**Antennas**



* Booster
* 30m Wire
* 2 TV Outputs களுடன் கூடியது

**WE WISH ALL OUR CUSTOMERS HAPPY "EID MUBARAK"**



| | |
|---|---|
| 5W-2U =25 W- | 285/- |
| 7W-2U =35 W- | 295/- |
| 9W-2U =45 W- | 295/- |
| 11W-2U=55 W- | 305/- |
| 15W-2U=75 W- | 315/- |
| 15W-3U=75 W- | 390/- |
| 20W-3U=100W- | 430/- |
| 26W-3U=130W- | 460/- |
| 55W-4U=275W- | 1350/- |

**REIMOO SONS LTD**
88A, Main Street,
Colombo - 11.
T.P. 325060, 326643
Fax: 326643, 541218

11, National Housing Scheme,
Kiribathgoda.

26, Station Road,
Panadura.





எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள் ''ஈத் முபாரக்''

பண்டிகைக் காலங்களில் புதுப்புது தெரிவுகள்!

நவ நாகரிக ஆடைகளின் தெரிவு

**Ganesh Textiles**

முழுக்குடும்பத்திற்கும் தேவையான அனைத்து வகைஆடைகளையும் நியாயமான விலையில், ஒரே கூரையின் கீழ் பெற்றிட.....

இன்றே விரையுங்கள்!

கணேஸ் டெக்ஸ்டைல்ஸ்

இல 81-83 மெயின் வீதி, கொழும்பு11, தொ. பே.: 325128, 343078

# மரத்தில் கரண்டி செய்து விற்றால் லாபம் உண்டு!



துருக்கி நாட்டில் பணவீக்கம் அதிகரித்திருக்கிறது. இதனால் நாணயப் பெறுமதியை 35 சதவீதம் குறைக்க வேண்டியதாகி விட்டது.

அதன் எதிரொலியாக விலைவாசி உச்சத்திற்கு போய்விட்டது. மக்கள் உணவுக்காகப் பெருமளவு பணம் செலவிடுகிறார்கள். கோப்பை கரண்டி போன்றவற்றிற்காக அதிக அளவில் பணம் செலவிட முடியாது. இதனால் மரத்தில் கரண்டி செய்யத் தொடங்கிவிட்டார்கள். மலிவான மரக்கரண்டிகளை வீதிகளில் கொண்டுதிரிந்து விற்று தனது வயிற்றுப் பசி தீர்க்கிறார் இந்த நடை பாதை வியாபாரி.


# பாதுகாப்பு கடமைகளில் இந்தோனேசிய பெண்கள்



இந்தோனேஷியாவில் இனங்களுக்கிடையில் மோதல்கள் அதிகரித்திருக்கின்றன. இதனால் சமூக ரீதியான முறையில் அமைதியின்மை அதிகரித்திருக்கின்றது. தடியெடுத்தவன் எல்லாம் தண்டக்காரன் ஆகிவிட்டதால் பெண்கள் அமைதியாக வாழ முடியவில்லை. எனவே இந்தோனேஷியப் பெண்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. பயங்கர ஆயுதங்களைத் தாங்கி இந்தோனேஷியப் பெண்கள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

# காற்றைவிட வேகமாக செல்வதற்குத் துடிப்பு

பந்தயக் காரோட்டத்தில் ஈடுபடுபவர்கள் தமது வாகனங்களைக் காற்றைவிட வேகமாகச் செலுத்தும் வல்லமை படைத்தவர்களாக இருக்கவேண்டும். வேகமாக விரையும் பந்தயக் கார்களின் எடையை குறைத்துக் கொண்டே போவார்கள். அண்மையில் நடைபெற்ற பந்தயக்காரோட்டத்தில் உலகப் புகழ் பெற்ற ஜானோ டிருள்ளி புதிதாக வடிவமைக்கப்பட்ட இந்தப் பந்தயக்காரில் ஓட்டத்தை ஆரம்பித்தார். காற்றைப் போல பறந்தார். ஆனால் பந்தயத்தின் இறுதிக் கட்டத்தில் விபத்தில் சிக்கிக் கொண்டார்.





இமயமலையின் உச்சியில் ஷங்ரில்லா எனப்படும் சொர்க்கலோகம் இருந்தது என்று 1922 ஆம் ஆண்டு ஒரு ஆங்கிலேயே ஆய்வாளர் தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்தை அடியொற்றி ஆங்கிலத் திரைப்படங்களும் வெளிவந்தன. திபெத் மலை உச்சியில் ஷங்ரில்லா இன்றும் இருக்கிறது என்று பௌத்த மடாலயம் ஒன்று தெரிவித்திருக்கிறது. மடாலயத்தின் மொட்டை மாடியில் ஒரு இளம் துறவி அமர்ந்திருக்க பின்னணியில் தெரிவது தான் ஷங்ரில்லா. அந்த சொர்க்க லோகத்திற்கு செல்வதற்கு எத்தனையோபேர் துடிக்கிறார்கள்

# சொர்க்க லோகத்திற்கு செல்லும் வழி எதுவோ?




# ஒளிந்திருக்கும் முகம் எது?



டிசம்பர் 2, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம்இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. வீரசிங்கம் ஸ்ரீரஜனி, மூதூர்.
2. ஏ.எஸ்.எம்.சதாம், திருகோணமலை.
3. தனியா திவானி, முகத்துவாரம்.

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (09.12.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகை யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? பழம் பெரும் நடிகரான கைலைநாதர் குமாரின் மகன் இவர். ஆதவன் போல சுடர்விட ஆவல்.

இந்த முகத்திற்குரியவரைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'

36/2, பிரெட்ரிக்கா வீதி

கொழும்பு – 06.



# புதுமைப் பெண்ணே புதுமை செய்யாயோ....



அநேகமாக எல்லா பத்திரிகைகளிலும் பெண்களுக்கு என்று விஷேடமாக பக்கம் ஒன்று இருக்கும். பத்திரிகைகளில் என்று மட்டுமல்ல. வானொலி, தொலைக்காட்சி எல்லாவற்றிலுமே பெண்களுக்கென தனியான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

இவைகள் அனைத்தும் பெண்களுக்கு சந்தோஷத்துக்குரியவையே! ஆனால் இதில் கவலைக்குரிய விடயமும் உண்டு. என்ன அது என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

ஏன் பெண்கள் ஆக்கங்கள் என்றால் அழகுக் குறிப்புகளும்,சமையல் சமாச்சாரங்களும்,குழந்தை பராமரிப்பு,காதல் இவைகள் மட்டும் இடம்பிடிக்கின்றன. இவைகள் முக்கியமல்ல என்றில்லை. இவைகளும் தேவையானவைகளே!

ஆனால் இன்றைய பெண்ணுலகம், இவற்றின் விலாசங்களை வாசிக்கும் காலம். ஆண்களினால் முடியாதவைகளைக் கூட சாதாரணமாக சாதித்து காட்டும் பெண்கள்.

எனவே கல்வி,விஞ்ஞானம்,தொழில் நுட்பம் ,அரசியல் இவைகளில் பெண்கள் எவ்வாறு மேலும் சாதிக்கலாம் என்பதற்கு அவர்களுக்குரிய ஆக்கங்கள் வழி சமைத்தால் என்ன?

அழகை வளர்க்க இப்பக்கங்களில் வழி தேடும் பெண்கள் அறிவை, ஆற்றலை பெருக்க இதை பயன்படுத்தினால் என்ன?

பெண்களே எழுதுங்கள் — வியக்கத்தக்க விடிவை எங்கள் சுடர்ஒளி ''பெண்'' பக்கம் சாதித்துக் காட்டும்.

# இடிகளையும் எதிர்த்து நில்

எந்த உதவியுமின்றி தனித்து நின்று வாழ்வில் எதிர்நீச்சல் போடும் பெண்கள் சிலர் இருப்பர். அவர்கள் முகங் கொடுக்கும் கஷ்டங்களை விட அவர்களுக்கு பிறர் கொடுக்கும் வேதனைகள் அதிகம்.

தன் வாழ்வில் முன்னேற முயற்சிக்கும் ஒவ்வொரு வினாடியும் ஓராயிரம் இடிகளுக்கு அவள் ஆளாகின்றாள். நரம்பில்லாத நாக்குகள் அவளை சாட்டையாக அடித்து சித்திரவதை செய்து விடுகின்றன.

ஆனால் ஒன்றை மறந்து விடாதீர்கள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் அதே நேரம் புத்திசாலித்தனமாக செயற்படக் கற்றுக் கொள்ளுங்கள். சொந்த காலில் நிற்பதைப்போல் நிம்மதியும் அமைதியும் வேறு எதிலும் கிடையாது. அதை அடைவதற்கு பல சிரமங்கள் வரத்தான் செய்யும்.

நீங்கள் முன்னெடுக்கும் முயற்சிகளை பக்குவமாகவும் அதே நேரம் வேகமாகவும் செய்யுங்கள். உங்களிடம் பொறுமை அவசியம். அந்த பொறுமையே உங்களை வழி நடத்தும் ஆயுதம். அதற்காக பூமா தேவியாக இருந்துவிடாதீர்கள்.

நாம் நல்லதை நினைத்து நல்லதைச் செய்வோம். விளைவு எப்படி என்பதை இப்போது சிந்திக்காதீர்கள். உங்கள் எண்ணம் நல்லது என்றால் கவலைக்கு இடமில்லை.

உங்களைப்பற்றி வசை பாடியவர்கள் எல்லாம் சோர்ந்து விடுவார்கள். அவர்களின் வசை மொழிகளை நீங்கள் பூமாலையாக நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் களைத்துப்போகும்மட்டும் நீங்கள் சளைத்துப் போகாதீர்கள்.

இத்தகைய கொடிய நெஞ்சங்களுக்கு வெற்றிகள் கூட தோல்விகளே. ஆனால் உங்களுக்கு தோல்விகளும் வெற்றியே!




# முக அழகை பேணுவோம்

உங்களின் முக அழகை பேணிக் கொள்ள சில வழி முறைகள் இங்கே

- எலுமிச்சை சாறு தேன் இரண்டையும் சம அளவு எடுத்து கலந்து முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் முகத்திலுள்ள கருமை நீங்கும்.
- உலர்ந்த சருமத்திற்கு: கசகசா, பாதாம் பருப்பு, பால் அல்லது பாலோடு தேன், வசம்புத்தூள் ஆகிய வையை சிறிதளவு எடுத்து ஒன்றாக கலந்து முகத்தில் பூசி 15 நிமிடம் கழித்து கழுவி விடவும் .முகம் பளபளப்பாகும்.
- பருக்கள் அதிகமாக உள்ளவர்களுக்கு: வேப்பங்கொழுந்து, கருந்துளசி, சிவப்புச் சந்தனம்,வசம்புத்தூள், புதினா இவைகளில் ஏதாவது ஒன்றை பரு உள்ள இடத்தில் பூசி வர நல்ல பலன் கிடைக்கும்.
- வெள்ளரிக்காய் , தக்காளிப்பழம், போன்றவற்றை பாலுடன் கலந்து பூசி வந்தாலும் முகம் சோர்வடையாது.

# போலிப் பயம் வேண்டாம்



நீங்கள் ஏன் எதற்கெடுத்தாலும் பயப்படுகின்றீர்கள். ''ஓ..... அட என் மகளுக்கு, கரப்பான் பூச்சி என்றாலே பயம்...'' என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் தாய் (பெண்) இருக்கும் மட்டும் இது தொடரத்தான் செய்யும்.

எந்த தீங்குகள் கூட செய்யாத சில பூச்சிகளைக் கண்டு உண்மையில் உங்களுக்கு பயம்தானா? அல்லது அதைக் கண்டு பயப்படுவதில் பெருமைப்படுகின்றீர்களா?

இதற்குக் காரணம் என்ன? பெண் எப்போதும் மென்மையானவள். அச்சம்,மடம், நாணம்,பயிர்ப்பு எல்லாம் கொண்டவள். இந்த நான்கின் அர்த்தத்தை நீங்கள் பிழையாக புரிந்து வைத்திருக்கின்றீர்கள். அப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் 'கரப்பான் பூச்சிக்கு பயம்' என்று சொல்வதில் பெருமைப்படமாட்டீர்கள்.

நீங்கள் பயப்படவேண்டிய விடயங்கள் உலகில் எவ்வளவோ உள்ளன. அதனை விட்டு விட்டு ஏன் ஒன்றுமில்லாததுக்கு பயம் கொண்டு கீச்சிட்டுக் கலாட்டா போடுகின்றீர்கள்.

இன்றில் இருந்து உங்களின் மடத்தனமான சிந்தனைகளை விட்டு விடுங்கள். பயப்படுவது பெண்ணின் கடமை என்று எண்ணி பெண் சமூகத்துக்கே அநியாயம் செய்யாதீர்கள். ஒரு சின்ன விடயம் பெண் இனத்துக்கே பாதிப்பை உண்டு பண்ணும். மறந்து விடாதீர்கள்.

ஒரு வீட்டில் இருக்கும் சமையல் அறைக்குச் செல்ல பயம்? எப்படி நீங்கள் வாழ்க்கையில் சாதிக்கப் போகின்றீர்கள்.

ஒரு பெண்ணின் மன உறுதி,திடம் ஆணின் உடல் பலத்தை வெல்லக் கூடியது என்பதை மறக்காதீர்கள்.


போலியான பெருமைக்காக பெண்மையின் உண்மையான பெருமையை குழிதோண்டிப் புதைத்து விடாதீர்கள்....!

# நீங்கள் புத்திசாலிகள்

ஆண்களில்90 வீதமானவர்கள் பெண்களை புத்திசாலிகள் என்று ஏற்றுக் கொள்வது இல்லைதான். நம் ஒவ்வொருவர் வீட்டிலும் இந் நிலைதானே காணப்படுகிறது.

போகட்டும் ,யார் உங்களைப் புத்திசாலி என்றாலும் அல்லது மடயர்கள் என்றாலும் உங்களின் திறமை உங்களிடம் உள்ளதுதானே. உங்களை திறமையற்றவர்களாக நினைக்கும் அவர்களின் அறிவீனத்தைக் கண்டு நீங்கள்தான் பொறுத்துப்போக வேண்டும்.

மனிதர்கள் எல்லோருமே தன்னை உயர்வாக மதிப்பிடவேண்டும் என்றுதான் நினைப்பர். அதிலும் கணவன் தனது மனைவியை பெரும்பாலும் தனக்கு கீழ் நினைக்கவே செய்வான் . அதனால் உங்களது திறமைகளை நீங்கள் குறைத்து மதிப்பிட்டுக் கொள்ள அவசியமில்லை. என்ன செய்வது புத்திசாலியானவர்கள் தான் விட்டுக் கொடுத்து போக வேண்டும்.




நீங்கள் ஒரு நாளில் என்ன என்ன செய்கின்றீர்கள் . நீங்கள் செய்யும் விடயங்கள் எல்லாமே வாழ்க்கைக்கு தேவையானவையா? என்று யோசித்து முடிவெடுத்துக் கொள்ளுங்கள் .

வேலைக்கு செல்கின்றீர்களா,வீட்டில் இருக்கின்றீர்களா? எதுவானாலும் பெண்களே உலக விடயங்களை அறிந்து கொள்ளுங்கள். அதில் ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளுங்கள். இன்று எம் நாட்டில் என்ன நடக்கிறது? இத்தனை காலமும் என்ன நடந்தது? அறிந்து கொள்ளுங்கள்.

நான்கு பேருடன் கதைக்கும் போது உங்கள் தொழிலையும், வீட்டையும் மட்டும் கதைக்காமல் உலக விடயங்களையும் கதையுங்கள். அதற்கு உங்களிடம் தேடல் முக்கியம் தேவை. செய்தித்தாள்களை படியுங்கள். அவைகளில் வெளிவரும் கட்டுரைகளை வாசியுங்கள்.

ஒரு நாளைக்கு எத்தனையோ கட்டுரைகள் பத்திரிகையில் வெளிவருகின்றன. அதை வாசித்து பயன் அடைபவர்கள் மிகச் சிலரே

# வாசிக்கும் பெண்ணே நாளை உலகு பற்றி யோசிக்கும் பெண்



வாசிக்கும் பெண்களாக நீங்கள் இருக்கும் வரை உங்களை நீங்கள் எந்த இடத்துக்கும் ஏற்றால் போல் தயார் படுத்திக் கொள்ளலாம். உலக அறிவு கொண்ட பெண்களையே விரும்பும் காலம் இது.

எனவே சகோதரிகளே நல்ல நூல்களை படியுங்கள். பத்திரிகைகளை அன்றாடம் வாசியுங்கள் . வாசிப்பு போல் உங்களுக்கு அறிவைத் தேடித் தருவது எதுவுமே இல்லை.

# எந்தப்பட்டம் பெறும் தகுதியும் ஜீவாவுக்கு கிடையாது

முல்லைமணி
வவுனியா.

டொமினிக் ஜீவா முதுகலைமாணிப் பட்டத்தை நிராகரித்தது பற்றிய சர்ச்சையை 'சுடர் ஒளி ' இதழ்களில் வாசித்தேன். முறக் கொட்டாஞ்சேனை க.குணா எழுதிய கட்டுரை (சுடர் ஒளி வாரமலர் நவம்பர் 04) அட்சர லட்சம் பெறும். சரியான விதத்தில் ஜீவாவை எடைபோட்டுள்ளார்.

இது தொடர்பான எனது கருத்துக்களையும் முன்வைக்க விரும்புகிறேன். பேராசிரியர்கள் மல்லிகையில் எழுதித்தான் பதவி உயர்வு பெற்றார்கள் என்ற வாதம் காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதைதான். மல்லிகையில் எழுதாத எவருக்கும் பல்கலைக் கழகததில் பதவிஉயர்வு கிடைக்கவில்லை என்று அடித்துச் சொல்ல முடியுமா? நிலைமை எதிர்மாறானது என்பது தான் உண்மை. பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கலாநிதிகள் பெயரைச் சொல் லித்தான் மல்லிகையை விற்பனை செய்து ஜீவா தன் சீவியத்தை நடத்தி வருகிறார் என்பதுதான் உண்மை. மல்லிகை காத்திரமான கட்டுரைகளைத் தாங்கிவரு கிறது. இது படித்துவிட்டு வீசி எறிந்துவிடும் ஏடல்ல. இதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று சொல் லித் சொல்லித்தான் மல்லிகையை விற்பனை செய்கிறார்.

வேடிக்கை என்னவென்றால் கட்டுரை எழுதியவர்களின் பெயரின் முன் பேராசிரியர் என்றோ கலாநிதி என்றோ போடுவதில்லை. ஜீவாவுக்கு கலாநிதிப்பட்டம் வழங்கியிருந்தால் மல்லிகை முன்அட்டையில் கொட்டை எழுத்தில் போட்டிருப்பார்.

குணா சுட்டிக்காட்டியது போல இளைய தலைமுறை எழுத்தாளர்களின் ஆக்கங்களை அவர் பிரசுரிக்கத் தயங்கினார். வேறுபத்திரிகைகளில் எழுதி ஓரளவேனும் பிரபலம் அடைந்தவர்களின் — அவர்களுள்ளும் முற்போக்கு அணி என்று முத்திரை குத்திக் கொள்பவர்களின் — ஆக்கங்களையே வெளியிட்டார். ஒரு புதிய எழுத்தாளரின் ஆக்கத்தை எடைபோட்டு அதன் தாரதன்மியத்தை நிறுத்துப்பார்க்கக் கூடிய அடிப்படை அறிவு அவருக்கு இல்லை.

**சர்ச்சை.**

மல்லிகையில் வெளிவரும் சில கட்டுரைகளும், கவிதைகளும் தனக்கே விளங்கவில்லை என ஜீவாவே ஒப்புக் கொண்டுள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் பரிச்சியமுள்ள — தமிழை வரன்முறையாகப் படித்துப் பட்டம் பெற்ற யாப்பிலக்கணம் தெரிந்த — கவிஞர் முருகையன், மல்லிகையில் வெளியான சோலைக்கிளியின் கவிதை தனக்கு விளங்கவில்லையே அப்படியானால் இந்தக் கவிதை யாருக்காக எழுதப்பட்டது என்று கேள்வி எழுப்பி மல்லிகையில் கட்டுரை எழுதியிருந்தார். குறிப்பிட்ட பேராசிரியர் ஒருவரின் (பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை) கட்டுரை விளங்கவில்லை. அச்சுக்கோப்பது சிரமமாக இருக்கிறது என மல்லிகை உதவியாளர் முணுமுணுத்த போது, சொல்விளங்காமல் விட்டால் பரவாயில்லை ஒவ்வொரு எழுத்தையும் தனித்தனி பார்த்து அச்சுக் கோர்க்கலாந்தானே என ஆலோசனை கூறியதும் நினைவுக்கு வருகிறது. முடிவாகச் சொன்னால் எந்த வொரு எழுத்தாள ரையும் மல்லிகை உருவாக்கவில்லை. கலாநிதிகளின் தயவில் மல்லிகை நடந்தது ஜீவாவின் பெரு முயற்சியால்தான், யாழ்ப்பாணத்திற்குப் பல்கலைக்கழகம் வந்ததாம். அரசினதும் அமைச்சர் ஒருவரதும், கல்விமான் களதும் பங்கு மிக மிக அற்பம் என்று கருதுகிறார்களா?

ஜீவாவின் கொள்கை வேறு செய்கை வேறு என்பதற்கு மேலும் சில உதாரணங்கள் .

இந்திய தமிழ்ச் சஞ்சிகைகள் அனைத்தும் குப்பைகள். இலங்கைக்கு அவை வராமல் தடைசெய்யவேண்டும் என்னும் இயக்கத்தின் முக்கிய பங்காளியாகத் தொழிற்பட்டவர் ஜீவா. பின்னர் அதனை மறந்து குமுதத்திலும் இதயம் பேசுகிறதிலும் கெஞ்சி மன்றாடித் தனது கட்டுரைகளைப் பிரசுரிக்கச் செய்து பணம் பெற்றதை அவர் மறுக்க முடியுமா?

ஒடுக்கு முறைக ளுக்கெதிரான தொழிலாளர் குரல் என மல்லிகையை வர்ணிக்கும் ஜீவா நிலமானிய சமுதாயத்தின் குரலாகத் திகழ்ந்த கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்கும் ஜெயராஜிடம் சரணடைந்து தனது இலக்கியக் கொள்கையைவிட்டு 'மூதறிஞர்' பட்டமும் பெற்றுவிட்டார்.

**அவரது கொள்கைவேறு — சொல்வேறு.**

## ஜீவாவின் சாதனை என்ன?

பல்கலைக் கழகக் கௌரவப்பட்டம் பெறுவதற்கு ஜீவாவின் சாதனை என்ன? அவருக்கு அடிப்படைத் தமிழ் அறிவுகூட இல்லயே. ஒரு சிறு உதாரணம். ' அட்டைப்பட ஓவியங்கள் ' என்பது அவர் வெளியிட்ட ஒரு நூலின் தலைப்பு. படம் என்றால் ஓவியம் என்பது ஐந்தாம் வகுப்பு மாணவனுக்குக் கூடத் தெரியும் . பட ஓவியங்கள் என்றால் படப்படங்கள் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அடிப்படைத் தமிழ் அறிவு இருந்தால் இத்தவறு நேர்ந்திருக்காது.

ஜீவா சில சிறுகதைகளை எழுதினார். சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டார். தனது சுயபுராணம் பாடி நூலாக்கினார். மல்லிகை சஞ்சிகையை 36 ஆண்டுகள் வெளிக் கொணர்ந்தார். மாதம் ஒன்று எனக் கணக்கிட்டால் 412 இதழ்கள் வந்திருக்கவேண்டும். அப்படி வரவில்லையே! ஓர் எழுத்தாளரைத் தானும் உருவாக்கவில்லையே, பழந்தமிழ் இலக்கியத்தில் அவருக்குப் பரிச்சயமில்லை. சமகால இலக்கியங்களின் தாரதம்மியங்களை வகைப்படுத்திக் கூறும் ஆற்றல் அவருக்கு இருந்ததா? ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய தேடல் முயற்சி ஏதாவது செய்தாரா? இலக்கிய வளர்ச்சிக்காகத் தன்வாழ்கை முழுவதையும் அர்ப்பணித்திருப்பதாக உரத்துக் கூறுவது வெறும் பம்மாத்து. அவர் வேறு தொழில் எதுவும் செய்யாததால் மல்லிகை இல்லாவிடடால் அவர் பட்டினி கிடந்து சாகவேண்டும். மல்லிகை தொடர்ந்து வருவதன் இரகசியம் இதுதான்.

தேசியம் பேசிய கலாநிதிகள் அன்றைய அரசைத் திருப்திப்படுத்த யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைப் பகிஷ்கரித்தனர். அவர்களுக்கு மலிகை ஜீவா முண்டு கொடுத்தார். தமிழர் உரிமை என்று பேசுபவர்களும் போராடுபவர்களும் (சாத்வீகப் போராட்டம் ) குறுகிய இனவாதிகள், நாம் அனைவரும் இலங்கையர் என்று தேசியம் பேசிய ஜீவா தற்போது அச்சத்தினாலோ என்னவோ மூச்சுவிடுவதில்லை.

'தாழ்ந்த சாதிக்காரனுக்குக் கலாநிதிப்பட்டம் வழங்குவதற்குப் பல்கலைக்கழகம் தயங்குகிறது' என ஒரு கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. இனமத வேறு பாடின்றி உழைக்கும் வர்க்கத்துக்குக் குரல் கொடுக்கும் மார்க்ஸிஸ் சித்தாந்தம் பேசுபவர்கள் தமக்குத் தேவையேற் படும் போது சாதிச்சாயத்தை வெளிக்காட்டுகின்றனர்.

என்.கே.இரகுநாதனும், ஜீவாவும் முற்போக்கு விமர்சகரான உயர்குலப் பேராசிரியர் வீட்டிற்குச் சென்றனர். அவர்களை வீட்டினுள் அழைத்து இருத்தக்கூடியளவுக்கு அவர் குடும்பச் சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை. அதனை வெளிப்படையாகச் சொல்லவும் அவர் விரும்பவில்லை. ஆகா வெளியிலே நல்ல நிலவு பொழிகிறது. 'நிலவில் இருந்து பேசுவோம்' என்று தந்திரமாகச் சமாளித்தாராம். பின்னர் நிலவில் பேசுவோம் என்னும் சிறுகதை வெளிவந்தது.

தாழ்தப்பட்ட சாதியைச் சேர்ந்த எத்தனையோ பேர் தமது கடும் உழைப்பால் கலாநிதிப்பட்டம் பெற்றுள்ள னர். பேராசிரியர்களாகத் திகழ்கின்றனர். ஜீவாவின் சாதனை தனித்தன்மை வாய்ந்ததாக, தற்புதுமையான தாக, புதிய சிந்தனைவீச்சுடையதாக இருந்திருப்பின் நிச்சயம் அவருக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்திருக்கும்.

ஜீவா பட்டத்தை ஏற்காமல் நிராகரித்தது சரியா தவறா என்ற வினாவுக்கே இடமில்லை. எந்தக் கௌரவபட்டத்திற்கும் (அது முதுகலைமாணியாக இருந்தால் கூட ) அவர் தகுதியானவர் அல்லர்.

எனவே யாழ் பல்கலைக்கழகம் (ஏனைய பல்கலைக்கழகங்களும்தான்) ஜீவா போன்றவர்களைக் கௌரவிக்க முன்வரக்கூடாது.

**அடுத்த வாரத்துடன் இந்த சர்ச்சை முடிவடைகிறது.**

# ராசி பலன்

16.12.2001 முதல் 22.12.2001 வரை பொ.சந்திரன்.

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

சூரியன், செவ்வாய், ராகு ஆகிய கிரகங்கள் நன்மைசெய்யும். புதன், கேது ஓர் அளவு நன்மை செய்யலாம். பணத்தட்டுப்பாடு நிலவும். கல்வியில் கவனம்குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்தகாரியங் கள் நல்லமுறையில் அமையும். பிரயாண வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத் தலாம். முன்பு இருந்தநோய்கள் விலகும். நல்ல ஆரோக்கியம் உடல்நிலையில் இருக்கும். தொழில்துறையில் மந்தநிலைநீடிக்கும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

குரு, சுக்கிரன், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், கேது ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயலை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். மன அமைதி இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில்துறையில் ஏற்ற இறக்கம் இருக்கும்.

**மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

புதன், செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மைசெய்யும். சனி, சூரியன் ஓர் அளவு நன்மை செய்யலாம். பணம்இருக்கும். கல்வியில்கவனம்குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்தசெயலைஇலகுவில்செய்து முடிக்கலாம். பிரயாண வாய்ப்பு உண்டு. வீடு, வாகனம்லாபம் தரும். உடல்ஆரோக்கியம்சிறப்பாகஇருக்கும். தொழில்துறை சீராகமுன்னேறும். நண்பர்களின் உதவிகிட்டும். பெரியவர்களின் ஆசிகிட்டும்.

**கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சுக்கிரன், சனி, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, சந்திரன் போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். எடுத்த செயல் பெரும்பாலும் தாமதமாகவே நிறைவேறும். மன அமைதி இருக்காது. வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில்துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1**

சூரியன், புதன், குரு போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சுக்கிரன், சனி ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் நிலை நல்ல ஆரோக்கியமாக இருக் கும். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2**

புதன், செவ்வாய், சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, குரு போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எடுத்த செயலை இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும். பிர யாண வாய்ப்பு உண்டு. திருமணவாய்ப்பு பிரகாச மாக இருக் கும். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

சுக்கிரன், குரு, செவ்வாய் ஆகிய கிரகங்கள் நன்மைசெய்யும். ராகு, சூரியன் போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த செயலை எத்தடைவரினும் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். உடல் ஆரோக்கியமாக இருக்கும். திருமணயோகம் உண்டு. தொழில்துறையில் சிலபின்னடைவு வரவாய்ப்புள்ளது.

**விருச்சிகம் : விசாகம் 4, அனுஷம், கேட்டை**

சுக்கிரன், புதன், செவ்வாய் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, சந்திரன் ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் இருக்கும். மன அமைதி இருக்காது. எண்ணிய கருமத்தை செயல்படுத்தலாம். வீடு, வாகனம் லாபம் தரும். முன்பு இருந்த நோய் விலகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். நண்பர்களின் உதவி இருக்கும். தெய்வ அருள் கிட்டும்.

**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.**

புதன், குரு, சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், சுக்கிரன் ஆகிய கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் தட்டுப்படலாம். கல்வி யில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எண்ணிய கருமம் இலகுவில் கைகூடும். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் சிறு பாதிப்பு வரவாய்ப்புள்ளது. தொழில் துறை முன்னேறும். நண்பர்களால் செலவு இருக்கும்.

**மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.**

சுக்கிரன், ராகு, கேது ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மை யுண்டு. பணம் தட்டுப்படலாம். கல்வியில் கவனம் குறையலாம். மன அமைதி இருக்காது. எண்ணிய கருமம் கைகூடும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் நிலை யில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில்துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் உதவி கிட்டும்.

**கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3**

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்களால் நன்மையுண்டு. சூரியன், கேது போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எண்ணிய கருமத்துக்கு தடையேதும் இல்லை . வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பிரகா சமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது.

**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி**

புதன், சுக்கிரன், செவ்வாய் போன்ற கிரகங் களால் நன்மையுண்டு. குரு, சனி போன்ற கிரகங் களால் ஓர் அளவு நன்மை இருக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எண்ணிய கருமத்துக்கு சில தடைவர வாய்ப்புள்ளது. வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். பிரயாணமும் திருமண வாய்ப்பும் உண்டு. உடல் நிலை நல்ல ஆரோக்கியமாக இருக்கும். தொழில் யோகம் உண்டு.

# கருத்தடை மாத்திரை காரணம் கலவியல் நாட்டம் பூஜ்யம்

## 30— 35 வயதுக்கு முன்பே மகப்பேறு அவசியம்

கே: எனது வயது 21 (பெண்). நான் பிறந்த மறுநாள் BCG ஊசி கொடுக்கப்பட்டது. ஆனால் ஊசி கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் இல்லை. நான் சுடர் ஒளி பத்திரிகையில் இது சம்பந்தமான உங்கள் ஆலோசனையைப் பார்த்தபின்பே இதை எழுதுகிறேன். எனக்கு BCG அடையாளம் இல்லாத காரணத்தால் நான் மீண்டும் இந்த ஊசியைப் போட்டுக் கொள்ள வேண்டுமா?

ப: *BCG ஊசியானது கசரோகம் (TB) என்னும் நோயை தடுப்பதற்காக கொடுக்கப்படுகிறது. இது குழந்தை பிறந்தவுடன் போடப்படும். இது போடப்பட்டால் 6 மாதகாலத்துக்குள் இது போடப்பட்ட தற்கான அடையாளம் ஏற்பட வேண் டும். அப்படி ஏற்படாவிட்டால் அந்த ஊசி சரியான முறையில் தொழிற்பட வில்லை என்பதே கருத்தா கும். எனவே அந்த ஊசியை மீண்டும் போட்டுக் கொள்ளவேண்டும். 5 வயதிற்கு குறைவாக உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் BCG அடையாளம் இருக்கிறதா என சோதித்துப் பார்த்துக் கொள்வது பெற்றோர்களின் கடமை. அப்படி இல்லாவிட்டால் அந்த ஊசியை மீண்டும் போட்டுக்கொள்ள வேண்டும். BCG இற்கான அடையாளம் இல்லாதது 5 வயது கடந்தபின் அறியப்படின் உங்களின் உடலிலுள்ள கசநோய்க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அறிந்து கொள்வதற்காக ரியூபகியூ லின் (Tuber Culin test) எனப்படும் சோதனை செய்யப்படும். இந்தச் சோதனையில் போதிய நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாதது அறியப்படின் மீண்டும் BCG ஊசி போட வேண்டும். இந்த சோதனையின் போது போதிய நோய் எதிர்ப்புச் சக்தி இருப்பது தெரிய வந்தால் நீங்கள் இந்த ஊசியைப் போடத் தேவையில்லை.*

*உங்களது வயது 21 எனக் குறிப்பிட்டிருந்தீர்கள். எனவே உங்களுக்கு முதலில் ரியூபகியூலின் சோதனை எனப்படும் ஒரு சோதனை செய்ய வேண்டும். அந்தச் சோதனை யின் பெறுபேற்றைப் பொறுத்தே உங்க ளுக்கு BCG ஊசி தேவையா, இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும்.*

> கசரோகத்தைத் தடுப்பதற்கான BCG ஊசியைப் போட்டால் ஆறு மாத காலத்துக்குள் அது போடப்பட்டதற்கான அடையாளம் ஏற்பட வேண்டும். அப்படி ஏற்படாவிட்டால் அந்த ஊசி சரியான முறையில் தொழிற்படவில்லை என்பதே அர்த்தம். எனவே அப்படியான சந்தர்ப்பங்களில் அந்த ஊசியை மீண்டும் போடவேண்டும்.

கே :எனது வயது 32 (பெண்) திருமணமாகி இரண்டு வருடங்கள் பூர்த் தியாகின்றன. எனக்கு இருக்கும் பிரச் சினை என்ன வென்றால் கடந்த 6—7 மாதங்களாக உடலுறவிலே நாட்டம் மிகவும் குறைந்து போயிருக்கிறது. அத்துடன் மார்பகங்கள் இரண்டிலும் ஒருவகை வலி இருந்து வருகிறது. எமக்கு இன்னும் குழந்தைகள் இல்லை. நாம் சில கடமைகளை நிறைவேற்ற இருப்பதால் வேண்டு மென்றே குழந்தைகள் பெறுவதைப் பிற்போட்டிருக்கின்றோம். அதற்காக நான் கடந்த 10 மாதங்களாக கருத்தடை மாத்திரைகளைப் பாவித்து வருகிறேன். எனக்கோ கணவருக்கோ எந்தவிதமான நோயும் இல்லை. நாம் ஒற்றுமையாக இருக்கிறோம். எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்தக் குறைபாட்டினால் எம்மி டையே பிரச்சினைகள் ஏற்படலாமோ என அஞ்சுகிறேன். இது மார்பகப் புற்றுநோயின் அறி குறியாக இருக்குமா? எனது பிரச்சினை தீர உங்களது பதிலை எதிர்பார்க்கிறேன்.

ப: *பல ஆண்கள் வீரியக்குறைவு காரணமாகி கஷ்டப்படுவது போல் பல பெண் களுக்கு பொதுவாக ஏற்படுகின்ற குறைபாடு உறவிலே நாட்டம் குறைந்து போதல் ஆகும். இதற்கு பல்வேறு காரணங்களும் பலவிதமான வைத்திய முறைகளும் உண்டு. ஆனால் உங்களுக்கு இது ஏற்பட்டிருப்பதற்கு காரணம் கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்து வதே. கருத்தடை மாத்தி ரைகளைப் பயன்படுத்தும் பெண்களில் சிலருக்கு உறவிலே நாட் டம் குறைந்து போகும். மார்பகங்களில் ஏற்படும் வலிக்கும் இந்தக் கருத்தடை மாத்தி ரைகளே காரணமாகும். எனவே நீங்கள் உடனடியாக கருத்தடை மாத்திரைகளைப் பாவிப்பதை நிறுத்தி விடுங்கள். உங்கள் பிரச்சி னைக்கு தீர்வுகிடைக்கும். நீங்கள் குழந்தை பெற்றுக் கொள்வதை பின் தள்ளிப் போடுவது ஒரு புத்திசாலித் தனமான காரியமல்ல. 30 அல்லது 35 வயதிற்கு முன்னரே எல்லாப் பிள்ளைகளையும் பெற்றுக்கொள்வது நல்லது என பல்வேறுபட்ட ஆராய்ச்சி கள் நிரூபித்துள்ளன. எனவே குழந்தை பெற்றுக் கொள்வதை பின் போடுவது என்ற உங்கள் முடிவையும் மீள்பரிசீலனை செய்து கொள்ளுங்கள்.*

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:—
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 36/2, பிரெட்றிகா வீதி,
> கொழும்பு — 06.

கே: எனக்கு 29 வயது (பெண்) நான் பருவமடையும் பொழுது வயது 15. அந்த நாட்களிலி ருந்து எனக்கு மாதவிலக்கு ஒழுங்காக வருவதில்லை. இரண்டு மாதங்களுக்கு ஒருதடவையோ அல்லது 3 மாதங்களுக்கு ஒரு தடவையோ தான் ஏற்படும். கடுமையாகப்படுவதில்லை. எனக்கு நான்கு வருடங்களுக்கு முன் திருமணம் நடந்தது. எம் குடும்ப வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் எங்களுக்கு இன்னும் குழந்தைகள் இல்லை. எனக்கு இருந்த இந்த குறை பாட்டை கணவ னுக்குச் சொல்லாமல் நான் திருமணம் செய்தது தவறா என்ற குற்ற உணர்வு எனக்கு இருக்கிறது. அத்துடன் எனது உடல் நிறை அதிகரித்து வருகிறது. கடந்த 6—7 வருடங்களாக உடல் நிறையைக் குறைக்க நான் பல முயற் சிகள் செய்தும் உடல் நிறை குறைய வில்லை. இத்துடன் எனக்கு நீண்ட காலமாக முகத்திலே உரோமம் சற்று அதிகமாக இருக்கிறது. முகத்தில் உள்ள உரோமங்களுக்கு என்ன செய்யலாம் என முன்பு இந்தப் பகுதியில் பிரசுரமான குறிப்பை வாசித்திருக்கிறேன். எனக்கு இது பெரிய பிரச்சினையாக இல்லை. ஆனால் எனது மாத விலக்கை ஒழுங்காக் கவும் எங்க ளுக்கு ஒரு குழந்தை கிடைக்கவும் நான் என்ன செய்ய வேண்டும். எனது இந்த நிலைக்கு காரணம் என்ன? உங்கள் ஆலோசனைப்படி நடந்து கொள்வேன். உங்கள் விரிவான பதிலை விரைவில் எதிர்பார்க் கிறேன். எனது உயரம் 157 செ .மீ நிறை 73 கி.கி.

ப : *உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலையை பொலிசிஸ்ரிக் ஒவேறி யன்சின்றோம். (polycystic ovarian syndrome) என்று சொல்லுவார்கள் . உங்க ளது கடிதத்தை ஒத்த வேறு 3 கடிதங்களும் வந்துள்ளன. அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதும் இதே நிலையே. இங்கே தரப்படுவது அவர்களது கடிதங்களுக்கும் பதிலாக அமைகிறது. உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த பொலிசிரிக் ஒவேறியன் சின்றோம் எனப்படும் இந்த நோய் இலங்கை யிலே 4% ஆன பெண்க ளிலே காணப் படுகிறது. இதன் அறிகுறிகள் மாத விலக்கு ஒழுங்கற்ற முறை யில் தாமதமாகி குறைவாக வருதலும் உடற்பருமன் அதிகரித்தலுமாகும். அத்துடன் முகத் திலே உரோமம் சற்று அதிகமாக வளரும். இந்த அறிகுறி கள் பொதுவாக பருவம் அடைந்த காலத்திலிருந்தே ஆரம்பிக்கும். நாளுக்கு நாள் உடற் பருமனும் அதிகரிக்கும். திருமண மான பின் இவர்களுக்கு குழந்தை கிடைக்கும் சந் தர்ப்பம் சற்றுக் குறைவாக இருக்கும். காரணம் மாதவிலக்கு சக்கரத்தின் போது இவர்களின் சூலகத்திலிருந்து முட்டை வெளிவருவதில் தடங்கல் ஏற்படுகிறது. நீங்கள் கவலைப் பட வேண்டிய அவசியமில்லை. இது ஓர் ஆபத்தான நோய் அல்ல. நீங்கள் பின் வரும் அறிவுரைக ளைக் கடைப் பிடித் தால் உங்களுக்கு குழந்தைகள் கிடைப்பதுடன் இந்த நோயின் மற்றைய அறிகுறிகளும் மறைந்து போகும். உங்களுடைய உடல் நிறையை நீங்கள் தீவிர முயற்சிஎடுத்து குறைத்துக்கொள்ள வேண்டும். உங்களுடைய உயரம் 157 செ.மீ என்று குறிப்பிட்டிருந்தீர்கள். எனவே உங்கள் உடல்நிறையை 73 கி.கி இலிருந்து 56 கி.கி இற்கு குறைத்துக் கொள்ள வேண்டும். இதுவே உங்களுக்கு இருக்கவேண்டிய உடல்நிறை. இதற்கு என்ன வழிமுறைகளைக் கையாளவேண்டும் என்பது முன்பு பிரசுரமாகி இருக்கிறது. இவ்வாறு உங்களுக்கு நிறைக் குறைப்பு செய்ய முடியுமாயின் உங்கள் நோயின் எல்லா அறிகுறிகளும் மறைந்துவிடும். ஆனால் பெரும்பாலான நோயாளர் கள் தொடர்ந்து தீவிரமாக முயற்சிக்காததன் காரணத்தால் இந்த நிறைக் குறைப்பை செய்யமுடியாமல் இருக்கிறார்கள். மிக அண்மைக்கால ஆராய்ச்சிகள் மெற்போமின் (Metformin) என்னும் மருந்து இந்த நோயின் எல்லா அறிகுறிகளையும் முற்றாகக் குணமாக்கும் வல்லமை கொண்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இந்த ஆராய்ச்சிகள் இன்னும் பூரணமாக முற்றுப் பெறாத காரணத்தால் இந்த மருந்தை இந்த நோய்க்கு பாவிப்ப தற்கான அனுமதி இன்னும் வழங்கப்பட வில்லை. குளோமிபின் (Clomiphine) என்னும் மருந்து உங்களுக்கு குழந்தை கிடைப்பதற்கு பெரிதும் உதவியாக இருக்கும். நீங்கள் முதலில் ஒரு மகப்பேற்று வைத்திய நிபுணரைச் சந்தித்து உங்கள் நோயை உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள் உறுதிப் படுத்துவதற்கு சில இரத்தச் சோதனைகளும் (LH FSh Ratio) வயிற்றில் ஒரு ஸ்கான் சோதனையும் தேவைப் படும். அதன் பின்னர் வைத்தியரின் கண் காணிப்பில் இந்த மருந்தைப் பாவித்து வந்தால் உங்களுக்கு குழந் தைகள் கிடைக்கும். உங்களுடைய முகத்திலுள்ள முடியை அகற்றுவதற்கும் பல மருந்துகள் உண்டு. (Cyproterone acetate, spironolactone) ஆனால் இவற்றை பாவித்துக் கொண்டிருக் கும் பொழுது நீங்கள் கர்ப்ப மானால் அது பிள்ளை யில் தாக்கத்தை ஏற்படுத் தலாம். எனவே அந்த மருந்துகள் தற்பொழுது உங்களுக்கு பொருத்த மானவை அல்ல. பொலி சிஸ்ரிக் ஒவேறியன் சின்றோம் எனப்படும் இந்த நோய் உள்ளவர்களுக்கு இரத்தத்தில் கொலஸ் ரோலின் அளவு அதிகமாக இருந்தால் நீரிழிவு நோய் போன்றவை காணப் படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. எனவே உங்கள் இரத்தத்தின் குளுக் கோசின் அளவையும் கொலஸ்ரோலின் அளவையும் சோதித்துப் பார்த் துக் கொள்ளவேண்டும். எனவே நீங் கள் ஒரு மகப்பேற்று வைத்திய நிபு ணரின் ஆலோசனையுடன் எல்லாவற்றையும் செய்துகொள்ளலாம். நிறைகுறைப்பதற்கான தீவிர முயற்சியை இன்றே ஆரம்பியுங்கள்.*

> பொலிசிஸ்ரிக் ஓவேறியன் சின்றோம் என்னும் நோய் உள்ளவர்களுக்கு இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கும். நீரிழிவு நோய் ஏற்படும் சாத்தியம் இருக்கும்.

## வாசகர் இதயம் பேசுகிறது

மிகப் பொருத்தமான ஓர் கால கட்டத்திலே 'சுடர் ஒளி' பிரகாசிக்கத் தொடங்கியிருப்பது தமிழ்சமூகத்தினரால் வரவேற்கப்பட வேண்டிய விடயம். நல்லதொரு பணியைத் தொடங்கி யிருக்கும் தங்களுக்கு எமது இதயங்கனிந்த பாராட்டுக்கள்.

**கவிஞர் புரட்சி பாலன், உவர்மலை.**

வாரம் வாரம் என் இதய வானில் உலாவரும் இனிய சுடர் ஒளியே!... நீ தாங்கி வரும் சகல ஆக்கங்களும் என்னைக் கவர்ந் தவையே. எதை மறந்தாலும்என் தூக்கத்தை கலைத்து உன்னை மட்டும் படித்ததை மறக்க மாட்டேன்.

**''வாசகபுகழ்'' ச. அசோக், முருங்கன்.**

வன்னி வாழ் மக்களின் மனம் கவர்ந்த சுடர் ஒளியே உன் இலவச மருத்துவ ஆலோசனைகளை படித்து பயன் அடைகின்றேன். இதே போல் நீ சுய தொழில் முயற்சி, சிறுகைத் தொழில் தொடர்பான தகவல்களையும் தருவாயானால், அதிகமான மக்கள் பயன் அடைவார்கள். இலவச ஆங்கில கல்வியையும் தருவாயா சுடரொளியே.

**எஸ். முரளி, வன்னி.**

தரமான ஆக்கங்கள் மூலம் பிரகாசிக்கும் சுடர் ஒளியே! இளஞ்சுடர் பகுதி என் நெஞ்சத்தை கொள்ளை கொண்டுள்ளது. சினிமாப் பகுதியும் என் மனதைக் கவர்ந்துள்ளது. பற்பல இடர்களுக்கு மத்தியில் உன்னை வாசித்து பெருமிதம் அடை கின்றேன்.

**தி.அரன், சுண்டிக்குளம்.**

வன்னிவாழ் மக்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட சுடரொளியே! நீ தரும் அனைத்துப் படைப்புகளும் அருமை. உன் வயதோ சிறிது. ஆனால் உன் திறமையோ பெரிது. இன்று போல் நீ என்றும் எம் இதயங்களில் இனிதே வலம் வரவேண்டும்.

**பாமினி பழனிவேல், வள்ளிபுனம்.**

நீ சுமந்து வரும் செய்திகள் அனைத்தும் ஆகா ஓகோ என்று பாராட்டத்தக்கவை. சிறுவர் பகுதி, மசாலாமிக்ஸ், பித்தன் பதில்கள், சினிமா, சிறுகதை என்பவை என் விருப்பத்திற்குரியவை. சுடர் ஒளி பல்லாண்டு காலம் சுடர் விட்டுப் பிரகாசிக்க வேண்டும்.

**றமிலா, வட்டுக்கோட்டை.**

ஓயாத அலைகள் 'வெளிவராத தகவல்கள்', அரசியல் கட்டுரைகள், பக்கத்து வீடு, சிறியோர் மட்டுமல்லாமல் பெரியோரும் அறிந்து கொள்ள வேண்டிய இளஞ்சுடர் அறிவுக் களஞ் சியம், மிஸ்டர் க்றோ, இலவச மருத்துவ ஆலோ சனைகள் இன்னும் எத்தனையோ விடயங்களை அள்ளித் தருகிறாய். சுடர் ஒளியே.

**க. பிலேந்திரன், பொற்கேணி.**

தேர்தல் வன்முறைகள் பற்றிய தொகுப்புச் செய்திகள் பிரமாதம். சூடான செய்திகளை சுவைபட சுடச்சுட எதிர்பார்த்து உன்னை வாசித்து அரவணைக்கக் காத்திருக்கும் என்றும் சுடர் விடும் வாசகன்.

**ஜே. எம். பாரீஸ், தெல்தெனிய.**

சுடர் ஒளி வார இதழில் கடந்த சில வாரங்களாக வெளிவந்த தேர்தல் களம் சிறப்பாக இருந்தது. பல தகவல்களை அள்ளித் தந்தது. ஆனால் வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்று திருகோணமலை தேர்தல் களம் பூரண தகவல்களைத் தரத் தவறிவிட்டது. இது ஏன்?

**ஆர். சூரியகுமார், தம்பலகாமம்.**

டாக்டர் சிவன் சுதனின் மருத்துவப் பகுதி தற்பொழுது படத்துடனும் பிரசுரமாகிறது. எமது பாராட்டுக்கள்.

**லொயிட் சிந்தியா, கிருலப்பனை.**

சூடான செய்திகள் என்னை வியக்க வைத்துவிட்டன. வாழ்த்துக்கள் சுடர் ஒளிக்கு.

**ப. லஷ்மணன், யாழ்ப்பாணம்.**

கரஸ் எழுதிய ''தீபாவளி கலாட்டாக்கள்'' ''விகிதா சாரப்பரீட்சை முறை'' நகைச்சு வை ஆக்கங்கள் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன. தொடர்ந்து இத்தகைய நகைசுவை விருந்துகளை எங்களுக்கு அளியுங்கள்.

**லோகன், மன்னார்.**



# பில்கேட்ஸின் சிறுவர்களுக்கான வெப்தளங்கள்


கணனி தொடர்பான பலமென் பொருள்களை உருவாக்கி வரும் பில்கேட்ஸின் மைக்ரோ சொஃப்ட் நிறுவனத்தினர் குழந்தைகளுக்காகவும் சில வெப்தளங்களை அமைத்திருக்கின்றனர்.

சுறாமீன், டைனோசர்ஸ், விண்வெளி, ஆழ்கடல் அதிசயங்கள், வியப்பூட்டும் விந்தைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆய்வுகள் என அனைத்து விஷயங்களையும் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் எளிய மொழிநடையில் இந்த வெப்தளங்கள் விளக்குகின்றன.

வயதுப் பாகுபாட்டு முறையில் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் தகவல்கள் தரப்படுகின்றன என்பது இந்த மைக்ரோ சொஃப்ட் நிறுவன வெப்தளங்களின் விஷேசமாகும்.



சிறுவர்களுக்கான பொழுது போக்கு அம்சங்கள் வளர்ப்பு பிராணிகளைப் பற்றிய தகவல்கள் கை வேலைப்பகுதி என பல சுவாரஸ்யமான தகவல்கள் இந்த வெப் தளத்திற்குள் புகுத்தப்பட்டு இருக்கின்றன.




## ஊர்பெயர்களில் உயிரினங்கள்.

*கரடியனாறு............கரடி
*கிளிநொச்சி.......கிளி
*ஆட்காட்டிவெளி...ஆட்காட்டி
*ஆனைக்கோட்டை...யானை
*முதலைக்குடா.....முதலை
*கரியாலை நாகபடுவான் ..............................கரி
*அரியாலை.............அரி
*ஆனையிறவு....யானை
*கௌதாரிமுனை....... ..........................கௌதாரி
*ஓமான்...............மான்
*குரங்குப்பாலம்....குரங்கு
*குதிரை மலை...குதிரை
*நுவரெலியா..........எலி
*கிரிமலை.............. கிரி
*பூநகரி.................. கரி
*காக்கை தீவு ........காகம்
*ஈச்சமோட்டை...........ஈ

ந.விஜிதா, ஆண்டு—10
சைவ மங்கையர் கழகம்

## தமிழை வளர்ப்பது நம் தலையாய கடமையாகும்

இவ்வுலகில் நிலவி வருகின்ற ஆயிரக்கணக்கான மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழும் நாமும் எத்தகைய உறவைக் கொண்டுள்ளோம். என்பதை விளக்க ஒரு கவிஞர் இப்படிக் கூறுகின்றார். ''தமிழே உயிரே வணக்கம் தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்.'' என்று கூறினார். இது இப்படி இருக்க சுப்பிரமணிய பாரதியார் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது ஒன்றையும் காணோம்.'' என்று கூறுகின்றார். மேலும் ''தமிழுக்கு அமுது என்று பெயர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்றும் கவிஞர் ஒருவர் கூறியுள்ளார். சிறப்புக்குரிய தமிழ்மொழியானது இன்று உலகமெல்லாம் பரந்து காணப் படுகிறது. நமது தாய் மொழியாம் தமிழ்மொழியை வளர்த்திட வேண்டியது எமது தலையாய கடமையாகும். எனவே நாம் தமிழை பிழையறப் பேசவும், எழுதவும் முயலவேண்டும்.

சு. துவாரகி, ஆண்டு —10
கிளி/இந்துக் கல்லூரி

## சிந்தனைக்கு

நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் தடிந்தெழிலிதான் நல் காதாகிவிடும்.
மேகமானது கடல் நீரை முகர்ந்து சென்று மீண்டும் மழையாகப் பெய்யாவிட்டால். அப்பெரிய கடலும் தன் வளமையில் குறைந்து போகும்.
பா. புகழ்யா, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை.

## நாடுகளும், தலை நகரங்களும்

1. தாய்லாந்து............................................பாங்கொக்
2. ஈராக்.....................................................பக்தாத்
3. பாகிஸ்தான்..........................................இஸ்லாமாபாத்
4. அமெரிக்கா..............................................வாஷிங்டன்

எஸ்.யாழினி, தரம் — 6 றூ/ பரிசுத்த கிறிஸ்தவ மத்திய கல்லூரி



# ஜொலி சப் (ஷர்மிலா)

## விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளை றோட்டிலே கறுப்புக்கார் ஓடுது அது என்ன? கண்
2. அப்பாவினுடைய காசுகளை எண்ணமுடியாது. அம்மாவினுடைய சேலையை மடிக்கமுடியாது அது என்ன? நட்சத்திரம், வானம்
3. வீட்டுக்குவந்த விருந்தாளி உள்ளே வரமாட்டார் அது யார்? செருப்பு
4. வெள்ளைப் பிள்ளையார் கோயிலில் விழுந்துகும்பிட இடமில்லை அது என்ன? முட்டை
5. பகலில் தெரியும் இரவில் தெரியாது அது என்ன? சூரியன்

சோபனா ஆனந்த கணேசன், யா/யூனியன் கல்லூரி.

## சிறுவர் கைவண்ணம்



கோ. கௌசிகா
தரம் 05
நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்
நயினாதீவு



கோ. கஜேந்திரன்
கிளி. பூநகரி
மகாவித்தியாலயம்
ஆண்டு —09
ஜெயபுரம்,
பூநகரி.

## றோசாப்பூ


நல்ல நல்ல றோசாப்பூ
நாங்கள் விரும்பும் றோசாப்பூ
சிவப்பு நிற றோசாப்பூ
உள்ளம் கவரும் றோசாப்பூ

வாசனை நிறைந்த றோசாப்பூ
தலையில் சூடும் றோசாப்பூ

அன்பை சொல்லும் றோசாப்பூ
எங்கள் வீட்டு றோசாப்பூ

க. சுகர்னா, தரம் — 8C
யாழ்ப்பாணக்கல்லூரி

## அறிவியல் விந்தைகள்



எமது பூமிக்கு மிக வும் அருகில் ஒரு நட்சத் திரம் இருக்கிறது. அல்பா சென்டரி என்று அழைக்கப்படும் இந்த நட்சத்திரத்திற்கு நாம் நினைத்தால் போய் வர முடியும் இதற்கு எமக்குத் தேவைப்படுவது விநாடிக்கு 30,000 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லும் வாகனம் மட்டுமே.




## சிறுவர் உரிமைகள்

சிறுவரைப் போற்றிடும் உலகே எமை நீ
சிதைத்திட நினைப்பது முறையோ?
ஏட்டினில் எழுதி எம்மை ஏய்த்தபோதும். எம்மை நாமே காத்திட விளைவோம்.
உரிமைக்குரலதை உரத்தே கொடுப்போம்.
உரிமை பெற்று உயர்ந்தே வாழ்வோம்.
எம்மை ஆள எவரும் வேண்டாம்.
எம்மை நாமே ஆள்வோம்.
நாளைய சந்ததிகள் நாமேநாட்டைக் காக்கும் தலைவர்களும் நாமே
எங்களது உரிமைகளைத்தாருங்கள்? அல்லாவிடின், எங்களாலும்பெற்றுக் கொள்ளமுடியும்.

கு. டீபன், தரம் 9, மு/ உடையார்கட்டு ம.வி

## என் உயிர் நண்பி

என் நண்பியின் பெயர் அமிர்த நிவாசினி சிவராஜ தேவா. என் நண்பி யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி கற்கின்றார். என் நண்பிக்கு அன்பான ஒரு அண்ணாவும் தங்கச்சியும் இருக் கின்றனர். இவர்களும் யாழ்ப் பாணக் கல்லூரியில் கல்வி கற்கின்றார்கள். எனது நண்பியின் அம்மா வட்டு. மத்திய கல்லூரியில் ஆசிரியையாகக் கடமை ஆற்றுகின்றார். என் நண்பி போல வேறு ஒருவரும் இல்லை நானும் என் நிவாசியும் எப்பொழுதுமே பிரியாமல் ஒற்றுமையோடு இருக்க வேண்டும். இது தான் என் ஆசை.

க. சுகர்னா,
யாழ்ப்பாணக்கல்லூரி.

## வானத்தில் பறந்த கதை

ஆர்வில் ரைட் என்பவரே முதலில் வானத்தில் பறப்பதற்கு வழி கண்டுபிடித்தவர். இவரது சின்னஞ்சிறு பருவவாழ்வு துயரம் நிறைந்தது. இவர் சிறுவனாய் இருந்த போது தெருவில் கிடக்கும் துருப்பிடித்த இரும்புகளையும் எலும்புத் துண்டுகளையும் பொறுக்கி விற்று வாழ்வை நடத்தி வந்தார். அதன் பின்னர் எத்தனையோ தொழில்கள் நடத்த தொடங்கினார். அத்தனையிலும் அவருக்கு தோல்விதான் கிடைத்தது.

ஒரு நாள் இவர் நூல் நிலையம் ஒன்றிற்கு சென்றிருந்தார். அங்கே இவர் படித்து கொண்டிருந்த புத்தகத்தில் ஒரு சுவையான கதை இருந்தது. அந்தக் கதையில் ஒரு மனிதன் தனக்கு இறக்கைகள் எதுவும் இன்றி காற்றாடி போன்ற ஒன்றின் துணையால் வானத்தில் பறந்து சென்றதாக வர்ணிக்கப்பட்டிருந்தது.

இதைப்படித்ததும் ரைட்டின் உள்ளத்திலும், மனிதன் ஏன் வானத்தில் பறக்கக் கூடாது? என்ற கேள்விக் குறி எழுந்தது இதைக் குறித்தும் தம் சகோதரருடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.

ஆலோசனை ஆராய்ச்சி ஆனது. பல சோதனைகளைச் சகோதரர் இருவரும் செய்து பார்த்தனர். முடிவில் பறப்பதற்கு ஓர் இயந்திரத்தை கண்டு பிடித்தனர். இந்த இயந்திரத்தின் உதவியினால் ரைட் 1903ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17ம் நாள் வானத்தில் பறக்கலானார். இதுவே முதன் முதலில் பறந்த விமானமாகும். ரைட்டின் இடைவிடாத முயற்சியால்தான் நாம் இன்று வானத்தில் பறந்து கொண்டிருக்கிறோம்.

த.சாருனி, தரம் — 10
யா/உடுவில் மகளிர் கல்லூரி

## உலகத்தை உருண்டையாக்கிய பயணம்

1492ம் ஆண்டு சாண்டா மரியா என்ற கப்பலில் கொலம்பஸ் என்பவர் மேற்குநோக்கிப் பயணம் செய்தார். அங்கு அவர் பல வெப்பமான தீவுகளைக் கண்டார். அந்தத் தீவுகளை இந்தியா எனக் கருதினார். இதனால் அந்தத் தீவுகளுக்கு மேற்கு இந்தியத் தீவு கள் எனப் பெயரிட்டார். உலகம் தட்டையானது என நம்பியவர்கள் கொலம்பஸ் மேற்கு நோக்கி பயணம் செய்தபோது எச்சரித்தனர். பூமியின் முடிவுக்கு அவர் போய்ச் சாகப் போகிறார் என்றனர். ஆனாலும் கொலம்பஸ் துணிவாகச் சென்றார். அப் போது தான் மற்றொரு கண்டமும் உண்டு என்பதை மக்கள் அறிந்தனர். உலகம் உருண்டையானது என்பதையும் ஏற்றுக் கொண்டனர்.

S. முஹமட் இல்பான், சாய்ந்தமருது

## பட்டு வந்தது இப்படித்தான்

பட்டு, கி.மு. 1500—2000, காலப்பகுதியில் சீனா தேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் கண்டுபிடிப்பும் ஏனைய பல கண்டுபிடிப்புகள் போன்று தற்செயலானதே. சீன இளவரசி ஒரு நாள் பூந்தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது வேலையாள் ஒரு சூடான தேநீரைக் கொண்டு வந்து கொடுத்தான். மல்பெரி மரத்தின் கீழ் நின்ற படியே இளவரசி தேநீரைச் சுவைத்தாள்.

எதிர்பாராத விதமாக ஒரு பட்டுப்பூச்சியின் கூண்டுப்புழு அவளின் தேநீர் கோப்பையினுள் விழுந்தது. சூடான தேநீரினுள் புழு மென்மையாகியது. அதிலிருந்து பட்டு நூல் இழை இழையாக வெளி வந்தது. அந்த இளவரசி மென்மையான பட்டு நூலை தன் கைகளால் பற்றி இழுத்தாள். இழுக்க இழுக்க அது நீண்டு வந்தது. இதிலிருந்தே பட்டு என்னும் பொருள் கண்டு பிடிக்கப்பட்டது.

பட்டிலிருந்து முதலில் எழுதுகருவிகள் செய்யப்பட்டன. பின்னரே அதனைப் பயன்படுத்தி துணி நெய்யப்பட்டது. ஆரம்ப காலத்தில் சீனாவின் பட்டுப்புடவை ஐரோப்பாவில் பெரிதும் வரவேற்கப்பட்டது. அதன் பிரபல்யம் காரணமாக சீனாவிலிருந்து ரோமாபுரிவரையிலான தரைவழி ''பட்டு வழி'' என அழைக்கப்பட்டு வந்தது. இதன் பிற்காலங்களில் தான் பட்டுப்பூச்சி வளர்ப்பு தென்கிழக்கு நாடுகளில் பரவியது.



## கதிரியக்கத் தாக்கம்

மேடம்கியூரி கதிரியக்கத்தை வெளிப்படுத்தும் ரேடியம் என்ற மூலப் பொருளைக் கண்டுபிடித்தார். இந்த மூலப்பொருளிலிருந்து வெளிப்படும் கதிர்கள் லூகேமியா போன்ற கொடிய நோய்களை உருவாக்கி மனித உயிரைப் பறிக்கும் சக்தியைக் கொண்டுள்ளன. இந்தகாலத்தில் ரேடியத்தை பயன்படுத்தி வருபவர்கள் நிறைய தற்காப்பு வழிமுறைகளைக் கடைப்பிடித்து தங்களுடைய உயிர்களைக் காப்பாற்றிக் கொள்கின்றார்கள். மேடம்கியூரி காலத்தில் இப்படிப்பட்ட தற்காப்பு வழிமுறைகள் பின்பற்றப் படவில்லை. மேடம்கியூரி 35 வருடகாலம் ரேடியத்தைபற்றி நிறைய ஆராய்ச்சிகள் செய்து வந்தார். ரேடியம் வெளிப்படுத்தும் கதிரியக்கத்தினால் தொடர்ந்து தாக்கப்பட்டுவந்தார். ஒருசாதாரண காய்ச்சலினால் தாக்கப்பட்ட அவர் இறந்து போனார். கதிரியக்கத்தினால் தாக்கப்பட்டு இறந்து போன முதல் நபர் — இரண்டு முறைகள் நோபல் பதக்கம் பெற்ற மேடம்கியூரிதான் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

N. அகல்யா, இரணைப்பாலை றோ.க.ம.வி

# "கலைப்பாலம்" இனங்களின் இடைப்பாலம்

கலை, இன, மத, மொழி, பிரதேச வேற்றுமைகளைக் களைந்து மனித இனம் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஒரு மாபெரும் சக்தி ஊடகம் என்பதை அண்மையில் பாணந்துறைத் திருமறைக் கலாமன்ற நாற்பது சிங்களக் கலைஞர்களின் யாழ் குடா நோக்கிய "கலைப் பயண" நிகழ்வு உறுதிப்படுத்தியது.

கடந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி யாழ் குடா நாட்டில் காலடி வைத்த இவ் இளம் சிங்களக் கலைஞர்கள் நவம்பர் 19 ஆம் திகதி வரை யாழ் நகர் பாசையூர் பருத்தித்துறை மானிப்பாய் மருதனார்மடம் போன்ற இடங்களில் தங்கள் பாரம்பரிய சிங்கள நடனக் கலை வடிவங்களை மேடையேற்றி தமிழ் கலைஞர்களுக்கும் தங்களுக்கும் இடையில் கலை வழி ஓர் அன்புப்பாலத்தை கட்டியெழுப்பி, அதன் மூலம் மனித நேயத்தை வளர்த்துள்ளார்கள்.

இதன் காரணமாகவேதான் யாழ் கத்தோலிக்க ஆயர் அதி வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இக்குழுவின்கலை நிகழ்வொன்றில் பங்குபற்றி "அன்பும் மனிதமும் சகிப்புத் தன்மையும் நாம் ஒரே மனித இனம் என்ற ஒற்றுமையை உருவாக்கட்டும்" என்று கூறினார்.

நல்லூர் ஆதின பிரதம குருவாகிய சிறீல சிறி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்நிகழ்விற்கு தன் நல்லாசிகளை வழங்கி "கலை மனிதர்களை இணைத்து அவர்களின் வேற்றமைகளைக் கழைந்து இடைவெளிதனைக் குறைக்கின்றது என்பதற்கு இக்கலைப்பால நிகழ்வு ஒரு எடுத்துக்காட்டு" என்று கூறினார். யாழ் நாகவிகாரையின் பௌத்த துறவி ஞானரத்தின தேரரும் "இந் நிகழ்வு இன்றைய காலத்தின் தேவை" என்றும் "இவ்விதமான இரு இன இளஞ் சந்ததியினரின் ஒன்றிணைப்பு கடந்த கால கசப்புணர்வுகளை நீக்க நல்லதோர் நடவடிக்கை" எனக்கூறி பாராட்டினார்.

இத்தகைய ஒரு புனித காரியத்தில் கலை வழி யினூடாக காலடி வைத்திருக்கும் திருமறைக் கலா மன்றத்தின் பணி வரவேற்கப்படவேண்டியதொன்றே.

இக்கலைப்பயணம் நாடக அரங்கியல் நாட்டமுள்ள தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சிங்கள பாரம்பரிய நடனங்களாகிய தொவில், கோலம், வடிகபட்டுன, வெஸ், களகா, மயூரா கிரிதேவ, கொதலபதா, பூஜாவட்டுஸ், யசலெஞ்சினா, அஞ்தபத போன்றவற்றை பார்ப்பதற்கும் படிப்பதற்கும் விமர்சிப்பதற்கும் ஏற்ற ஒரு களமாகவும் அமைந்துவிட்டது. காரணம் எல்லா தமிழ் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இத்தகைய சிங்களப் பாரம்பரிய நடன வடிவங்களை தெற்கே சென்று பார்ப்பதற்கான வசதியோ சந்தர்ப்பமோ கிடைப்பது இன்றைய சூழ்நிலையில் மிக அரிதானதொன்றாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் சிங்களத் தமிழ் இளங்கலைஞர்களும் சிறுவர்களும் யாழ் மண்ணில் ஒன்று கூடி கலந்துரையாடி கருத்துக்களைப் பரிமாறி தங்கள் உள்ளத்து உணர்வுகளை பகிர்ந்து கொண்டமை வருங்கால இளம் சமுதாயமாவது ஒரு புதிய பாதையில் சாந்தியும் சமாதானமும் நிறைந்த ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப உதவலாம் என்ற ஒரு ஆதங்கத்தை எம்மவர் மனதில் ஏற்படுத்தியுள்ளது.




"கலைப்பாலம்" மூலம் யாழில் கலைவிருந்து படைத்த திருமறைக்கலாமன்ற சிங்களக் கலைஞர்கள். இந்தப் புகைப்படம் கடந்த வார சுடர் ஒளியில் "கவின் கலை மன்றத்துக்கு வயது 45" என்ற கட்டுரையில் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது.

தெற்கில் இருந்து சென்ற இச் சிங்களச் சிறுவர்கள் உடைந்த கட்டடங்களுக்கு மத்தியில் நிறைந்த உள்ளங்களை கண்டார்கள். சிதறிச் சீரழிந்து போயிருக்கும் மண்ணிலும் எமக்கும் ஒரு எதிர்காலம் உண்டு என்று; ஏக்கத்திலும் ஊக்கத்தோடும் கற்கும் இளம் சிறார்களை கண்டார்கள், அகதி என்ற பெயரில் முகாம் களில் வாழும் தங்க ளைப்போன்ற சிறுவர்களைக் கண்டார்கள். ஆனால் இது இவர்களின் வாழ்வின் முடிவல்ல, வாழ்க்கைப் போராட்டததின் தொடக்கம் என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

ஒருவருக்கொருவர் தம் மொழிபுரியாவிட்டாலும் கூட அவர்கள் திருமறைக் கலாமன்றம் எனும் ஒரு கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகையால் "உடல் மொழி" அவர்கள் உணர்வுகளை வெளிப் படுத்த பெரிதும் உதவியது. ஏதோ புரிந்து கொண்டார்கள்; தங்கள் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

19—11—2001 மாலையில் திருமன்றக் கலாமன்ற திறந்த வெளியரங்கில் இரு இன சிறுவர்களும், இளைஞர்களும் இணைந்து வழங்கிய "தரிசனம்" எனும் நாடகத்தை பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு ரசித்தார்கள். நிறைவு நாளாகிய நவம்பர் 20 ஆம் திகதி தெற்கு நோக்கித் திரும்பும் அக்கடைசி மணித்துளியில் அவர்கள் விட்ட கண்ணீரின் கனதியான தத்துவம் என்ன வெனில் "நாம் கலைஞராக வந்தோம், ஆனால் இன்று சதோதரர்களாக பிரிந்த செல்கின்றோம்." என்பது தான் — இத்தகைய ஒரு சகோ தரத்துவத்தைத் தான் இன்று இலங்கையில் எல்லோரும் எதிர்பார்கின்றார்கள்—இத்தகைய நிகழ்வுகள் நிச்சயமாக அந்த எதிர்பார்ப்புக்கள் உடனடி யாக இல்லாவிட்டாலும், காலக் கிரமத்தில் படிப்படியாக வாவது நிறைவேறும் என்றே நம்பலாம்.

## கலையமுதம்

க.சிவகுமார்

# நூல் விமர்சனம்

"முற்றத்துக்கு வாருங்கள்" என்ற முதற் கவிதைத் தொகுதியை வெளியிட்டு கவிதை உலகில் தானும் ஒரு கவிஞன் என்ற முத்திரையைப் பதித்துக் கொண்டு தன்னை நாடளாவிய ரீதியில் இனம் காட்டிக் கொண்டவர் கவிஞர் இக்பால் அலி.

இவருடைய காவியத்திரையின் அடுத்த ஒரு முயற்சியின் தொகுப்பே புள்ளிகளில் சில புள்ளிகள் என்னும் கவிதை நூலாகும்.

இது இவருடைய இரண்டாவது கவிதைத் தொகுப்பு நூல். இக்பால் அலியின் கவிதைகளில் சமகாலப் பிரச்சினைகள் கருப் பொருளாகின் றன. சமூத்தில்,தான் காணுகின்ற சிறுமைகளை, கொடுமைகளை, கோரங்களை, அடக்குமுறைகளை தனது கருப்பொருளாகக் கொண்டு கவிதை புனைந்து அவை நீக்கமுற வேண்டும் என்று அவாவுறுகின்ற தன்மையை இவரது பெரும்பாலான கவிதைகளில் காணமுடிகிறது.

இவர் தனது கவிதைகளில் எடுத்தாண்ட பாடு பொருட்கள் பலதரப்பட்டன.

போரின் கோரம், உழைப்பின் சாரம், பெண்ணியம், பொருளாதாரம், அரசியல், கலை, கலாசாரம், சமூகம், கல்வி, மலையகம் என அவை விரிவடைகின்றன.

அரசியலுக்கும் இலக்கியத்துக்கும் இடையே மிக நீண்ட கால உறவு உண்டு. சங்ககாலக் கவிஞர்கள் முதல் இக்கால கவிஞர்கள் வரை அரசியலை நேரடியா கவோ, அன்றில் மறைமுகாமாகவோ பாடியே வந்துள்ளனர்.

இக்பால் அலியிடம் அரசியலையும் சமூகத்தையும் இணைத்து நோக்கும் பார்வை இருக்கிறது. அத்தகைய பார்வை அவரது கவித்தத்துவத்துக்கு கனகதியைக் கொடுக்கவல்லது.

கவிஞரிடம் புதுக் கவிதைக்குத் தேவையான படிமங்கள் அளவாகவும், அழகாகவும், ஆரவாரமின்றியும் இருந்து சேவகம் புரிகின்றன.

தான் சொல்ல எண்ணும் விடயங் களை குறியீடாகக் காட்ட இவர் படிமங்க ளில் சவாரி செய்கிறார். அலாதியாக படிமங்களைக் கையாளும் ஆற்றல் இவரின் பல கவிதைகளில் மிளிர்கிறது.

வளர்ந்து வரும் கவிஞர் என்ற வகையில் இக்பால் அலியின் கருச்சிறப் பும், படிமப் பொலிவும் கொண்ட அவ ரது கவிதைகள் வசனத்தின் சாயலை கொண்டவையாக இருப்பதைத் தவிர்த் துக் கொண்டால் அவர் பிரசவிக்கும் கவிக் குழந்தைகள் ஆரோக்கியமான வளர்ச்சியைக் காணும்.

இக்பால் அலி கவிதை பாட வேண் டும் என்பதை விட தான் நினைக்கும் சமூகப் பிரச்சினைகளை தனது மன எழுச்சி ஊடாக வெளிக் காட்டுவதற்கு கவிதையை ஒரு கருவியாய் பயன்படுத்துகிறார்.

இதன் மூலம் அவர் கவிதைக்கான இலக்கிய வரம்புகளுக்குள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாமல் கடிவாள மற்று காற்றில் பறந்து சுதந்திரக் கருத்துக் கவிதை படைக்கிறார். "புள்ளி களில் சில புள்ளிகள்" என்னும் இவ ரது இரண்டாவது கவிதைத் தொகுதியில் இடம் பெற்றிருக்கும் "பாய்த்தோணி", "இருவாடி", "வெள்ளாவி" போன்ற போர்ச் சூழலைப் பிரதிபலிக்கும் கவிதைகளும், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தைக் குறிக்கும் "பள்ளிச்சூரியன்" என்ற கவிதையும், ஞானம், சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள். இவையும் இத் தொகுப்பில் இடம் பெற்றிருப்பது நல்லதே.

அநீதிகளையும் அவலங்களையும் மறைமுகமாகக் கூறி முணுமுணுக்கும் பழைய மரபு இவர் கவிதைகளில் தகர்க்கப்படுகிறது.

* * *

ஜனநாயகத்துக்குள் சரித்திரமாய்
வாக்கு மோசடி வன்முறைக்
கலாசாரத்தின் கொடூரத்தால் நிகழ்வால்.
பூத்துக் காய்த்துக் கனிந்து அவிந்து
நாறும் தேர்தலே யுத்த மேகங்களின்
சாட்சிகள் பலதுடன் நிற்க.

என்றும்,

படகிருந்தும் படகோட்ட
கடலில்லை.
கடலில் யுத்தக் கப்பல்கள்
கடலில் மீனிருந்தும்
மீன்பிடிக்க ஆளில்லை
மீனவர்கள் அரச கைதிகள்

என்றும்,

சனநாயகம் பற்றிக் கூறவந்த கவி ஞர் அதுபடும் பாட்டினைச் சுவாரசிய மாகத் தெரிவிக்கின்றார். சனநாயகத் தைத் தமது கவிதையிலே பேச வைக்கிறார்.

நான் கொலைவெறியாட்டம்
ஆடும்
தந்திர வாதிகளின்
மந்திரியானாலும்
விடுதலைப் பாட்டெழுதி
நல்லூர மூட்டும்
ஒரு மேடை நாடக நடிகன்.

இவ்வாறு இவரது கவிதைகள் படித்தும் மனதைக் கவர்ந்து கருத்தினில் கலந்து உறைந்து விடுகின்றன. வெற்றியின் பாதை நோக்கி துணிவுக் கால்கள் ஊன்றி எளிய கவிநடையில் சிகரத்தை நோக்கி பயணிக்கும் இவரது யாத்திரை இலக்கை அடைவதற்கு முயல்கிறது.

அதற்கு இவரின் புள்ளிகளில் சில புள்ளி என்னும் கவிதைத் தொகுதியும் வலுச் சேர்க்கிறது.

— சிவா

# தேர்ந்த கவிதைகள் நூல் வெளியீடு

இந்திரன் அமிர்தநாயகத்தின் "சிலோன் ஆர்.ஐ.பி. செலக்டட் பொயம்ஸ்" என்ற நூலின் வெளியீட்டு விழா இம்மாதம் 19 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொழும்பு சர்வதேச இனத்துவ ஆய்வுகள் கற்கை நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மதுபாஷினி ரத்னாயக்கா, அமீனா ஹூசென் ஆகியோர் இந்நூல் பற்றி கருத்துரை வழங்குவர்.

நூலாசிரியர் இந்திரன் அமிர்தநாயகம் நூலில் அடங்கியுள்ள பல கவிதைகளை வாசிக்கவுள்ளார். 1960 ஆம் ஆண்டு இலங்கையில் பிறந்த இந்திரன் அமிர்தநாயகம் 1977 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார். பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ள இவர் அமெரிக்க வெளியுறவுச் சேவையில் பணியாற்றிவருகிறார்.

— அருள்



கனகரவியின் " இந்த மழை ஓயாதோ" என்னும் கவிதைத் தொகுதியின் வெளியீடும், விமர்சனமும் கடந்த நவம்பர் 11ஆம் திகதி வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் நடைபெற்றன.

இதில் நூலின் சிறப்புப் பிரதியை ஓய்வு பெற்ற அதிபர் கனகரட்ணத்திடம் இருந்து திரு. நடராஜா பெற்றுக் கொள்கிறார்.

இங்கிரிய பாரதி நற்பணி மன்றத்தின் தீபாவளி கலாசார நிகழ்சிகள் கடந்த மாதம் 25ஆம் திகதி றைகம் மேற்பிரிவு சரஸ் வதி வித்தியாலயத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் அரங்கேறிய பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சியை படத்தில் காணலாம்.



# வன்செயல்களின் நிலைகளனாக மாறிய பாத்ததும்பறை

## காலம் கடந்தாவது உண்மை வெளிவருமா?

மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் நுவரெலியாவைத் தவிர அடாவடித் தனங்கள் மலிந்த மாவட்டமாக கண்டியும் அதனை அடுத்து மாத்தளையும் திகழ்கின்றன.

இவற்றில் மிகவும் மிலேச்சத்தனமான முறையில் வன்செயல்களுடன் மனிதப் படுகொலைகளும் ஒரே நேரத்தில் தலைதூக்கிய மாவட்டம் கண்டி. அங்கும் பாத்ததும்பறைத் தொகுதியில் தான் வன்செயல்கள் அதிகம்.

மத்திய சந்தை முன்பாக இடம் பெற்ற மூன்று முக்கிய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசப்பட்ட உரைகளை யடுத்து வன்செயல்கள் குறித்த அச்சமும் பீதியும் ஏற்கனவே முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவி வந்தன.

கண்டி நகரில் இருந்து சுமார் எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மடவளைப் பிரதேசமும், உடத்தலவின்னை மடிகே கிராமமுமே வன்செயல்களுக்கு தூபமிடப்பட்ட இரு முக்கிய இடங்களாகும்.



அடக்கம் செய்யப்படுவதற்குத் தயாரான நிலையில் பிரேதங்கள்.

இதேபோன்ற வன்செயல்கள் 2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் நடைபெற்றிருந்தன. அன்றும் இதே பாத்ததும்பறைத் தொகுதியே பெரும் அளவில் பாதிக்கப்பட்டது.

கண்டி மாவட்டத்தில் 1,28,000 முஸ்லிம்களும் 75,000 தமிழர்களும் வாக்காளர்களாக இம்முறை பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களின் வாக்குகள் கட்சி ஒன்றுக்கு போய்க் குவிந்தால் தமது பாடு அதோ கதிதான் எனக் கருதியோர் ஆயுதங்களுடன் இத் தொகுதியில் நடமாட சிலரை அனுமதித்ததே மாபெரும் சதி என இப்பொழுது பலரும் உணரத் தலைப்பட்டிருக்கின்றனர்.

"அடித்தால் அடி" "கொன்றால் கொலை" என்ற ஈவிரக்கமற்ற சொல்லம்புகள் தேர்தல் மேடைகளில் ஒலித்தன. தோல்வியைத் தழுவ வேண்டிவரும் எனக் கருதி ஆரம்பிக்கப்பட்ட வன்செயல்களின் கொடூரமான காட்சிதான் உடத்தலவின்னை — மடவளை சம்பவங்கள்.

கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் ஒருமைப்பாட்டைக் குலைத்து ஆதாயம் பெற இதற்கு முன்னர் இடம் பெற்ற தேர்தல்கள் பல வகைகளிலும் வழி கோலின. ஐ.தே. கட்சியில் இம் மாவட்டத்தில் மக்கள் மத்தியில் பரவலாக மதிப்பைப் பெற்றிருந்த முன்னாள் எம்.பியான ஏ.ஆர்.எம். ஏ. காதர் ஹாஜியார் இம்முறை பட்டியலில் இடம் பெற்றதாலும் முஸ்லிம்



பத்துப் பேரின் பிரேங்களும் வரிசையாக அடக்கம் செய்யப்பட்ட காட்சி

காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிட்ட ரவூப் ஹக்கீமுக்கு அவர் முழு ஆதரவை வழங்க தீர்மானித்ததாலும், இதன் மூலம் மூன்று முஸ்லிம்கள் நிச்சயமாக நாடாளுமன்றம் செல்வார்கள் என்ற குமுறல் காரணமாகவும் ஏற்பட்ட மன உளைச்சலால் வன்செயல்க ளைக் கட்டவிழ்த்து விடத் திட்டம் தீட்டப்பட்டது.

வன்செயல்களைத் தூண்டிவிட்டோரினால் 16 கொலைகள் இடம்பெற்றன. வாக்குப் பெட்டிகள் தூக்கிச் செல்லப்பட்டன. இந்தச் சம்பவங்களால் மக்கள் பெரும் அதிருப்தியையும் அவநம்பிக்கையையும் அடைந்துள்ளனர்.

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பறித்தெடுக்கும் வகையில் அக்டோபர் தேர்தலும் டிசம்பர் தேர்தலும் அமைந்து விட்டன. தமிழ் மக்கள் வாழும் பிரதேசமான பன் வில, மடுல்கல, ஹூலுகங்கை, ஹாத்நலை, தலாதது ஓயா, கலகா, புசல்லாவை நாவலப்பிட்டி, ஹேவா ஹெட்டை, தெல்தோட்டை போன்ற பல இடங்களில் வாக்காளர்கள் விரட்டப்பட்டனர். வாக்காளர் அட்டைகள் பறித்தெடுக் கப்பட்டன. இந்தச் சம்பவங்களினால் தமிழர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

தமிழர் ஒருவரை எப்பாடுபட்டாவது எமது உறுப்பினராக்கி விடுவோம் என்ற கண்டி மாவட்ட தமிழ் மக்களின் கனவு நனவாகாமல் போனதற்கு அடாவடித்தனமான சம்பவங்களே காரணம். ஆனால் இவ்வாறான ஒரு நிலையை 2/3 பங்கு அளவில் வாழும் நுவரெலியா மாவட்ட தமிழ் மக்கள் இம்முறை எதிர் கொள்ளவில்லை. அதற்கு ஏற்றாற் போல தமிழர்கள் மத்தியில் ஐக்கியமும் சமூகப்பற்றும் நிலவின.

இந்த நிலையில் கண்டி மாவட்ட தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக இதே மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் சென்று தமது குறைகளைத் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு கிட்ட வேண்டுமென பலரும் அங்கலாய்க்கின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் அக்குறணை உடுநுவரை, ஹேவா ஹெட்டை , பாத்ததும்பறை, கலகெதரை, யட்டி நுவரை ஆகிய தொகுதிகளில் கணிசமான அளவில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்கள் தமது பிரதிநிதிகளை ஒட்டு மொத்தமாக தேர்ந்தெடுத்து விடுவார்கள் என்ற பயம் பெரும்பான்மையின வேட்பாளர்கள் மத்தியில் நிலவியது. தமிழ் பேசும் மக்களையும் அணைத்துப் போவோம் எனக் கருதியோர் வெற்றி பெறும் நிலை ஏற்பட்டது. அவர்களை உதாசீனம் செய்தோர் மண் கவ்வ வேண்டிய நிலை உருவாகியது. இது தான் வன்செயலுக்குக் காரணம்.

என்றும் இல்லாதவாறு இங்கு வன்செயல்களுக்கும் படுகொலைச் சம்பவங்களுக்கும் துணையாக இருந்தோர் இன்று மக்கள் மத்தியில் இனங்காணப்பட்டுள்ளனர். சமூகத்தில் இவர்களினால் தலை காட்ட முடியாது. மறைவிடங்களில் ஒளிந்துகொண்டு இருக்கின்றனர். சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தேர்தல் முடிந்த சில தினங்களின் பின்னர் வீடுகள், உடைமைகள் பல சேதமாக்கப்பட்டு தீவைப்பும் இடம் பெற்றிருக்கின்றது.

பஸ்களிலும் பொது இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் இவர்கள் குறித்த தகவல்கள் தாராளமாக இடம் பெறுகின்றன. இனியும் இவர்களுக்கு இடம் கொடாதீர் எனவும் சுவரொட்டிகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதப்பட்டுள்ள சுலோகங்களை மக்கள் கூர்ந்து கவனிக்கின்றனர். சூத்திரதாரிகளை இனம் காண்கின்றனர். என்றாலும் இந்த வன்செயல்கள் மரபுரிமை நகரான கண்டியையே அவமதித்து விட்டதாகக் கருதப்படுகின்றது.

இந்த மனிதப் படுகொலைச் சம்பவங்கள் தீவைப்புச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை நான்கு மாகாண சபை உறுப்பினர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். இவர்கள் நால்வரும் பொ. ஐ. முன்னணி சார்பில் போட்டியிட்டவர்கள் என



இறுதிக்கிரியையின்போது மடவளையில் கூடியிந்தோரில் ஒரு பகுதியினர்

பொலிஸார் தெரிவிக்கின்றனர். முன்னணி அமைச்சரும் பாத்ததும் பறைத் தொகுதி ஸ்ரீ. ல.சு. கட்சி அமைப்பாளருமான அனுருத்த ரத்வத்தை இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கும் தனக்கும் தனது புதல்வர்களுக்கும் சம்பந்தமில்லை என தெரிவித்து விட்டார்.

இந்நிலையில் இந்தச் சம்பவங்களுக்குப் பின்னணியாக இருந்தவர்கள் யார் என்பதே கேள்வி. இது தொடர்பான விசாரணை தெல்தெனிய



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள்

நீதிமன்றத்தில் நடைபெறுகின்றது. நீதியும் நியாயமும் கிடைக்கக் காலம் கடந்தாவது உண்மை வெளிக் கொணரப்பட வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டோர் சார்பாக துயருறும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

— கண்டியூர் காவலன்

# வருகிறது மற்றொரு 'அந்த' மாத்திரை

ஏற்கனவே வந்து ஒரு கலக்கு கலக்கிவிட்டு இப்போ அமுங்கிப் போய்விட்டது வயாக்கரா.

பொல்லுப் பிடித்து நடந்த கிழங்களையெல்லாம் துள்ளாட்டம் போட வைத்து.

கட்டையிலே போகும் வயதில் பலரையும் கட்டிளம் காளையாக நினைக்க வைத்து ஏகப்பட்ட சிலுமிஷங்களை பண்ணவைத்தது இந்த வயாக்கரா...

கண்டபடி இந்த குளிசைகளை போட்டுவிட்டு கண்மண் தெரியாமல் ஆட்டம்போட்ட பல பழசுகள் இதய நோய் — பக்க வாதம் போன்ற நோய்களால் விரைவி லேயே இழுத்து பறிக்கும் நிலைக்கு வந்து விட வயாக்கரா என்ற பெயரை கேட்டாலே பலரும் பாய்ந்து ஓடும் நிலை ஏற்பட்டது.

ஆரம்பத்தில் ஆயிரக்கணக்கில் விலை போன வயாக்கரா பின்னர் 5—10 ஆக குறைந்து இப்போ வியாபாரம் முற்றாக படுத்து விட்டது. இருந்த கொஞ்ச நஞ்சத்தையும் இல்லாமல் செய்து — முதலுக்கே மோசம் என்ற நிலையில் — வயாக்கரா அலை முற்றாக அடங்கிப் போய் விட்டது — இந்த நிலையில்




தற்போது பெண்களுக்காகவே வந்து ஒரு கலக்கு கலக்க ஆயத்தமாகி விட்டது பெண்கள் வயாக்கராவான P.T. 141

இதுவரை காலமும் வயாக்கராவை போட்டுவிட்டு "சிகப்பு கலரு ஜிங்குச்சா பச்சை கலரு ஜிங்குச்சா" என்று பல தாத்தா மார்கள் பாடிய காலம் மாறி இனி சிகப்பு ஜீன்ஸு சிங்குச்சா— கறுப்பு ஜீன்ஸு ஜிங்குச்சா என்று பல பாட்டிமாரும் பாடும் நிலை வந்து விட்டது.

பெண்களுக்கு பொதுவாகவே அந்த மாதி ரியான உணர்வு குறைவு என்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்ட உண்மை. எனவே அந்த மாதிரியான நேரத்தில் அந்த மாதிரியான உணர்வுகளை, அந்த மாதிரியாகத் தூண்டி விடுவதற்காகவே இந்த மாதிரியான மருந்து ஒன்றைக் கண்டுபிடித்திருப்பதாக அமெரிக்க நியூஜெர்ஸியைச் சேர்ந்த விஞ்ஞானியான அனட் ஹாடியா தெரிவித்திருக்கிறார்.

நியூ ஜேர்ஸியில் உள்ள பலாட்டின் டெக்னொலஜி என்ற நிறுவனத்தின் விஞ்ஞானியான இவர் — மானம்ரீஸில் உள்ள கன்காடியா பல்கலைக் கழகத்தில் வைத்தே இதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு — பெண்களின் இந்த மாபெரும் பிரச்சினையைத் தீர்க்க பாடாய்ப்பட்டு — தற்போது இந்த P.T. 141 என்ற மருந்தை கண்டுபிடித்திருக்கிறார்.

ஸ்பிரே போன்ற இந்த மருந்தை — மூக்கிலே தெளித்தால் போதுமாம். சோர்ந்து போயிருக்கும் பெண் உடனே துடித் தெழுந்து மும்தாஜாக மாறி பாட்டுப்பாட ஆரம்பித்து விடுகிறார்களாம். மூக்கின் மூலம் மூளைக்குச் செல் லும் இந்த மருந்தின் சக்தி — 10 முதல் 15 நிமிடம் வரை பெண்களை பாடாய்படுத்திவிடும் என்று தெரிவித்திருக்கி றார் இந்த பெண்கள் வயாக்கராவின் தந்தையான அனட் ஹாடியா.

இந்த ஸ்பிரேயை முதலில் எலிகள் மீதுதான் பயன் படுத்தி பார்த்திருக்கிறார்கள் அனட்ஹாடியாவின் குழுவினர். ஆனால் சாதாரண எலிகளை விட இந்த ஸ்பிரேயை மணந்த எலிகள் அந்த விடயத்தில் புகுந்து விளையாடி விட்டன என்கிறார்கள் அவர்கள்.

ஆண்களுக்கு வயாக்கரா வந்த போது ஏராளமான பெண் கள் ஆதங்கப்பட்டுக் கொண்டார்கள். பின்னர் அந்த வயாக் கராவினால் இரத்த அழுத்தமும், இதய துடிப்பும் அதிகரித்து — மூச்சு விடும் அளவில் மாற்றம் வந்து ஆண்கள் அவதிப்படும் போது அதனைப் பார்த்து ஆறுதலடைந்தார்கள். ஆனால் இப்போ அவர்களுக்கே அவர்க ளுக்கென்று P.T 141 வந்துவிட்டநிலையில் பெண்களின் சந்தோஷத் திற்கு கணக்கே இல்லை. அதிலும் இந்த வயாக்கரா எந்தவித பின்விளைவுகளும் இல்லாதது என்னும் போது இரட்டிப்பு சந்தோஷம் வந்து தமது வயதை மறந்து துள்ளிக் குதிக்கி றார்களாம் பல பெண்கள் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

தற்போதும் பெண்களின் உணர்வுகளைத் தூண்டிவிட Well B urtinபோன்ற மாத்திரைகள் பயன்படுத்தப்படுகிற போதிலும் இந்த மாத்திரை உண்மையிலே மனஅழுத்தங்களைக் குறைக்கும் ஒரு மாத்தி ரையாகவே செயல்பட்டு வருகிறது.

இது தவிர, பெண்கள் தற்போது பயன் படுத்திவரும் Apo morphine, melantan II போன்ற மருந்துகளும் வாந்தியையும், களைப்பையும் ஏற்படுத்துகின்றனவாம்.

இவை எல்லாம் இல்லாமல் சுப்பர் வயாக்கராவாக தயாரிக்கப்பட்டுள்ளதாம் இந்த P.T.141.

வயாக்கரா போதை தலைக்கேறி ஆடாத ஆட்டம் போட்ட தாத்தாக்கள் எல்லாம் இப்போ ஆடி அடங்கி தலையை தொங்கப் போட்டபடி மூலையிலே முடங்கிவிட இப்போ பாட்டிமார் பக்கம் பலமாக காற்றுவீச ஆரம்பித்துவிட்டது.

இந்தக் கண்டுபிடிப்பை கேள்விப்பட்டபின் வெளிநாடு களில் பல பெண்கள் அலுக்கி குலுக்கி அசத்த தயாராகிவிட்ட நிலையில் இந்த மருந்தின் கிளினிக்கல் பரிசோதனையே அடுதத ஆண்டில்தான் ஆரம்பமாக உள்ளது என்ற செய்தியை கேள்விப்பட்டு ஆச்சிமார் பலர் ஆடிப்போயிருக்கிறார்கள்.

எமது ஆயுளில் இந்த மருந்தை ஒரு தடவையாவது அனு பவிக்கமுடியுமாவென ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களாம் பலர் .

— காண்டி

# இழுபறியில் இடம்பெற்ற அமைச்சரவை நியமனங்கள்

## காலம் போகப் போக சுமுக நிலையா, பலப்பரீட்சையா?

ஒரு நாட்டின் மன்னராக அல்லது ஜனாதிபதியாகப் பொதுவாக அலங்காரப் பதவி வகிப்பவரானாலும் சரி அதிகாரமுள்ள பதவியிலுள்ளவரானாலும் சரி மக்களின் அமோக ஆதரவுடன் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்படும் கட்சித் தலைவருடன் முறுகல் நிலையை அமைவது அந்நியர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற ஆசிய ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் அடிக்கடி நிகழும் சம்பவங்கள்.

அண்மையில் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் இதுபோன்று தேர்தல்களில் மக்கள் ஆதரவைப்பெற்று ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் ஜனாதிபதி பதவிகளில் இருந்தவர்களுக்குமிடையில் முறுகலும் பலப் பரீட்சையும் கூடத் தோன்றின.

இச்சமயங்களில் ஆட்சி அதிகாரத்திலிருந்தவர்களுக்கு எதிராக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களை வீதிப் போராட்டங்களில் ஈடுபடுத்தி அதிகாரத்தை இறுகப்பிடித்துக் கொண்டிருந்தவர்களைப் பணிய வைத்த நிகழ்ச்சிகளும் உண்டு.

இதற்கு முன் வீதிப் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதற்கு மன்னரின் அரண்மனைப் பாதுகாப்புப் படையை அல்லது ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புப் படையைப் பலப்படுத்தி ஏவிவிடுவதும் உண்டு. இதே சமயம் இந்தப் பாதுகாப்புப் படையிலுள்ளவர்கள் சிலரும் கூட வீதிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அதிகாரத்திலுள்ளவர்களின் ஆசையை நிராசையாக்கிய நிகழ்ச்சிகளும் நடந்திருக்கின்றன. முடிவில் மக்களின் ஆணையே வெற்றி பெற்றிருக்கிறது.

### வீதிப்போராட்டம்

இலங்கையிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தன்னிச்சையான செயல்களை எதிர்த்து வீதிப் போராட்டம் ஒன்று சில மாதங்களுக்கு முன் அடையாளமுறையில் நடந்து முன்னெச்சரிக்கையாக அமைந்தது.

இந்த வீதிப் போராட்டத்தில் ஒருவர் உயிரிழந்தார். பலர் காயமடைந்தனர். இந்த வீதிப் போராட்டம் தொடராமலும் விரிவடையாமலும் ஆட்சி அதிகாரத்திலிருந்த ஜனாதிபதி நடந்து கொண்டாரென்றே சொல்ல வேண்டும்.

இதே சமயம் எதிர்க்கட்சித் தலைவரும் நிதானமாகவும் விவேகமாகவும் செயல்பட்டுப் பெரும் மோதல் ஏற்படுவதையும் உயிரிழப்பு எற்படுவதையும் தவிர்த்திருக்கிறார்.

இதன் பயன்தான் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் கூட்டமைத்து வெற்றி பெற்றது. ஜே. ஆரின் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையிலும் கூட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி ஆட்சிஅமைக்கும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது.

ஆனாலும் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து ஆட்சி அதிகார மாற்றம் வெளிப்பார்வைக்குத் தெரிந்த அளவுக்கு சுமுகமாக நடைபெற்றதாகச் சொல்ல முடியாது.

தேர்தல் முடிந்த பின் நாட்டில் சிலஇடங்களில் தொடர்ந்து நடந்து வன்செயல்கள் சம்பந்தமாக படைத்தளபதிகளுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் ரணில் விக்கிரம சிங்கா ஒருவேண்டுகோள் விடுத்தார்.

குழப்பம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் கட்சி வேறுபாடின்றிஅவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் தமது வேண்டு கோளில் கோரிக்கைவிடுத்திருந்தார்.

ரணில் விக்கிரம சிங்காவின் இந்த வேண்டுகோள் ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்காவுக்கு அதிர்ச்சிஏற்படுத்தியது. படைத்தளபதிகளுக்கும் ஆயுதப் படைகளுக்கும் ஆணையிடும் அதிகாரம் ஜனாதிபதியான தமக்கே உள்ளதென்றும் வேறு எவரும் ஆணையிடமுடியாதென்றும் அறிக்கை விடுத்தார். பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவரும் இதேபோன்று ஒரு அறிக்கை விடுத்தார்.

ரணில் தமது புதிய அமைச்சரவையை அமைக்க ஆயத்தம் செய்தபோதும் பாதுகாப்பு அமைச்சு தனது பொறுப்பிலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா பிடிவாதம் பிடித்தார்.

எதற்கும் விட்டுக் கொடுக்கும் நிலையில் அவர் இருக்கவில்லை. இதற்கிடையில் ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புப் படையின் பலமும் அதிகரிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சை ரணிலின் அமைச்சிடம் ஜனாதிபதி சந்திரிகா ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் இல்லையேல் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஜனாதிபதிக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்த வேண்டிய நிலை ஏற்படுமென்றும் சந்திரிகா அமைச்சரவையை விட்டு வெளியேறி ரணிலுடன் இணைந்து கொண்ட முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயகா முன்னாள் பிரதமர் இரத்தின சிறிவிக்கிரம நாயகா மூலம் சந்திரிகாவுக்கு எச்சரிக்கையுடன் கூடிய தகவலைத் தெரிவித்தார்.

### எச்சரிக்கை ஆலோசனை

தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சைத் தானே வைத்திருக்கப் போவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சந்திரிகா அறிவித்த போது அவரின் விசுவாசியான மங்கள சமரவீரவும் மற்றும் சிலரும் இதனால் பாரதூரமான விளைவுகளும் வேண்டத்தகாத மோதல்களும் ஏற்படுமென்று எச்சரித்து பாதுகாப்பு அமைச்சை புதிய அமைச்சரவையிடம் ஒப்படைத்து விடுமாறு வற்புறுத்தினார்.

நிலைமை மோசமாகி விடுமென்பதை உணர்ந்து கொண்டபின்னரே சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை ஒப்படைக்க முன்வந்தார். இப்பொழுது ஜனாதிபதியிடம் முப்படைகளின் தளபதி என்ற பொறுப்பும் ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்புப்படையின் பொறுப்பும் இருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பையும் ஜனாதிபதி வைத்திருந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதில் ரணிலின் அரசுக்கு சங்கடம் ஏற்படும்.

கடந்த ஏழு வருடங்களில் நடந்த அதே செயல்தான் தொடரும். விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா 1995 ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தை நடத்திய சமயத்தில் சந்திரிகா பிறப்பித்த ஆணையைக் கூட படையினர் செயல்படுத்தாமல் பேச்சுவார்தை முறிந்து போனதற்குக் காரணமாக இருந்திருக்கின்றனர்.

இந்நிலையில் சந்திரிக்காவிடம் பாதுகாப்பு அமைச்சு தொடர்ந்திருந்தால் நிலைமை மேலும் மோசமடையக் கூடும்.

நல்லவேளையாக தமது சகாக்களின் நல்ல யோசனைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை சந்திரிக்கா பெற்று பாதுகாப்பு அமைச்சை பிரச்சினையில்லாமல் ஒப்படைப்பதற்குச் சம்மதித்து நடந்து கொண்டார்.

ரணில் புதிய அமைச்சரவையை அமைப்பதிலும் ஜனாதிபதி சந்திரிகா தமது மனநிலையை வெளிக்காட்டியிருக்கிறார். முன்னர் சமுர்த்தி அமைச்சராக இருந்த எஸ். பி. திஸநாயகா மீண்டும் தாமே சமுர்த்தி அமைச்சராக வருவேன் என்று வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டிருந்தார். அதன்படி அவரையே சமுர்த்தி அமைச்சராக ரணிலும் நியமனம் செய்யநடவடிக்கை எடுத்தார். சந்திரிகா இதற்குத் தடையாக இருந்து சமுர்த்தி அமைச்சராக வேறு ஒருவர் பதவியேற்க வழி செய்தார்.

இவையெல்லாம் ஆரம்பக் கட்டம் தான். காலம் போகப் போக நிலைமை மாறலாம் அல்லது பலப்பரீட்சை முற்றி மோசமாகலாம்.

### ஜே.ஆர்.விட்டதவறு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவராகவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு நாட்டை நிர்வகிக்கும் அரசு வேறொரு கட்சியாகவும் இருக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமென்று விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையைக் கொண்டு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா எதிர்பார்க்கவில்லை. எதிர்க்கட்சியான சிறிமாவின் மகள் சந்திரிகா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கும் போது தமது கட்சியைச் சேர்ந்த அதுவும் தமது உறவினரான தாமே அரசியலுக்குக் கொண்டு வந்த ரணில் விக்கிரம சிங்க ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுப் பதவியேற்று இப்படியொரு மோதல் நிலை ஏற்படுமென்றும் ஜே. ஆர். கருதியதில்லை.

பிரான்சில் நாடாளுமன்றத்தில் மாற்றுக்கட்சி ஆட்சியிலும் இருந்தபோது இருதரப்பும் நாட்டு நலன் கருதி ஒத்துழைக்க வில்லையா? அமெரிக்காவில் இதே நிலை பல தடவைகளில் ஏற்பட்டு பிரச்சினையில்லாமல் நாடு முன்னேறவில்லையா?

நாட்டின் முன்னேற்றமும் அமைதியும் மற்றெல்லாவற்றையும் விட முக்கியம் என்று இருதரப்பும் கருதினால் வெற்றிகரமாக நாட்டை நிர்வகிக்கலாம்.

நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் மூலகாரணமாயிருப்பது இனப்பிரச்சினையே ஆகும். இதற்கு ஒரு சுமுகமான நிரந்தரமான தீர்வு காணப்பட்டால் நாட்டில் வேறுஎந்தப் பிரச்சனையும் பொதுவாகத தோன்ற முடியாது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் சேர்த்து தேசிய அரசாங்கம் அமைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று ரணில் விக்கிரம சிங்கா கருதி எடுத்த நடவடிக்கைக்கு சந்திரிக்காவின் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணியும் முதலில் ஒத்துழைக்க மறுத்துவிட்டன.

### பேரினவாதிகளின் நோக்கம்

இனப்பிரச்சினையை வைத்தே அரசியல் நடத்திவரும் கட்சிகளுக்கும் பேரினவாதிகளுக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்ற ஆர்வமோ அக்கறையோ இல்லை. இவர்களுக்கு இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது பிடிக்காது.

ஆனால் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்பதே நாட்டு மக்களின் ஒரே விருப்பம் என்பதையே தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. பொதுஜன ஐக்கிய முன்னணியும் கூட பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டுமென்றே தேர்தலில் போட்டியிட்டது. பேச்சுவார்த்தையோ போர் நிறுத்தமோ கூடாது என்ற சிஹல உறுமய என்ற கட்சியை மக்கள் நிராகரித்துவிட்டனர்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்று அவர்களுடன் தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் தமிழ்மக்களிடம் தமிழ் கூட்டமைபு விடுத்த கோரிக்கையை ஏற்று தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

இனியும் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கு காலத்தைக் கடத்தினால் ''பழைய குருடி கதவைத்திறடி'' என்ற கதையாகவே இழுத்தடிக்கப்படும். எந்தப் பிரச்சினையில் காலம் தாழ்த்தினாலும் இனப்பிரச்சினைக்கு பேச்சுநடத்துவதை ரணில் அரசுகாலம் தாழ்த்தக்கூடாது.

எஸ்.எம்.ஜி






# சமுதாய உணர்வு, ஒற்றுமை அதில்தான் மலையக விடிவு

நாளைய மலையகத்துக்கு நல்ல ஒரு திட்டம் தேவை. நேற்றுவரை நடந்தவை எல்லாம் கெட்ட கனவுகளாகட்டும். நாளை முதல் நடைபெறவிருக்கும் விடயங்கள் அத்தனையும் நல்லவையாக அமைய வேண்டும். தவறு செய்வது மனிதனின் இயல்பு. ஆனால் அவற்றை எல்லாம் மன்னித்து ஏற்றுக் கொள்வது கடவுளின் தன்மையை விட உயர்ந்தது.

எல்லோரும் எதிர்பார்த்த தேர்தல் முடிந்து விட்டது. ஆடிய ஆட்டம் என்ன? ஓடிய ஓட்டம் என்ன? எல்லாமே ஓய்ந்து விட்டன. மலையக வரலாற்றில் முன் எப்போதும் ஏற்பட்டிராத தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுவிட்டன.

மலையகத்தில் கறைபடிந்த ஓர் அத்தியாயத்தை ஏற்படுத்தியவர்களும் நம்மவர்கள் தான். ஆனால் அவற்றை மூடி மறைப்பதற்கு அரச பலத்தை உபயோகித்து நம்மவர்கள் மீதே சாணி தெளித்தது தான் சற்று வேதனை.

இப்பொழுது மலையகம் எதை விரும்புகின்றது? அமைதியும் சமாதானமும் நிறைந்த ஒரு நிம்மதியான வாழ்வையே விரும்புகின்றது. ஐக்கியம் தேவை. ஒற்றுமை தேவை. ஒன்றுபட்ட சமுதாய உணர்வு தேவை. இதனை வலியுறுத்தியே மலையக மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

மக்களின் இந்த தீர்ப்பை மலையகத் தலைவர்கள் உதாசீனப்படுத்தவும் கூடாது. அசட்டையாக இருந்து விடவும் கூடாது. வெற்றி பெற்றவர்கள் இறுமாப்புடன் இருக்கவும் கூடாது. தோல்வி அடைந்தவர்கள் துவண்டு விடவும் கூடாது.

நேற்று வந்தார் இன்றிருப்பார், நாளை போவார் என்பதல்ல எமது நிலை. காலம் காலமாக பரம்பரை பரம்பரையாக வாழ வேண்டியவர்கள். மலையகம் எமது சொந்த மண். இந்த மண்ணில் நாம் உரிமையுடன் வாழ வேண்டும். ஏனைய சமூகத்தவர்களுக்கு இணையாகவும் சமமாகவும் வாழ வேண்டும். பின்தங்கிய மலையகம் என்ற பதம் இனிமேல் உச்சரிக்கப்படவே கூடாது என்பது தான் எல்லோரினதும் ஆவலும் ஆசையும்.

எப்போதுமே இல்லாத வகையில் இம்முறை தேர்தல் அலை படு வேகமாகவே வீசியது. புத்திஜீவிகள், மாணவர் அமைப்புகள், தோட்ட உத்தியோகத்தர்கள், ஆசிரியர் அமைப்புகள், சமூகசேவை தொண்டர் நிறுவனங்கள் என பல மட்டத்திலும் இம்முறை ஆர்வமுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தமது பங்களிப்பை பலரும் வெளிக்காட்டினர். இன்னும் சிலர் எதிரும் புதிருமாக செயல்பட்டனர்.

என்றாலும் மலையகத்தில் ஒரு மாற்றம் தேவை அதற்கு அடித்தளம் இடப்பட வேண்டும் என்பதே அநேகமானவர்களின் எதிர்பார்ப்புகளாகவும் குறிக்கோளாகவும் இருந்தன.

இதை மலையகத் தலைவர்கள் இப்போதாவது சிந்திக்க வேண்டும். அரசியலில் நிரந்தரமான நண்பர்களும் இல்லை. நிரந்தரமான எதிரிகளும் இல்லை.

இருபெரும் அரசியல் கட்சிகளும் தேர்தல் காலங்களில் ஒன்றையொன்று வெற்றி

**மலையகக் கண்ணோட்டம்**

**இரா. புத்திரசிகாமணி**

கொள்ள மட்டுமல்ல அழித்து ஒழித்து விடவும் முயன்றன. பெறுமதிமிக்க பல உயிர்களும் பலியாகின. பல கோடி ரூபா பெறுமதியான வாகனங்களையும், வீடுகளையும் உடைமைகளையும் நாசமாக்கினர்.

இன்று நடைபெறுவது என்ன! எல்லோராலும் விமர்சிக்கப்பட்டவர், கேலி செய்யப்பட்டவர், தகுதியற்றவர் தலைமைத்துவம் இல்லாதவர் என்றெல்லாம் நையாண்டி செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க அமோக வெற்றி பெற்று பிரதமராகி விட்டார்.

ஏசியவர்களையும், பேசியவர்களையும், தூற்றியவர்களையும், துன்பப்படுத்தியவர்களையும் அழைத்து ரணில் தற்போது பேசுகின்றார். பெருந்தன்மையுடன் வரவேற்கின்றார். நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த எல்லோரும் ஒன்றுபடுவோம் என நேசக்கரம் நீட்டுகின்றார். ஏன் நாட்டையும் சமூகத்தையும் காக்க.

ஏன் இந்த நிலை மலையகத்திலும் ஏற்படக் கூடாது. நிச்சயமாக முடியும். குறை இல்லாதவர்களும் பிழை விடாதவர்களும் மனிதர்களே அல்லர். தவறு செய்வது மனித இயல்பு.

எனவே கடந்த கால கசப்புணர்வுகளை எல்லாம் தூரத்தூக்கி எறிந்து விட்டு, மலையகத்தில் ஒன்றுபட்ட, ஐக்கியப்பட்ட அணியை உருவாக்க வேண்டும். பெரிய சங்கம், சில்லரைச் சங்கம், குட்டிச் சங்கம் என உதாசீனப்படுத்தக் கூடாது. இவர்கள் என்ன எங்களை அழைப்பது? என வீம்பு பேசக் கூடாது. புரிந்துணர்வுகளுடனும், விட்டுக் கொடுப்புகளுடனும் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்.

என் வீட்டு திருமணமா நான் வீடு வீடாக சென்று வெற்றிலை வைக்க என்று கூறாமலும், தெருவில் நின்று சொல்வது போல் பேப்பரில் போட்டு விட்டால் நாம் போவதா? என்று ஏட்டிக்குப் போட்டியாகப் பேசியே இந்த மலையகத்தை குட்டிச்சுவராக்கி விட்டார்கள்.

இந்த நிலைமாற வேண்டும். எல்லோரும் சமுதாய உணர்வுடன் ஒன்றுபடுங்கள். அங்கேதான் பிறக்கும் மலையகத்தின் விடிவு.

## மஸ்கெலியாவில் சிகிச்சை முகாம்

புறக்கோட்டை 306 — B லயன்ஸ் கழகம் மஸ்கெலியா சென். ஜோசப் மகா வித்தியாலயத்தில் இலவச மருத்துவ சிகிச்சை முகாமை நடத்தியது. இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்முகாமில் 2500க்கும் அதிகமானோர் கலந்துகொண்டார்கள்.

கண் பார்வை குறைபாடுள்ள சுமார் 1500 பேருக்கு தமிழகத்திலிருந்து வந்திருந்த கண்வைத்திய நிபுணர் எஸ்.நடராஜன் பரிசோதனைகளை நடத்தினார். 600க்கும் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு மருந்தும் வழங்கப்பட்டது.

இவர்களுக்கு நீரிழிவு நோய் தொடர்பாக விவரணப் படத்துடன் கூடிய விளக்கமளிக்கப்பட்டது. பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டிருந்த ஏனையோருக்கு பரிசோதனையின் பின்னர் மருந்து வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட மருந்து வகைகளின் பெறுமதி சுமார் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா ஆகும்.

மேலும் மாணவர்கள் மத்தியில் ''சிறுவர் துஷ்பிரயோகம்'' ''போதைவஸ்துவால் ஏற்படும் தீமைகள்'' ஆகிய தலைப்புக்களில் கட்டுரைப் போட்டியும் சமாதானத்தை வலியுறுத்தும் சித்திரப்போட்டியும் நடத்தப்பட்டு பரிசுகளும் சான்றிதழ்களும் லயன்ஸ் கழகத்தால் வழங்கப்பட்டன.

## சம்பள உயர்வு வாக்குறுதி வெறும் தேர்தல் குண்டா?

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தலின் முன் அறிவித்தது போல் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு வழங்கப்படுமா? அல்லது இதுவும் ஒரு தேர்தல் குண்டா? என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு ஒருவாரத்தில் ஜனாதிபதி தோட்ட உட்கட்டமைப்பு விவகாரம் தொடர்பாக தனது ஆலோசகராக முன்னாள் எம்.பி. சதாசிவத்தை நியமித்தார். பல்வேறு வாக்குறுதிகளையும் அள்ளி, அள்ளி வீசினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு சில தொழிற்சங்கங்கள் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தமே தடையாக இருக்கின்றது. இத்தடையை உடைத்தெறிந்து தோட்டத் தொழிலாளர்களுக்கு எப்படியாவது சம்பள உயர்வு வழங்க வேண்டும். இதனை விரிவாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தயாரிக்கும்படி தனது செயலாளர் பாலபட்டபெந்தியின் தலைமையில் மூவர் குழு ஒன்றையும் அமைத்தார்.

தேர்தல் அன்று அதாவது கடந்த ஐந்தாம் திகதி இலங்கை வானொலி காலைச் செய்தியிலும் இதனை பெரிதாக விவரித்தனர்.

''ஜனாதிபதி செயலாளர் பாலபட்டபெந்தியின் தலைமையிலான குழுவின் அறிக்கை கிடைத்ததுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்'' என்று அந்த செய்தி அறிக்கையில் கூறப்பட்டது.

இப்பொழுது ஜனாதிபதியும் அதிகாரத்தில் இருக்கின்றார். அவரது செயலாளரும் இருக்கின்றார். அறிக்கை என்ன ஆனது? அது செயல்படுத்தப்படுமா? இல்லையேல் ஏனைய குழு அறிக்கைகள் போல் மூலையில் தூக்கிப் போடப்படுமா? ஜனாதிபதி தனது வாக்குறுதியை காப்பாற்றுவாரா? இதுவும் ஒரு தேர்தல் குண்டா! பொறுத்திருந்து பார்ப்போம். எல்லாம் ஜனாதிபதிக்கே வெளிச்சம்.

செல்வி தேன்மொழி,
த பவர் பவுண்டேசன்.

## டேஸ்ட் கடை தணிகாசலம்

தணிகாசலம் அண்ணன் வீட்டுமுன் கிடந்த பெஞ்சில் இருந்து சுடர் ஒளி பேப்பரை ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருந்தார். அப்போது கந்தசாமியும் அவனது மகள் ராசாத்தியும் வந்து கொண்டிருந்தனர். தணிகாசலத்தைக் கண்டவுடன்.

''அண்ணே வணக்கம்'' என்று கைகூப்பி வணங்கினாள் ராசாத்தி.

''யாரு நம்மராசாத்தியா, வாம்மா எப்படி நல்ல சொகமா இருக்கியா?''

''ஆ மாம் அண்ணே எல்லாமே நீங்க போட்ட பிச்சை, ஒங்க புண்ணியத்தில் நல்ல சுகம் என்றாள் ராசாத்தி.

''அது சரிம்மா, அப்பாவும் புள்ளையும் எங்க தூரம் பொயிட்டு வாரீங்களா''

''அத சொல்லத்தானே ஒங்ககிட்ட நேரா வரோம். மொத மொத ஒங்க கிட்டத்தான் சொல்லனும்னு ராசாத்தி சொல்லிச்சி''

''அப்புடி என்னப்பா விசேஷம்.''

''அண்ணே நீங்க ஏத்திவச்ச வெளக்கு என்னைக்கும் பிரகாசமா இருக்கும் தானே''

''என்னம்மா கந்தன் கூட சேர்ந்து நீயும் புதிர் போடுறா,''

''இதுல புதிர் ஒன்னும் இல்லங்க அண்ணே! அன்னைக்கு எங்க அப்பா என்ன இன்ஸ்பெக்டர் ஊட்டுக்கு வேலைக்கு அனுப்பி என் வாழ்க்கையையே நாசமாக்கிப் புட்டாரு''

''அதப் பத்தி என்னம்மா இப்ப பேசுர, இப்பத்தான் கந்தன் நல்ல மனுசன் ஆயிட்டான், கசிப்பு கந்தன் என்ற பேரும் பொயிரிச்சி, பழைய கந்தசாமியாயிட்டானே அதுக்கு சந்தோஷப்படு''

''அப்பனா இருந்தும் நான் செய்யாத கடமைய நீங்க செஞ்சீங்க''

''அப்படி என்னப்பா நான் பெரிசா செஞ்சிட்டேன்''

''என்னங்க அண்ணே அப்படி சொல்லீங்க அன்னக்கி அடிபட்டு சூடுபட்டு சின்னா பின்னப்பட்டு தனியா வந்து நின்னப்ப நீங்க தானே தெய்வம் மாதிரி கை கொடுத்தீங்க?''

''நீ என்ன ராசாத்தி பெரிய கதை எல்லாம் சொல்ற எங்கூட ஒரு தங்கச்சி இருந்த எதை செய்வனோ அத தானே செஞ்சேன்''

'அந்த இன்ஸ்பெக்டர் ஊட்டுல பட்ட அவஸ்தையிலயும் அவமானத்திலையும் ஏம் புள்ள உசிரையே மாச்சிக்க பார்த்தா''

''இங்க பாரு கந்தா திரும்ப திரும்ப அந்த அசிங்கத்தை எல்லாம் நினைவு படுத்தக் கூடாதுன்னு எத்தனை தரம் சொல்லி இருக்கேன்''


''எனக்கென்னமோங்க அண்ணே தக்க சமயத்தில் எங்க அப்பாவுக்கும் புத்திமதி சொல்லி, என்னையும் ஆறுதல்படுத்தி திரும்பவும் படிக்க தூண்டுனிங்க அது மட்டுமா திரும்ப ஸ்கூல்ல சேக்க எத்தனை தரம் பிரின்ஸ்பல் கிட்டயும், டிப்பாட்மெண்டுக்கும் அலைஞ்சி சேத்துவுட்டீங்க''

''கந்தா இங்க பாரு இதுல நான் என்னப்பா பெரிசா செஞ்சிட்டேன். ராசாத்தி நல்லா படிக்கிறபுள்ள அவ படிப்பு கெடக் கூடாதுங்க அக்கறை, மத்தது அவ நம்ப பேரை காப்பாத்துவான்னு நம்பினேன்''

''அந்த நம்பிக்கை வீண் போகலிங்க அண்ணே ஒங்க நம்பிக்கையையும் நம்ம பேரையும் ஏம் புள்ள காப்பாத்திட்டா''

''என்ன ராசாத்தி கந்தன் என்ன என்னமோ சொல்றான்.''

''அப்பா சொல்றது உண்மை தாங்க அண்ணே. நான் ஏ.எல். பரீட்சையில் நம்ப ஸ்கூல்லயே மொதலாவதா பாஸ் பண்ணியிருக்கேன்' அதை சொல்லத் தான் இங்க வந்தோம் எல்லாம் ஒங்களோட



ஆசீர்வாதம்''

''அப்படியா சங்கதி ரொம்ப சந்தோஷம் ராசாத்தி''

''நான் என்ன பெரிசா இதுல செஞ்சிட்டேன்.''

''ஒனக்கு திறமை இருக்கு கஷ்டப்பட்டு படிச்சி பாஸ் ஆயிட்ட எல்லாம் ஒன்னோட கெட்டித்தனம் தான் காரணம்.''

''அண்ணே ஒங்களோட நல்ல மனசு யாருக்கும் வராது'' விளக்கு ஒன்னு இருந்தா பத்தாது அதை அப்ப அப்ப தூண்டி விட ஒரு தூண்டு கோல் தேவை. அது மாதிரி இந்தப் பக்கத்தில நீங்க எல்லா நல்லது கெட்டதுலயும் சொந்த காரியம் மாதிரி கலந்து ஒதவி செய்றீங்க''

''நிப்பாட்டு, நிப்பாட்டு என்ன ரொம்ப பெரிய மனுசனா ஆக்கிடாத. ராசாத்திக்கு கண்ணுபடும். மொதல்ல தேங்காயும் சூடமும் கொண்டு போய் புள்ள தலையை சுத்தி அந்த புள்ளையார் கோயில்ல அடிச்சிறு'' இப்படிக் கூறியபடியே '' இந்தாம்மா ராசாத்தி இது இந்த அண்ணனோட சின்ன சந்தோஷம் என்று தன் கழுத்தில் இருந்த சங்கிலியை கழட்டி ராசாத்தியின் கழுத்தில் போட்டு விட்டார் தணிகாசலம்.

கண்களில் நீர் மல்க ராசாத்தியும் கந்தனும் தணிகாசலத்தின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு கோயிலை நோக்கி நடந்தனர்.

— இரா.சிகா

# மலையக எதிர்காலம் பத்துப் பேரின் கையில்

புதிய நாடாளுமன்றத்தில் இந்திய வம்சாவளி சமூகத்தின் பிரதிநிதிகளாக பத்துப் பேர் இடம் பெற்றுள்ளனர். நேரடியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் ஐந்து பேரும் தேசிய பட்டியல் மூலம் நியமனம் பெற்றவர்கள் ஐந்து பேருமாக இந்த பத்துப் பேரும் இந்திய வம்சா வளி பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தை அலங்கரிக்கின்றனர்.




ஆளும் ஐ.தே.க மூலம் ஆறுமுகம் தொண்டமான் பெரியசாமி சந்திரசேகரன், முத்து சிவலிங்கம், கே.வேலாயுதம் மனோ கணேசன், ஆகியோர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் தேர்தலில் தோல்வியடைந்த ஆர்.யோகராசனும், இராதா கிருஷ்ணனும் தேசியப் பட்டியல் மூலம் இணைக்கப்பட்டனர்.

இதேவேளை எதிரணி வரிசையில் முன்னாள் எம்.பி. சதாசிவத்தையும், நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிய வி.புத்திரசிகாமணியையும் பொதுஜன ஐக்கிய முன்னணி தன் பங்கிற்கு தெரிவு செய்துள்ளது. இராமலிங்கம் சந்திரசேகரனை ஜே.வி.பி நியமித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் இருந்து மட்டும் ஐந்து பேர் இருக்கின்றனர். ஊவாவில் ஒருவர், கொழும்பில் இருவர் என அவர்கள் இடம் பெற்றுள்ளனர். தமிழர்கள் செறிந்து வாழும் மற்றுமொரு மாகாணமான சப்பிரகமுவ மாகாணத்திலிருந்து மட்டும் எந்த ஒரு தமிழரும் தெரிவாகி இல்லை.

இந்த இந்திய வம்சாவளிப் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் நவரத்தினங்களாக இருந்து சிறக்கப் போகின்றார்களா அல்லது நவக்கிரகங்களாக இருந்து மலையகத்தை சீரழிக்கப் போகின்றார்களா என்பதையும் அவர்களின் செயற்பாடுகளே தீர்மானிக்கட்டும்.

ஆளும் கட்சியுடன் ஏழு பேரும் எதிர்க்கட்சியில் மூன்று பேரும் இருக்கின்றனர். எதிர்க்கட்சி என்றால் நல்லதோ, கெட்டதோ எல்லாவற்றையும் எதிர்க்கத்தான் வேண்டும் என்பதல்ல.

இவர்கள் அத்தனை பேருமே தேர்தலின் முன் தோட்டங்களை சொர்க்க புரியாக்குவோம் மலையகத்தில் இருந்து வறுமையை விரட்டுவோம், உயர்கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் ஊக்கமளிப்போம் என்று வீராப்புடன் மேடைகளில் முழங்கினார்கள்.

இப்பொழுது இந்த தலைவர்களுக்கு அந்த வாய்ப்புகள் கிட்டி உள்ளன. ஆளும் கட்சியிலோ, அல்லது எதிர்க்கட்சியிலோ இருக்கலாம். சார்ந்துள்ள கட்சிகளின் கொள்கைகள் வித்தியாசப்பட்டதாக இருக்கலாம். ஆனால் இவர்களுடைய குறிக்கோளும் நோக்கமும் ஒன்றே. மலையக தொழிலாளர்களின் உயர்வே இவர்களின் இலட்சியம். கட்சி, நிறம் என்று பேதம் பார்க்காமல் ஒன்று பட்டு செயல் பட்டால் இவர்கள் நவரத்தினங்களாக பிரகாசிப்பார்கள். இதை விட்டு சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது பதவி வழங்கி விட்டார்கள், செஞ்சோற்றுக்கடன் கழிக்க வேண்டும் என்று ஒருவர் மீது மற்றவர் சேற்றை வாரி இறைக்கவும், விமர்சிக்கவும் தலைப்பட்டார்களேயானால், இவர்கள் நாடாளுமன்றம் சென்று மலையகத் தமிழர்களின் சீரழிவுக்கு வழி வகுத்தவர்களாகவே கருதப்படுவர் என்பது மட்டும் உறுதி.

## மனோ எம்.பி. யின் கோரிக்கை - நியாயமானதே

கொழும்பு மாவட்ட எம்.பியும் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் தமிழர்களின் பிரச்சினை தீர்வுக்கு பலமான முக்கூட்டணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கு, மலையகம், மேல்மாகாணம் என்பவற்றின் தலைமைகள் இணைந்து இந்த முக்கூட்டணியை உள்ளத் தூய்மையுடன் அமைக்க முன் வரவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

மலையகத்திற்கு மலையக தலைமைகள் தலைமை வகிக்கின்றன. அதே போன்று வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு தமிழ் கூட்டமைப்பு தலைமை வகிக்கின்றது. இது வரை காலமும் அநாதரவாக்கப்பட்டிருந்த மேல் மாகாணத் தமிழர்கள் தமக்கென ஒரு தலைமை வேண்டும் என்பதை அங்கீகரித்து விட்டனர். எனவே இதனை அனைத்துத் தமிழ் தலைமைகளும் திறந்த மனதுடன் அங்கீகரிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

எனவே இலங்கையில் வாழும் எல்லாத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் , மொழி,மத, கலாசார,பாரம்பரியம் , தனிமனித சுதந்திரம் என்பனவற்றைப் பெறவும் அதனைப் பாதுகாக்கவும் உறுதியான ஒரு வேலைத்திட்டம் அவசியம். எனவே விட்டுக் கொடுப்புகளுடனும் பெருந்தன்மையுடனும்,பரஸ்பர புரிந்துணர்வுடனும் இத்திட்டம் உருவாக்கப்படவேண்டும். அதற்கு அடித்தளமாக உறுதியான ஒரு முக்கூட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் எனவும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

மனோகணேசனின் இந்தக் கூற்றும் அபிப்பிராயமும் ,வரவேற்கத்தக்கவையே தமிழ் தலைமைகள் இதனை ஏற்குமா?

## தமிழாசிரியர் நியமனத்தில் தேவை அவதானம் பெற்றோர் நலன் விரும்பிகள் கோரிக்கை

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளின் அவல நிலை மாறுமா? தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் மொழி படிப்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. இந்து சமயம் படிப்பிக்க தகுதியான ஆசிரியர்கள் இல்லை. ஆசிரியர் பற்றாக் குறை இப்பிரதேச தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை பெரிதும் பாதித்துள்ளது.

முன்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மூன்று மாதத்துக்கு ஒரு முறை மலையக பிரதேசங்களில் உள்ள தமிழ்க் கல்விப் பணிப்பாளர்களையும், கல்வி அதிகாரிகளையும், சிரேஷ்ட அதிபர்களையும் அழைத்து தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக விவரம் அறிந்து, கல்வி அமைச்சருடன் பேசி ஓரளவு தீர்வு கண்டு வந்தார். ஆனால் இப்பொழுது இது நடைபெறுவதில்லை.

தமிழ் கல்விப் பணிப்பாளர்களும், கல்வி அதிகாரிகளும் ,கல்வி அமைச்சின் உயரதிகாரி களிடமும், அமைச்சின் செயலாளர்களிடமும் எத்தனை பேச்சு வார்த்தைகளை நடத்தினாலும் அது புறக்குடத்தில் ஊற்றிய நீராகி விடுகின்றது. இதனால் எந்த விதமான நன்மையும் ஏற்படுவதில்லை என பிரதேச கல்விப் பணிப்பாளர்களும் அதிபர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன் ஜனாதிபதி சகல மாகாண மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பளார்கள் ,வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அனைவரையும் அழைத்துக் கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் திணைக்கள அதிகாரி களுடன் கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இந்தப் பேச்சு வார்த்தை ஜனாதிபதி மாளிகையிலேயே நடைபெற்றது.

எல்லா மாகாணங்களைப் பற்றியும் கேட்டறிந்த ஜனாதிபதி எக்காரணம் கொண்டும் சிங்களப் பாடசாலைகளுக்குப் புதிய நியமனங்களை வழங்க முடியாது என்று கூறினார். அதேவேளை சப்பிரகமுவ மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை ஏற்றுக் கொண்டதோடு இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டும் 500 தமிழ் ஆசிரியர்களை நியமிக்க விசேட உத்தரவை வழங்கினார். இந்த அறிவித்தல் அரச ஊடகங்களிலும் தேசியப் பத்திரிகைகளிலும் வெளியாகின.

ஆனால் இன்று வரை எந்த ஒரு நியமனமும் இடம் பெறவில்லை. இந்த அறிவித்தலுக்கு முன் சில பாடசாலைகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டபோதும் தமிழ் பாடசாலைகளுக்கு எந்த விதமான பிரயோசனமும் ஏற்படவில்லை.

தமிழ் பாடசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் போது தமிழ் மொழி — இந்து சமயம் என்பனவற்றில் சித்தி அடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

அரசாங்கம் சமயக் கல்வி கட்டாயம் என்கிறது. இதனை நடைமுறைப்படுத்த தமிழ் பாடசாலைகளுக்கு ஆசிரியர் தெரிவின் போது, இந்து சமய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமானும் சந்திரசேகரனும் இரத்தினபுரி மாவட்ட தமிழ் பாடசாலைகளின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயல்பட்டார்களேயானால் இப்பிரதேச தமிழ் பெற்றோர்களும் மாணவர்களும் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

இரா. சிவராஜா—காவத்தை

## இலட்சியப்பணிகள் தொடரும் தடைப்பட்ட வேலைகள் மீண்டும்.

— அமைச்சர் சந்திரசேகரன்.

தடைப்பட்ட இலட்சியப் பணிகள் தொடரும். இடைநிறுத்தி வைக்கப்பட்ட பல வேலைத் திட்டங்கள் மீண்டும் நடைமுறைப் படுத்தப்படும் என தோட்ட உட்கட்டமைப்பு, சமூகநல அபிவிருத்தி அமைச்சர் பெரியசாமி சந்திர சேகரன் குறிப்பிட்டுள்ளார். இப்பொழுது அவருக்கு இந்த வாய்ப்புகிட்டியுள்ளது. எந்தக் குறிக்கோளுடன் அரசுடன் இணைந்தாரோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. தன்னை நம்பியவர்களை ஏமாற்றவில்லை என்ற உயர்ந்த கொள்கையுடனேயே அவர் தனது அமைச்சுப் பொறுப்புகளையும் துச்சமாக தூக்கி எறிந்துவிட்டு வெளியேறினார்.

முத்து சிவலிங்கம், விவசாயம், கால் நடை அபிவிருத்தி பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் தோட்டப்புறங்களில் தரிசாக இருக்கும் காணிகள் தோட்டப்புற இளைஞர்களிடம் ஒப்படைக்கப் பட்டு, கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளை அமைக்க முடியும். இதேவேளை கால்நடை வளர்ப்பு, பாற்பண்ணை திட்டங்களையும் மலையகத்தில் உருவாக்கமுடியும்.

மலையகப் பிரதேச சுவாத்தியம் , சுற்றாடல் என்பன இவற்றிற்கு மிகவும் ஏற்றவையாகவே இருக்கின்றன. மேலும் தேவையான மூலவளங்களும் மலையகத்தில் நிறையவே உண்டு. இவற்றை எப்படியும் பயன்படுத்தி மலையகத்தில் வேலை வாய்ப்புக் களையும், வருமான அதிகரிப்பையும் ஏற்படுத்தலாம்.

இம்மூன்று தலைவர்களும் தமக்கு கிடைத்துள்ள இந்த அரிய வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உறுதியான ஒரு வறுமை ஒழிப்புத்திட்டம் உருவாக்கப்பட்டு அதனை தாமதமின்றி செயல் படுத்தவேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தேர்தல் காலங்களில் மலையகத்தில் நடைபெற்ற பல்வேறு தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

இந்நிலையில் இம்மூன்று அமைச்சர்களும் திட்டமிட்டுச் செயல்பட்டால் மலையக அபிவிருத்தியில் இவர்களின் இலட்சியப்பயணம் வெற்றிபெறும் என்பது உறுதி.

## குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள்

# விலை உயர்வு, தட்டுப்பாடுகளை நீக்க உடனடி நடவடிக்கை தேவை!

### யாழ்ப்பாணம் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், டிச.16

குடநாட்டில் என்றுமில்லாதவாறு உயந்துள்ள பாவனைப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவும், எரிபொருளுக்கு நிலவும் கடும் தட்டுப்பாட்டை நீக்கவும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்.அரச அதிபர், வடபிராந்திய இராணுவத் தளபதி ஆகியோருக்கு யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் இவ்வாறு வேண்டுகோள் கடிதம் அனுப்பி இருக்கிறது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

கடந்த 5 ஆண்டுகளாகவே விலை உயர்வுகளும், அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடும் முற்றாக இல்லாதொழிக்கப்படாமல் தொடர்கின்றன.

சம்மந்தப்பட்டவர்கள் பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என்று கூறி வருகின்றனர். ஆனால் அந்தப் பொருள்கள் சாதாரண மக்களால் வாங்க முடியாத விலைகளிலேயே விற்கப்படுகின்றன. மேலும் சில பொருள்கள் நுகர்வோரை வந்தடைவதே இல்லை.

குடாநாட்டில் மின்சார விநியோகம் மோசமாகச் சீர்குலைந்துள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்த மாதம் பொதுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கா.பொ.த சாதாரண தர மாணவர்கள் மின்வெட்டால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

எரிபொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கூடக் கிடைப்பதில்லை. ஆனால் கறுப்புச் சந்தையில் மட்டும் தாராளமாக அதிக விலையில் விற்கப்படுகின்றன. இதே சமயம் உயரதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, எரிபொருள் கைவசமிருக்கிறது.

ஆனால் பாதுகாப்புப் படையினர் அதனை விநியோகிக்க அனுமதிக்கிறார்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தில் உண்மை எதுவாக இருந்தாலும், சாதாரண மக்கள் இதனால் சிரமப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எரிபொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு முறையிலாவது மக்களுக்கு விநியோகிக்க வழி செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் முறையில் திருத்தம் வேண்டும்

### மங்கள சமரவீர

கொழும்பு, டிச.16

நாட்டின் ஒருமைப்பாட்டிற்குப் பங்கம் ஏற்படாதவகையில் அரசின் முயற்சிகளுக்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்கும் என்று பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் மங்கள சமரவீர செய்தியாளர் மாநாட்டில் தெரித்தார்.

எந்தவொரு நல்ல முயற்சிக்கும் நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். தேர்தல் முறையில் திருத்தம் செய்ய வேண்டும். ஒவ்வொரு வருடமும் தேர்தல் நடத்த முடியாது என்று அவர் சொன்னார்.

## பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு தென்பகுதி வர்த்தகர் நிதி உதவி!

யாழ்ப்பாணம், டிச.16

பளைப் பகுதியில் கடந்த ஆண்டு ஓட்டோ ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பலியான இளம் தம்பதிகளின் குழந்தைகளின் நலன் கருதி மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றை வழங்க தென்பகுதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் முன் வந்திருக்கிறார்.

கொழும்பு சிலிங்கோ நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியும் வர்த்தகப் பிரமுகருமான தேசமான்ய லலித் கொத்தலாவல என்பவரே இந்தப் பிள்ளைகளுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கவுள்ளார்.

ஆனையிறவுச் சண்டை நடைபெற்ற சமயம் யாழ்.ஆஸ்பத்திரியில் பிரசவித்த சிசுவுடன் மேற்படி இளம் தம்பதிகள் ஓட்டோ ஒன்றில் பளைப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அச்சமயம் அப் பகுதியில் வைத்து ஓட்டோ மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

அதனால் அந்த ஆண் சிசு உயிர் பிழைக்க அதன் தந்தையாரான கு.சிறீதரனும் தாய் சிறீதரன் லோகேஸ்வரியும் உயிரிழந்தனர். சம்பவம் வாசகர்கள் அறிந்ததே.

இந்தச் சம்பவத்தில் பெற்றோரை இழந்து அநாதைகளாகிய நான்கு குழந்தைகளுக்கு உதவி பெற்றுக் கொடுக்கும் நிதியம் ஒன்றை உதயன் அனுசரணையுடன் யாழ்.றோட்டரிக் கழகம் ஆரம்பித்திருந்தது.

இதனைக் கேள்வியுற்றே இந்தக் குழந்தைகளுக்கு மாதாந்தக் கொடுப்பனவை வழங்க தேசமான்ய லலித் கொத்தலாவல முன்வந்துள்ளார்.

இந்தப் பணம் குழந்தைகளைப் பராமரிக்கும் கு.இராமச்சந்திரன் என்பவருக்கு காசோலையாக அனுப்பப்பட்டிருக்கிறது.


லீலா

தமிழுலகின் முதன் முதல் ஒரே ஒரு சித்திரக் கலண்டராக வெளிவந்தது லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்.

சகல சமூகத்தவரும் விரும்பி பாவிப்பது லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரே. இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் திருநாட்கள், மாணவ சமுதாயத்துக்கு ஏற்ற பொது அறிவு, விஞ்ஞானம், மேல் நாட்டு கீழ் நாட்டு அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், உலக அதிசயங்கள் ஆகிய அனைத்தும் லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரில் அடங்கி யுள்ளன.

லீலா டயறி வகைகள் கண்கவர் அழகிய வர்ணப் பிளாஸ்டிக் கவருடன் வெளி வந்துவிட்டன.

இது வரை ஆடர் அனுப்பாத வியாபார அன்பர்கள், வாடிக்கையாளர்கள் உடன் எழுதி பெற்றுக் கொள்ளவும்.

லீலா பிறஸ் (பிறைவேட்) லிமிட்டட்

182, மெசஞ்சர் வீதி, கொழும்பு – 12

தொலைபேசி: 325930, 334332

# டைஸனை வென்றபின் லெனொக்ஸ் லூயிஸ் ஓய்வு

மைக் டைஸனைத் தோற்கடித்த பின்னர் குத்துச்சண்டைப் போட்டிகளிலிருந்து விலகப் போவதாக உலக அதிபார குத்துச்சண்டைச் சாம்பியன் லெனொக்ஸ் லூயிஸ் கூறினார்.



லூயிஸ்

கடந்த வாரம் இணையத்தளமொன்றிற்கு அளித்த பேட்டி யொன்றிலேயே இவ்வாறு கூறினார் லூயிஸ்.

லூயிஸ், மைக் டைஸன் இருவருக்கும் இடையிலான குத்துச் சண்டைப் போட்டி எதிர் வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முஹம்மது அலி உலகச் சாம்பியனாக இருந்தபோது ஜோ ஃபிரேஷியர், ஜோர்ஜ் போர்மன் ஆகியோரும் உயர்நிலையில் இருந்தனர்.

எனது காலத்தில் நானும், மைக் டைஸன், இவாண்டர் ஹொலி பீல்ட் ஆகியோரும் முன்னணியில் உள்ளோம். ஹொலிபீல்ட்டுடன் நான் இருதடவை மோதிவிட்டேன். ஆகவே டைஸனுடனான போட்டி மட்டுமே இன்னும் பாக்கியுள்ளது.

டைஸனைத் தோற்கடித்துவிட்டால் அதன் பின் இளையவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக் கொள்வேன். இவ்வாறு லெனொக்ஸ் லூயிஸ் கூறினார்.

கடந்த மாதம் ஹாசிம் ரஹ்மானுடனான போட்டியில் வெற்றியீட்டினார் லூயிஸ். அதன் மூலம் உலக குத்துச் சண்டைக் கவுன்சில் சர்வதேச குத்துச் சண்டை சம்மேளனம் ஆகியவற்றின் சாம்பின் பட்டங்களை மீண்டும் சுவீகரித்துக் கொண்டார் லூயிஸ்.

அதன்பின் அவர் டைஸனுடன் மோதுவதற்கு ஆவலாக உள்ளார்.

டைஸன் எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி றே மார்க்கர் என்பவருடன் மோதவிருந்தார். இப்போட்டியின் போது டைஸன் காயமடைந்தால் ஏப்ரல் மாதம் தன்னுடன் போட்டியிட முடியாது போய்விடும் எனக் கருதினார் லூயிஸ். இதனால் றேமார்க்கருடனான மோதலை ரத்துச் செய்யக் கோரி வழக்குத் தொடர்ந்தார்.

அதன்பின் மைக் டைஸனும் லூயிஸின் கோரிக்கைக்கு இணங்கினார்.

உலக குத்துச் சண்டை வரலாற்றில் மிகவும் பரபரப்பான போட்டியாக டைஸன் -லூயிஸ் போட்டி கருதப்படுகிறது.

உலகக் கிண்ண கால்பந்தாட்டம்:

# 2006 ஆம் ஆண்டு போட்டிக்கு அனுசரணையாளர் தயார்

2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் ஜேர்மனியில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்காக டொச் டெலிகொம் நிறுவனம் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்துடன் (ஃபீஃபா) பங்காளராக இணைந்துள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தமொன்று அண்மையில் ஜேர்மனியின் பொன் நகரில் கையெழுத்திடப்பட்டது. இது ஃபீஃபா தலைவர் ஸெப் பிளாட்டரும் டொச் டெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொன் சோமரும் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.



பிளாட்டர்

2006 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான பிரதான அனுசரணையாளராக இந்நிறுவனம் விளங்கும். அத்துடன் போட்டிகளுக்கான தொலைத்தொடர்பு கட்டமைப்புகளுக்கும் இந்நிறுவனம் பொறுப்பேற்கும்.

"2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டிகள் ஆரம்பமாகும் முன்பே 2006 ஆம் ஆண்டு போட்டிகளுக்கு அனுசரணையாளரைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. ஜேர்மனி மிகச் சிறப்பாக உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்தும். அங்கு எவ்வித பிரச்சினையும் இருக்காது. இவ்வாறு ஸெப் பிளாட்டர் இவ்வைபவத்தின் பேசும் போது கூறினார்.

இதே வேளை அடுத்த வருட உலகக் கிண்ணப் போட்டிகளும் மகிழ்சிகரமாக இருக்கும். ஏனெனில் பலமான அணிகள் எதற்குமே சொந்த நாட்டில் விளையாடும் வாய்ப்பு இல்லை. இவ்வாறு பிளாட்டர் கூறினார்.

ஃபிஃபா தலைவருக்கான தேர்தல் எதிர்வரும் மே மாதம் சியோலில் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் தாம் மீண்டும் போட்டியிட விரும்புவதாகவும் பிளாட்டர் கூறினார்.

அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ள ஃபீஃபா நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின் இது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படுமெனவும் அவர் கூறினார்.

# அக்தார் நிரபராதி

## மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் கூறுகிறது

சொஹைப் அக்தாரின் பந்துவீச்சு விவகாரத்தில் புதிய திருப்பமொன்று ஏற்பட்டுள்ளது.

அக்தார் வேண்டுமென்றே பந்தை வீசி எறியவில்லை என்று மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழக நிபுணர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கடந்த வாரம் இதனைத் தெரிவித்தது.

"அவரது கைமூட்டுக்களில் இயற்கையாகவே குறைபாடு உண்டு. அதனாலேயே அவர் பந்தை வீசி எறிவதுபோல் தோன்றுகிறது என்பதை மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்வாறே கடந்த மே மாதமும் இப்பல்கலைக்கழகம் தெரிவித்திருந்தது.

இவ்வாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இயக்குநர் முனவ்வர் ரானா கடந்த வாரம் கூறினார்.

இவ்வறிக்கை மூலம் சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் நியாயமானதும் சிநேகபூர்வமானதுமான முறையில் இப்பிரச்சினையை அணுகலாம் என பாக். கிரிக்கெட் சபை கருதுகிறது.

இப்பிரச்சினை உறுதியாக முடிவடைந்துவிட்டது. சொஹைப் அக்தார் இனி மேல் அழுத்தங்களுக்கு உட்படாமல் பந்துவீச வேண்டும் என்பதே எமது நோக்கம்.

அண்மையில் நடைபெற்ற சார்ஜா கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் அக்தார் பந்து வீசிய காட்சிகளின் வீடியோ பதிவுகளைப் பார்வையிட்ட பின்பு மேற்கு அவுஸ்திரேலியப் பல்லைக்கழகம் தான் முன்னர் கண்டறிந்த விடயங்களை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது." இவ்வாறு முனவ்வர் ரானா கூறினார்.

அக்தாரின் பந்துவீச்சை ஆராய்வதற்காக முன்னாள் மேற்கிந்திய வீரர் மைக்கல் ஹோல்டிங்கை ஐ.சி.சி நியமித்துள்ளது.

இந்த ஆய்வின்போது அக்தாரின் பந்து வீச்சில் குறைகாணப்பட்டால் அவர் ஒரு வருடகாலம் பந்துவீசுவதற்குத் தடை விதிக்கப்படுவார்.

இதைத் தவிர்ப்பதற்காகவே மேற்கு அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தின் உதவியை பாக் கிரிக்கெட் சபை நாடியது.

பிரபல வேகப்பந்துவீச்சு பயிற்றுநர் டெரல் பொஸ்டர் இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். இவர் அண்மையில் சிட்னியில் அக்தாரைச் சந்தித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அக்தார் சிட்னியிலுள்ள கழகமொன்றின் சார்பில் போட்டிகளில் பங்குபற்றி வருகிறார்.

'நான் ஊக்கமருந்து பாவிக்கவில்லை'

# உயரப் பாய்தல் வீரர் எகிறிக் குதிக்கிறார்

தாம் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்துகளைப் பாவித்ததாகக் கூறப்படுவதை கியூப வீரர் ஜாவியர் சோடா மேயர் வன்மையாக மறுத்துள்ளார்.

"'நன்ட்ரோலின்' எனும் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை சோடா மேயர் பாவித்துள்ளார்." இவ்வாறு சர்வதேச மெய்வல்லுநர் சங்கங்களின் சம்மேளனம் நவம்பர் 25 ஆம் திகதி அறிவித்தது.

"இது முற்றிலும் பொய். இப்பொருட்களை நான் ஒருபோதுமே பாவிக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் யாராவது ஒருவர் மீது ஊக்கமருந்து குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. அனைவரும் நாம் நிரபராதிகள் என்கின்றனர். ஆனால் எனது விடயத்தில் நான் நிரபராதி என்பது உறுதி. இப்பொருட்கள் எனது உடலில் ஒருபோதும் சேர்ந்திருக்காது"

இவ்வாறு கடந்த திங்களன்று சோடாமேயர் கூறினார்.



சோடாமேயர்

உயரம் பாய்தலில் உலக சாதனையாளராகத் திகழ்பவர் இவர். 2.45 மீற்றர் பாய்ந்து அவர் சாதனை படைத்தார். கியூபாவின் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டு நட்சத்திரங்களில் ஒருவர் சோடா மேயர்.

"கடந்த வருடம் 18 தடவை என் மீது சோதனைகள் நடத்தப்பட்டன. கடற்கரை விடுதியொன்றில் விடு முறையைக் கழித்த காலத்திலும் ஒரு சோதனை நடத்தப்பட்டது. விளையாட்டுகள் பல மகிழ்ச்சிகளைத் தருக்கின்ற போதிலும் சில துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்துள்ளது." இவ்வாறு சோடாமேயர் கூறினார்.

1992ஆம் ஆண்டில் பார்சிலோனா ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றார்.

கொகாய்ன் எனும் போதைப்பொருளைப் பாவித்தார் என்ற குற்றச்சாட்டின் காரணமாக அவருக்கு 1999 இல் இரு வருட தடை விதிக்கப்பட்டது. எனினும் சிட்னி ஒலிம்பிக்கில் பங்குபற்ற அவர் அனுமதிக்கப்பட்டார். இப்போட்டிகளில் அவர் வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

34 வயதான இவர் கணுக்கால் காயம் காரணமாக கடந்த ஒக்டோபரில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

# இயன் தோர்ப்பிற்கு சிறந்த வீரர் விருது

இவ்வாண்டின் சிறந்த அவுஸ்திரேலிய விளையாட்டு நட்சத்திரமாக நீச்சல் சாம்பியன் இயன் தோர்ப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஒலிம்பிக் பத்திரிகையாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் ஆகியோரினால் இவ்விருதுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



இயன் தோர்ப்

இயன்தோர்ப் தற்போதைய உலக நீச்சல் சாம்பியனும் ஒலிம்பிக் சாம்பியனும் ஆவார்.

இவ்வருடம் ஜப்பானில் நடைபெற்ற உலக நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகளில் 6 தங்கப்பதக்கங்களை வென்றார்.

ஆனால் 1950 60களில் இருந்ததுபோல் சிறப்பான நிலையில் அவுஸ்திரேலிய விளையாட்டுத்துறை தற்போது இல்லை என்கிறார் இயன்தோர்ப்.

ஆஸி. விளையாட்டுத்துறைப் பொற்காலத்தில் ஒரு அங்கத்தவராக இருப்பது பற்றி அவரிடம் கருத்துக் கேட்கப்பட்டது. அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிரிக்கெட், ரக்பி யூனியன், ரக்பி லீக் ஆகியவற்றில் அவுஸ்திரேலியாவே உலக சாம்பியனாகத் திகழ்கிறது.

ஆனால் கடந்த சில வாரங்களில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் அவுஸ்திரேலியா பல தோல்விகளைத் தழுவியது.

டேவிஸ் கிண்ண டென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பிரான்ஸிடம் தோற்றது அவுஸ்திரேலியா. உலகக் கிண்ண தகுதிகாண் கால்பந்தாட்டத்தில் உருகுவே அணியிடம் தோல்வியுற்றது.

அண்மையில் நடைபெற்ற நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரில் ஆஸி அணியால் வெற்றி பெற முடியவில்லை. இதனால் அவுஸ்திரேலிய விளையாட்டு அபிமானிகள் பலர் ஏமாற்றமடைந்துள்ளர்.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# ஒலிம்பிக் கொடியில் கறுப்பு வளையம் வேண்டாம்

ஒலிம்பிக் கொடியில் கறுப்பு வளையம் அவசியமில்லை. அதை நீக்கிவிடுங்கள். இவ்வாறு செனகல் நாட்டுப் பனிச்சறுக்கு வீரர் லாமைன் குவேய் கூறியுள்ளார்.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவருக்கு அனுப்பிய பகிரங்க கடித மொன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளளார் குவேய்.

சோல்ட் லேக் சிட்டியில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக கோரப்படும் தகைமைகள் குறித்து இவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக கோரப்படும் தகைமைகள் காரணமாக ஆபிரிக்க நாடுகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. விரைவில் வெள்ளையர்கள் மட்டுமே இப்போட்டிகளில் பங்குபற்றும் நிலை உருவாகிவிடும். அதனால் ஒலிம்பிக் கொடியிலுள்ள கறுப்பு வளையத்தை நீக்கிவிட வேண்டும். இவ்வாறு லாமைன் குவேய் தெரிவித்துள்ளார்.

சில போட்டிகளில் பங்குபற்றும் நாடுகளின் எண்ணிக்கை கடந்த 10 வருடங்களில் 23 ஆல் குறைந்துள்ளது. போட்டியாளர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இந்நிலைமை மாற வேண்டும். இவ்வாறு லாமைன் கூறியுள்ளார்.

1992, 1994ஆம் ஆண்டு ஒலிம்பிக் விழாக்களில் பனிச் சறுக்குப் போட்டியில் பங்குபற்றிய ஒரேயொரு கறுப்பின வீரர் இவர்.

தற்போது செனகல் பனிச்சறுக்குச் சம்மேளனத்தின் தலைவராக இவர் உள்ளார். அச்சம்மேளனத்தின் ஒரேயொரு அங்கத்தவரும் இவரே.

# யாழ் வர்த்தகர் ஒருவருக்கு முதல் முறை விருது; கௌரவம்

நாடெங்கும் உள்ள வர்த்தகர்களில் யாழ் வர்த்தகர் ஒருவரும் சிறந்த வர்த்தகராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்தச் சிறப்பைப் பெற்று யாழ்ப்பாண மண்ணுக்கும் மக்களுக்கும் பெருமை தேடித் தந்திருப்பவர் கே. பாலசுப்பிரமணியம் ஆவார்.

யாழ் திருநெல்வேலியில் உள்ள பயோ ரெக் இன்டர் நாஷனல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் இவர்.

இலங்கை முழுவதிலும் உள்ள துணிவுமிக்க தொழில் ஆர்வலர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு விருதுகளை வழங்கி அவர்களைக் கௌரவித்து வருகிறது சேம்பர் ஒவ் கொமேர்ஸ் என்ற வர்த்தக அமைப்பு.

கடந்த ஆறு ஆண்டுகளாக சேம்பர் ஒவ் கொமேர்ஸ் இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறது.

2000 ஆம் ஆண்டுக்கான துணிவு மிக்க தொழில் ஆர்வலர்களில் ஒருவராக பாலசுப்பிரமணியத்தைத் தெரிவு செய்திருக்கிறது.


சான்றிதழ் பெறுகிறார்


விருதுடன் பாலசுப்பிரமணியம்

விருது வழங்கி கௌரவிக்கும் வைபவம் கடந்த அக்டோபர் 28 ஆம் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்தது.

பாலசுப்பிரமணியம் வெண்கல விருதும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவருடைய நிறுவனம் இப்போது முக்கியமாக திரவ குளுகோஸ் மற்றும் 'யீஸ்ட்' என்ற நொதிப் பொருள் ஆகியவற்றைத் தயாரித்து வருகிறது.

இதில் உள்ள விசேஷம் மேற்கூறிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு உள்ளூரிலேயே கிடைக்கும் மரவள்ளி, சோளம் முதலானவற்றைப் பயன்படுத்துவதாகும்.

மூலப் பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்கு செய்யப்படுவதில்லை.

இப்படி உள்ளூர் மூலப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதால் உள்ளூரில் அவற்றின் உற்பத்தி அதிகமாகிறது. உற்பத்தியாளர்கள் நல்ல வருமானம் பெறுகிறார்கள். இறக்குமதிச் செலவு மிச்சமாகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே சேம்பர் ஒவ் கொமேர்ஸ் நாடு முழுவதிலும் உள்ள துணிச்சல் மிக்க தொழில் ஆர்வலரை இனம் கண்டு அவர்களின் ஆராய்ச்சிகளுக்கும் தொழில் துணிவுக்கும் மதிப்பளிப்பதற்காக அவர்களுக்கு விருது வழங்கிப் பாராட்டுத் தெரிவித்து வருகிறது.

அவற்றை வடக்கிலிருந்து முதன் முறையாகத் தட்டிக் கொண்ட பாலசுப்பிரமணியத்தால் குடாநாடே பெருமையடைகிறது.






களுவாஞ்சிக்குடி சமூகநலன் அமைப்பினரால் சமீபத்தில் 13 பேரக்கு முச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இது தொடர்பான நிகழ்வில் அமைப்பின் இணைப்பாளர் சற்குணேஸ்வரன் உரை நிகழ்த்துவதையும் முச்சக்கர வண்டிகளைப் பெற்றவர்களையும் படங்களில் காணலாம். மேடையில் சுவாமி தந்திர தேவாவும் காணப்படுகிறார்.

களுவாஞ்சிக்குடி நிருபர்

# அரசியல் அம்பலம்



## சந்திரனை மூடிய மேகங்கள்

வடமுனையின் முன்னாள் முதல்வரின் எதிரணி சந்திரனை இம்முறையும் கரு மேகங்கள் மறைத்து விட்டதால் பெரிதும் வாடிப் போய்விட்டாராம். தேர்தலின் போது கூட்டமைப்புக்காக, பெரிதும் பாடுபட்டவர் ,வெற்றி நிச்சயம் என உறுதியுடன் செயற்பட்டாராம். பாவம் திடீரென திரண்ட மழை மேகம் சந்திரனை சூழ்ந்து கொண்டதாம். அடங்கிப்போயிருந்த சித்தன் கூட வந்து விட்டார். என்னை பட்டியலிலாவது அனுப்பலாமே என பலரை தூது விட்டாராம். என்ன செய்வது எல்லோரும் ஆளை விட்டால் போதும் என நழுவிவிட்டனரே என நண்பர்களிடம் சொல்லுகிறாராம் அந்த சந்திரன்.

## சித்தம் தடுமாறும் சிவத்தார்

ஆட்சி மாறினாலும் அம்மணி இருப்பார், எனது பதவியும் இருக்கும் என்று மார்தட்டிய நுவரெலியா, சிவத்தாரும் மன்றுக்கு வந்துவிட்டார். ஆனால் அமைச்சர் நம்ம ஆள் இல்லையே என்ன செய்யப் போகின்றீர்கள் என்று நண்பர்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்களாம். ''நீங்க பதவியை பற்றிப் பேசுறீங்க .ஆனால் நான் படுற பாடு உனக்கு த்தெரியுமா?'' என அலுத்துக்கொண்டாராம் சிவத்தார்.

## மங்களத்தார் மேளமானார்

கம்பளை ரத்னாவும், கதிர்காம மகிந்தனும் மாத்தளை மங்களத்தார் மீது சீறிப் பாய்கின்றார்களாம். ஏன் தெரியுமா? இவர்கள் இருவருமே வாய்விட்டுக் கேட்டவர்கள் எதிரணி தலைமையை, ஒருவருக்கு தெரியாமல் மற்றவர் தமது சகாக்களுக்கு கடிதங்களையும் அனுப்பி வைத்தனராம். தனக்கு கிடைக்காதது இவர்களுக்கும் கிடைக்கக் கூடாது என்பதால் அனுராகம் பாடும் தம்பி மங்களத்தாரை கைக்குள் போட்டுக் கொண்டு ''கொலிபப்பா,'' தான் சரியானவர் எனத் தூபம் போட்டு விட்டாராம்.

கட்சி முடிவெடுக்கும் முன்பே மங்களத்தார் பேனாக்காரர்களிடமும் இதனைப் பறை சாற்றி விட்டாராம். இதையே அதிகார அம்மணியும் உத்தியோகப் பூர்வமாக அறிவித்து விட்டாராம். பேட்டி என்ற பேச்சுக்கே இடம் இல்லை என ''வீட்டோ'' அதிகாரத்தைப் பிரயோகித்து விட்டாராம். இதற்கெல்லாம் காரணம் மங்களத்தாரே என இரு முனைத்தாக்கத்திற்கு ஆளாகி உள்ளாராம் மாத்தளை மங்களத்தார்.

## மீசையில் மண் ஒட்டவில்லை

ஜொலிபப்பா பச்சை வயலுக்குள் பசுமை தேடி போகப் போகிறார் என்பது நீல மேகத்துக்குள் பேரிடி ஓசையைக் கிளப்பிவிட்டதாம். ஜொலிபப்பாவை பின்பற்றி மேலும் சில தம்பதிகளும் செல்ல விருந்தனராம். நீல மேகத்தில் இருந்து மழைத்துளிகள் பச்சை வயலுக்குள் விழுந்தால் அங்கே பசுமை பெருகிவிடும் என்பதால் இதை தடுக்கவே ஜொலிபப்பாவுக்கு இந்த நாற்காலி ,இது பப்பாவுக்கு பதவிமட்டுமல்ல ஒரு கால்கட்டு, இதை பெரிசு படுத்த வேண்டாம் என அதிகார அம்மணி தன்னிடம் கூறியதாக கதிர்காம மகிந்தன் நண்பர்களிடம் கூறி ஆறுதல் அடைகின்றாராம்.

## முந்திரிக்கொட்டையானவர்

வடமுனை கூட்டுக்குள் இப்போதே புகைச்சல் கிளம்பிவிட்டதாம். காரணம் அந்த கூட்டமைப்புக்குள் உள்ள ஒருவர்தானாம்.

தேர்தலின் பின் பிரதமர் எல்லா எம்.பி. மாருக்கும் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்து தன்னை வந்து சந்திக்கும் படி அழைப்பு விடுத்தார். வடமுனை கூட்டு சகோதரர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேசி சேர்ந்து போய் பார்க்கலாம் என்று சந்திப்பை ஒத்திவைத்துவிட்டனராம்.

ஆனால் அவர் மட்டும் விழுந்தடித்துக் கொண்டு பிரதமரைச் சந்தித்து அட்டாங்க நமஸ்காரம் செய்துள்ளாராம். அதோடு நின்று விடவில்லை. கூட்டின் கோரிக்கை என பிரதமரிடம் எதையோ சமர்ப்பித்து விட்டு அதை பேனாக்காரர்களுக்கும் கொடுத்து விட்டாராம். இவரின் முந்திரிக் கொட்டைத்தனமே கூட்டுக்குள் கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டதாம்.


Accredited by National Gem & Jewellery Authority

ARUL Jewellers

3, Sea Street, Colombo 11. T.P. 436337



**மணமகள் தேவை**

கனடாவில் படித்து பட்டம் பெற்று கணனித்துறையில் (Computer) கனடா அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் 36 வயது நிரம்பிய மணமகனுக்கு உறவினர் மணமகள் தேடுகின்றார்கள். மணமகள் 20—30 வயதிற்கு உட்பட்ட அழகான பண்புடையவராக இருத்தல் நன்று. படத்துடன் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

C/O, சுடர் ஒளி,
36/2, பிரட்ரிகா ரோட், கொழும்பு −06.


இப்பத்திரிகை கொழும்பு −06, வெள்ளவத்தை பெரக்கும்பா பிளேஸ் 1/5ஆம் இலக்கத்தில் உள்ள [illegible] 2001 டிசம்பர் 16ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.